# ஊடகங்களால் ஊரைப் பற்றும் நெருப்பு



மெய்யப்பன் பதிப்பகம்

தமிழண்ணல்

# ஊடகங்களால்
# ஊரைப் பற்றும் நெருப்பு

## தமிழண்ணல்

மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : மே, 2008

திருவள்ளுவர் ஆண்டு : 2039

உரிமை : ஆசிரியர்க்கு

**விலை : ரூ. 40.00**

மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் :252

நினைவில் வாழும்
நிறுவனர்

**ச. மெய்யப்பனார்**



டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச் செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, **சிதம்பரம்** - 608001. **✆:230069**

31, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை** - 600108. **✆:25361039**

6, சிவஞானம் தெரு, **தி. நகர், சென்னை** - 600017. **✆:24357832**

110, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை** - 625001. **✆:2622853**

15, ராஜ வீதி, **கோயமுத்தூர்** - 641001. **✆:2397155**

78, செரி சாலை, **சேலம்**-636001. **✆:3207722**

28, நந்தி கோயில் தெரு, **திருச்சி** - 620002. **✆:2706450**

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

# முகவுரை

இந் நூலில் 21 கட்டுரைகள் உள. இவை யாவும், பல சமயங்களில் பல நோக்கில் எழுதப்பட்டவை. தினமணியில் வெளிவந்தவையும் உள.

'ஊடகங்களால்' (தொலைக்காட்சி, திரைப்படம், கதைகள், வார, மாத, நாளிதழ்கள், வானொலிப் பண்பலைகள்) தமிழும் கெடுக்கப் படுகிறது; தமிழர் பண்பாடும் சிதைக்கப்படுகிறது. ஊரைப் பற்றும் நெருப்பு, தன்வீட்டைப் பற்றாதா? கேடு விளைவிப்பார் சிந்திக்க வேண்டும்.

குடியாட்சி பற்றியும் சில கட்டுரைகள் உள. ஆட்சித் திறன், தேர்ந் தெடுக்கப் படுவார் கடமை, மக்களாட்சி மக்களுக்காகவே என்பது - எனப் பல கோணங்களில் சிந்திக்கப் படுகின்றது.

நமது மேடை நாகரிகம், சின்னச் சின்ன நடைமுறை நாகரிகம் சிலரையேனும் சிந்திக்க வைக்கும்.

'நாய்களை அவமானப் படுத்தாதீர்' என்பது, ஓர் உருவகக் கட்டுரை. இதுபோல, 'போடா களிமண்ணு' எனத் திட்டுவது தவறு. அக்களிமண் பலவற்றுக்குப் பயன்படுகிறது.

'போடா தடிமாடு' எனத் திட்டுவதும் தவறு. அது மிகக் கடினமாக, நமக்காக உழைக்கின்றது. மனிதர் சிலர் அவற்றைவிட மோசமாக உள்ளனர்.

தமிழ் ஈழத்தவர் நம் இனத்தவர்; உறவினர். ஒரே மொழி பேசும் ஒரே பண்பாட்டினர்; அம் மக்களுக்காக நாம் கண்ணீர் விடுவதே தவறாகுமா?

நடுவணரசு, இவ்வாறே,

1. தமிழர்களைக் கொல்வதற்குச் சிங்கள வெறியர்களுக்குப் படைப் பயிற்சி தந்தால் 2. நம் இன மக்களைக் கொல்ல ஆயுதங்களை உதவினால் 3. சிங்கள வெறித் தலைவர்களுக்குச் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்று அரவணைத்தால் 4. நமக்கே உரிய கச்சத் தீவை மீட்டுத் தராவிட்டால் 5.சுண்டைக்காய்ச் சிங்கள அரசு, தொடர்ந்து நம் தமிழ மீனவர்களைத் துன்புறுத்துவதையும், சித்திரவதை செய்து கொல்வதையும், அடிக்கடி சிறைப் பிடிப்பதையும் தடுத்து நிறுத்தாவிட்டால், தமிழன் இவை எல்லாவற்றையும் பார்த்து இளித்தவாயனாக இருப்பானா? 'புலி இங்கேயும் புறப்பட்டுவிட்டால்' அதற்கு நடுவணரசே பொறுப் பேற்க வேண்டும். எழுத்துக் கலையை வளர்க்க வழிகாட்டும் கட்டுரைகளும், நடைமுறை வாழ்வியலை விளக்கி மக்களை நற்குடிமக்களாக்க முனையும் கட்டுரைகளும் பயனுடையன.

தமிழண்ணல்

'ஏரகம்'
சதாசிவ நகர்,
மதுரை - 625 020

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | பொது நலத்தில் 'குப்பை' கொட்டும் இந்தியன் | 7 |
| 2. | ஊடகங்களால் ஊரைப் பற்றும் நெருப்பு | 12 |
| 3. | வீட்டுக்கு நெருப்பு வைக்கும் வேலை | 17 |
| 4. | சின்னச் சின்ன நடைமுறை நாகரிகம் | 21 |
| 5. | நமது மேடை நாகரிகம் | 24 |
| 6. | நாய்களை அவமானப் படுத்தாதீர் | 28 |
| 7. | ஒரு பண்பாட்டின் சின்னம் | 31 |
| 8. | வாடிக்கையாளர்களுக்காக நாம் | 34 |
| 9. | முன்னேறும் காலம் எது? | 38 |
| 10. | மக்களாட்சியில் மக்களின் பங்கு | 42 |
| 11. | அரசும் அதிகாரமும் மக்களுக்காகவே | 47 |

| | | |
|---|---|---|
| 12. | தொகுதிப் பணியே முதற்கடமை | 52 |
| 13. | இனியும் 'மூடுமந்திரம்' வேண்டுமா? | 56 |
| 14. | இரட்டை வாழ்வு | 61 |
| 15. | சிங்கப்பூரில் தமிழ்க் கொத்தடிமைகள் | 65 |
| 16. | புலி வருகிறது புலி | 70 |
| 17. | கட்டுரை இலக்கியம் | 75 |
| 18. | எழுதும் கலையில் முயற்சியும் பயிற்சியும் | 81 |
| 19. | வாசிக்கும் நற்பழக்கம் | 87 |
| 20. | வழிபாட்டுப் பாடல்கள் | 95 |
| 21. | நடைமுறை வாழ்வியல் | 109 |

# 1. பொது நலத்தில் 'குப்பை' கொட்டும் இந்தியன்

விடுதலைப் பொன் விழா ஆண்டில், நம்மை நாமே சோதித்துக் கொள்ள வேண்டிய சிந்தனைகள் பலவுள. நம் நாட்டில் பொதுநலம் தள்ளாடுகிறது. தன்னலம் தலைவிரித்தாடுகிறது. மேலே ஏற்படும் குறைகளுக்கு, கீழேயுள்ள 'விரிசல்கள்' தான் காரணமென்பதை மறந்து விடுகிறோம். 'நோய் நாடி, நோய் முதல் நாடி' அதைக் களையும் வழி நாட வேண்டாமா?

பண்பட்டு வளர்ந்த தமிழில் சொற்கள் ஆழமும் நுட்பமும் நயமும் உடையன. கையாள்வது வேறு; கையாடுவது வேறு. நாம் பொதுநலத்தைக் கையாள்வதற்குப் பதிலாகக் கையாடுவதிலேயே கருத்தாக இருக்கிறோம். இந்தியன் ஒவ்வொருவனுக்கும் இது ஒரு மனப் பழக்கமாயிருந்தது. இப் பழக்கத்தை எளிதிற் போக்க முடியாது. நோய் மிக முற்றிவிட்ட நேரம் இது. அறுவைச் சிகிச்சைக்கு நோயாளி ஆயத்தமாகிவிட்ட சமயம் இது!

வீடு முழுவதும் துப்புரவாகக் கூட்டி, சுற்றுச் சுவர் மேலே நின்று பலரும் நடக்கும் தெருவில், 'வீட்டுக் குப்பையை'ச் சுதந்தரமாகக் கொட்டும் இந்தியர்களை வீட்டுக்கு வீடு பார்க்கலாம். குழந்தைகளைத் தெருவில் எதிர்த்த வீட்டு ஓரமாக மலசலம் கழிக்க வைத்துச் சிறுவயது முதலே பழக்கப் படுத்துகிறோம். நகராட்சிகள் பொதுக் கழிப்பிடம் கட்டி வைத்தால், நுழை வாயிலையே பாழ்படுத்தி, அதை யாரும் பயன்படுத்த முடியாதபடி சில நாட்களில் செய்து விடுவர். நம் நாட்டில் ஒரு கோடித் தேநீர்க் கடைகள், இரவு நேரச் சாப்பாட்டுக் கடைகள் இருக்கலாம். கழிவு நீரை இரவில் நடுத் தெருவில் கொட்டுவர்; எச்சில் இலைகள் பரந்து கிடக்கும்; குப்பைகளை அப்படியே போட்டுவிட்டுப் போய்விடுவர். யார் கேட்க முடியும்? பொதுத் தெரு - எல்லோருக்கும் உரியது - அதனால் யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்! இக் கெட்ட பழக்கங்களில் மட்டும்

இந்தியர்களாகிய நம்மிடையே சாதி, சமய, மொழி, மாநில வேறுபாடுகள் எதுவும் இல்லை. அவ்வளவு ஒற்றுமை - ஒரே மாதிரிச் சீரழிவு!

வீட்டுச் சாய்க்கடையைத் தெருவில் ஓடவிட நம் மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி! அது முடியாதென்றால், அடுத்த வீட்டிற்குள் அக்கழிவு நீரைப் புகுத்துவதில் அவனுக்குள்ள தனித் திறமை உலகறிந்தது! மதுரையில் மேல மடைக் கால்வாயொன்று வையையாற்றில் சேர்கிறது. மழை நீரும், மேல மடைக் கண்மாய் பெருகினால் அவ்வெள்ள நீரும் வடிவதற்கு முன்னோர்கள் தோண்டி வைத்த கால்வாய் அது. மதுரை பால் பண்ணைக் கழிவு நீர் அதில் விடப்பட்டது. அரசு சார்ந்த துறையாயினும் இந்தியப் பழக்கம் போகுமா? பொதுக் கால்வாயில் கழிவுநீரை அவர்கள் விடவே, இன்று அதன் அக்கம் பக்கமுள்ள வீடுகளின் கழிவுநீர்கள், மலக்கழிவுகள் எல்லாம் அதில விடப் பட்டு, இன்று அக்கால்வாய் திறந்த ஒரு சாய்க்கடையாய் மாறி, வையைப் புனிதப் பேராற்றில் கலக்கிறது! எல்லோரும் சேர்ந்து செய்யும் 'பொதுநலத் தொண்டு' இது!

திருக்கோயில்களைப் பாருங்கள்! அவையும் பொது இடங்கள் அல்லவா? தூய்மை காக்கப்பட வேண்டிய கோயிலில், இறைவன் முன்பாகவே தம் பழக்கத்தைக் காட்ட யாரும் தயங்குவதில்லை.

1943இல் வெளிவந்த 'குமரிமலரில்', சக்கரவர்த்தி இராசகோபாலாச் சாரியார், 'சிறிய விஷயங்கள்' என்று ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் மறுமை, பேரின்பம், வீடுபேறு, ஆன்ம பரிசுத்தம் என்று மிகப் பெரிய விஷயங்களையே பேசிக் கொண்டிருக்கும் நாம், மிகச் சிறிய விஷயங்கள் என்று சொல்லி, அன்றாட வாழ்க்கையில் செய்யும் கேடுகளைக் குறிப்பிட்டு, 'இவற்றில் அல்லவா முதலில் கவனம் செலுத்த வேண்டும்' என்று விளக்கியிருக்கிறார்.

நாம் அந்த உலகத்திற்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம், இந்த உலகை நாசப்படுத்திவிட்டு! இது தகுமோ? தரப்பட்ட இந்த உலகில் நல்வாழ்வு வாழ்ந்து காட்டுவதல்லவா நம் கடமை? இதை ஏன் யாரும் சுட்டிக் காட்டுவதில்லை; பரப்புவதில்லை. ஐயகோ! 'ஆன்மிகம் என்றாலே பரலோகத்திற்கு வழிகாட்டுவது என்றல்லவா மாற்றிவிட்டார்கள்!' பாவம் செய்யப் பரிகாரம் சொல்வது என்றல்லவா நம்புகிறார்கள்!

நம்மிடமிருக்கும் 'சுவரொட்டிப் பழக்கம்' மிகக் கொடுமையானது; கீழ்த்தரமானது! தனியார் சுவர்களில் அனுமதியின்றி ஒட்டலாமா? ஒரு பால் விற்பனையகம்; அதன் எண் கண்ணிற்படவில்லை. ஓர் ஊருக்குள் நுழைகிறோம்; அந்த ஊர்ப் பெயர்ப் பலகையில் சுவரொட்டி, நாடெங்கும் ஊரெங்கும் இந்த நிலைதான்.

நம்மிடமிருக்கும் 'ஒலிபெருக்கிப் பழக்கமும்' "கர்ணகடூரமானது'. தன் வீட்டில் திருமணம், சடங்கு, காதுகுத்து என்றால், நான்கு திசைகளிலும் ஒலி பெருக்கிகளை ஒரு கிலோ மீட்டர்வரை வைத்து, ஒலி அளவை எவ்வளவு முடியுமோ கூட்டி வைத்து, சுற்றுப்புறத்திலுள்ள அனைவரையும் தூங்க விடாமல், ஓய்வுகொள்ள விடாமல், பேச விடாமல் இரவும் பகலும் இரண்டு நாட்களுக்குக் காதடைக்கச் செய்யத் தனிமனிதனுக்கு - சங்கத்துக்கு என்ன உரிமை இருக்கிறது? திருவிழா என்றால் கேட்கவே வேண்டாம்!

கோயிலிலிருந்து ஒலிபரப்பாகும் பாடல், இசைகூட, அதன் எல்லைக்குள் கேட்குமாறு அடக்கமாய் அமைவதே நலம்! தெருவில் கேட்க, ஊரில் கேட்க வைப்பது என்ன நியாயம்? பள்ளிவாசலிலிருந்து, தொழுகை ஓதும் ஓசை ஊரெல்லாம் கேட்பது உட்பட, அனைத்துச் சமய ஒலிபரப்புகட்கும் ஒரு வரையறை வேண்டும்தானே? ஒரு திருவிழா வருகின்றதென்றால், நம் உடல் நடுங்குகிறது. இது நாடா? அல்லது காடா? இவற்றுக்கு அனுமதி கொடுக்கும் காவல் நிலையங்கள், பொதுமக்கள் படும் அவதிகளை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

முன்னேறிய நாடுகளில் தனிக் கம்பங்கள், தனியான ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே வணிகர், கட்சிகள் முதலாக அனைவரும் சுவரொட்டிகள் - விளக்கொளி மின் விளம்பரங்கள் ஒட்டவோ, வைக்கவோ செய்கின்றனர். காரின் பின்புறம் சிறு ஒட்டுத்தாள் விளம்பரங்களைக் காரின் உரிமையாளர் ஒட்டிவைத்து, தாம் இன்ன கட்சி, இன்னாருக்கு வாக்களிக்கப் போகிறார் என்பதை ஊருக்குத் தெரியப் படுத்துகிறார். இங்குச் சுவரொட்டி ஒட்டுபவர்கள் நம் நெற்றியையும் முதுகையும் விட்டு விட்டார்கள்! அதனால் பிழைத்தோம்! வெளிநாடுகளில் ஆயிரம் பேர் கூடியுள்ள, நூறு கடைகளுள்ள 'மால்' எனப்படும் வணிக வளாகங்களாயினும் சிறு ஒலி கூட வெளியே கேட்பதில்லை.

நம் இந்திய மனப் பழக்கம் மாற, சுற்றுச்சூழல் காப்புத்துறையினர் ஆவன செய்யவேண்டும். ஆலைப் புகை, தொழிற்சாலைக் கழிவுநீர், நச்சுக்

காற்று இவற்றாலேற்படும் ‘சுற்றுச்சூழல் கேடு’ பற்றியே இவர்கள் பேசுவர்; எழுதுவர்; பிரச்சாரம் செய்வர். மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்களுக்கும் இதுதான் வேலை. அதாவது மிகப் பெரிய ‘விஷயங்களில்’ மட்டுமே இவர்கள் கருத்துச் செலுத்துவர்; சின்ன ‘விஷயங்களில்’ தலையிட மாட்டார்கள்!

இம் ‘மனப்பழக்கம்’ தடித்ததால்தான், இன்று நம் அரசியலே தட்டுக் கெட்டு ஊழல் மயமாகிவிட்டது. அரசுப் பணம் பொதுப் பணம்தானே. அதனால்தான் கண்டபடி செலவழிக்கின்றனர்; எடுத்துக் கொள்கின்றனர். தம் பணமென்றால் அவ்வாறு செய்வார்களா? தன் வீட்டை அலங்கரித்துக் கொண்டிருக்கும் இந்தியன், ஊரை நாசப்படுத்துகிறான். தன் குடும்பம் பரம்பரை பரம்பரைக்கு நல்வாழ்வு வாழ வழிவகுப்பதாக எண்ணிக்கொண்டு, தன் சொத்து சுகங்களையே கருதும் இந்தியன், பொது நலனில் கவலையின்றிக் கை வைக்கின்றான். சுருங்கச் சொன்னால், மேல் மட்டத்தில் தனி இந்தியன் இனிப் பெருக்க இடமின்றிக் கொழுத்துப் போயிருக்கிறான்; நாடு நலிந்து அழிந்து கொண்டிருக்கிறது!

தனியார் பேருந்தையும் அரசுப் பொதுப் பேருந்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். முன்னதில் சம்பளம் குறைவு; பின்னதில் சம்பளமும் கூடுதல்; சலுகைகளும் மிகுதி. ஆனால், தனியார் பேருந்து சுத்தமாய்ப் பளபளவென்று இருக்கிறது. அரசுப் பொதுப் பேருந்து, அழுக்கடைந்து, குப்பை துப்புரவாகாமல், சிதைந்து கையைக் காலைக் கிழித்து விடும் போல் இருக்கிறது.

தனியார் பள்ளிகளில் ஆசிரியர் சம்பளம் குறைவு. ஆனால், அவை எவ்வளவு சீராய் - செல்வ வளத்தோடு நடக்கின்றன. அரசுசார் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகளில் ஆசிரியர் சம்பளம் மிகக் கூடுதல், சலுகைகளோ அதிகம், உரிமைகளும் கூடுதல். ஆனால், ‘பொதுப்’ பள்ளிகள்தானே. கேட்பார் யார்! நாளும் மோசமாகும் நிலைமைகளையே காண்கிறோம்!

தனியார் அலுவலகம் ஒன்றிற்கும், அரசுப் பொது அலுவலகம் ஒன்றிற்கும் போனால் கூட, இவ்வேறுபாட்டை நன்கு பார்க்கலாம். நம் நாட்டுக் ‘கூட்டுறவுச் சங்கங்களும்’, இந்தப் ‘பொது’ என்ற கருத்தால், எளிதில் ஊழல் வயப்படக் காணலாம். இது எதைக் காட்டுகிறது? இந்தியன் பொதுநலத்தில் நேற்றும், இன்றும் ‘குப்பை’ கொட்டப் பழகிப் போனான்; தன் வீட்டை, தன்னைச் சுத்தமாக வைத்துக்கொள்ள மட்டுமே எண்ணுகிறான். இவனைத் திருத்துவது எப்படி? இந்த மனப் பழக்கத்தை மாற்றுவது எவ்வாறு?

அரசுகடுஞ்சட்டங்கள் இயற்ற வேண்டும். அமெரிக்கா முதல் சிங்கப்பூர் வரை சிறு காகிதத்தைக் கிழித்தால் கூடத் தம் சட்டைப் பையில் வைத்துக் கொள்கின்றனர்; தெருவில் வீச அஞ்சுகின்றனர். அவ்வளவு கடுஞ் சட்டங்கள் அங்குள!

தொண்டு நிறுவனங்கள் இப்பணிகளைத் 'தத்தெடுத்து'த் தெருவை, ஊரை, பேருந்து நிலையத்தை, பள்ளியை, பொது இடங்களைச் சீர்படுத்த, தூய்மைப்படுத்த உதவ வேண்டும். மக்கள் தூய்மையாக வாழ்வதன் சிறப்பை நாடெங்கும் பரப்ப வேண்டும்.

சுற்றுப் புறச் சூழல் காப்பு மையங்கள், மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்கள் தம் பணியை இச் சிறிய தீமைகளையும் அகற்றுவதிலிருந்து தான் தொடங்க வேண்டும்.

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பாடமாக எழுதிப் போதித்து, நடந்து பழக அவர்களையே இப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். இம்மனப் பழக்கம் சிறு வயது முதல் அடியொடு மாற்றப்பட்டால்தான், பொதுப்பணத்தில் கூசாமல் கை வைக்கும் ஊழலும்கூட ஒழியும். எனவே, இது தலைமை யமைச்சர் வரை, கவனத்திற் கொள்ள வேண்டிய அடிப்படைச் செய்தியே தவிர 'சின்ன விஷயம்' அன்று.

(தினமணி : 22 - 9- 1997)

# 2. ஊடகங்களால்
# ஊரைப் பற்றும் நெருப்பு

'ஈங்கிவற்றில் ஏதும் இலார் ஏடெழுதிப் பிழைக்க வந்தார்' என்று, வேறு தகுதி இல்லாததால், பத்திரிகைத் துறைக்கு வந்து, அதையும் கெடுத்துத் தாமும் கெடுபவர்களைச் சாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.

கதைகள் எழுதும் படைப்பாளிகளும், திரைப்படக் கதை வசனம் பாடல் எழுதுபவர்களும், சின்னத் திரையில் இதுபோன்ற படைப்பாளிகளும், ஊழல் அரசியல்வாதிகளும் இன்று 'ஈங்கு அறிவு, திறமை, கலைநுட்பம் என எதுவும் இல்லாதாராய் இந்தத் துறைகளுக்கு வந்து நாட்டைக் கெடுத்து வருகின்றனர்!" எல்லோரும் அவ்வாறு என்று கூறவில்லை. கெடுதல் வழி செல்வார் பெரும்பான்மையினராகவே, ஒட்டு மொத்தமும் சேறாகிப் போனது.

சமூக மனமே மரத்துப் போய்க் கொண்டிருக்கிறது. அரக்கர் கூட்டமாய், விலங்குத் தொகுதியாய், நாய் நரி பேயாய் உலவுபவர்களை எங்கெங்கும் பார்க்கிறோம். நல்லவர் கூட்டம் மிகமிகச் சுருங்கி வருகிறது. ஊழல் சக்கரவர்த்திகள் தலைநிமிர்ந்து நடக்கிறார்கள்; எந்தத் தவறு செய்தும் தப்பிக்க முடியும் என்பதே, இன்று பத்திரிகையில் வரும் செய்திகள் கற்றுத்தரும் பாடம்.

ஒரு பரம்பரைக்கு முன்னால் திருடர்களை, ஒழுக்கமற்றவர்களை, கொள்ளையர்களை, தீயவர்களை அடையாளம் காண முடிந்தது. இன்று ஆள் வாட்ட சாட்டமாக இருக்கிறான்; அவன் செய்த தவறோ மிகக் கொடியதாக இருக்கிறது. முன்பு ஒருவன் தோற்றமே அவன் தீயவன் என அடையாளம் காட்டியது. இன்று தீயவன் உடையும் நடையும் நல்லவரிலும் 'மேம்படப்' பளிச்சென்று உளது. நாமும் தவறுகள் செய்து இப்படி 'ராசநடை' போட்டாலென்ன, என்று மற்றவர்களுக்குத் தோன்றுகிறது!

இந்த அளவு சமுதாயமே சாய்க்கடையாய் மாற, திரிந்த பால்போல மனித மனம் முற்றிலும் கெட்டுக் குட்டிச்சுவராகிக் கொண்டு செல்ல, எத்தனையோ காரணங்கள் உள. அவற்றுள் தலைமையானவை சினிமா, தொலைக்காட்சி, கதைகள், அரசியல் எனும் இவை நான்குமாகும்.

இவை பெரும்பான்மையானவருக்குப் போய்ச் சேருகின்றன. திரும்பத் திரும்பப் பார்த்துப் பார்த்து மனம் அவ் வண்ணமாகுமாறு இவை பாடம் புகட்டியபடி உள்ளன.

போதை மருந்து பற்றிய கதையைப் படித்து பொழுது, அது பற்றிய முழு விவரமும் தெரியாத ஒருவருக்குத் தெரியவந்தது. புதிதாகப் பழக்கங் கொள்ள அது ஒரு கையேடு போல் விளங்கியது.

அண்மையில் தமிழாக்கம் செய்யப்பட்ட ஒரு இந்தி நாடகம். திருடர் கூட்டம் ஒரு வீட்டினுள் புகுந்து, உள்ளே இருந்தவர்களை அடித்துத் துன்புறுத்திக் கட்டி வைத்து, கத்தியைக் காட்டி மிரட்டி அனைத்தையும் எடுத்துக் கொண்டு ஓடுவதை ஒரு நேரடிக் காட்சியாக, எதிரே கண்ணாற் கண்டதுபோல் நீண்ட நேரம் காட்டியது. பார்க்கும் இளைஞனுக்குத் திருடக் கற்றுத்தருவது போல இருந்தது.

ஒரு சின்னத்திரையில் கற்பழிப்புக் காட்சி ஒன்று. ஊருக்குக் கடைசியில், மலைசூழ் பகுதியில் அப் பெண்ணை ஓட ஓட விரட்டி, சேலை கிழிய இரவிக்கை கிழிய மலை மீது கல்லில் மோதிச் சார்த்திக் கற்பழித்து, அப்பெண்ணைப் பைத்தியம் பிடிக்க வைத்ததாகச் செயல்வழிப் பயிற்சி போல - ஆங்கிலத்தில் 'டெமான்ஸ்ட்ரேஷன்' என்று கூறுவது போலத் தொடர்ந்து நடத்திக் காட்டியவிதம், 'அற்புதமாக' இருந்தது! 'தத்ருபமாகப்' படமெடுக்கிறார்களாம், இவர்கள்!

படங்களில் ஒன்று பார்க்கலாம். தீமையை, ஒழுக்கக்கேட்டை, அயோக்கியத் தனங்களை, நீண்ட நேரம் காட்டி இறுதியில் ஒன்றிரண்டு மணித்துளிகளில் தீமை தோற்றதாகக் காட்டி 'சுபம்' என்று முடிப்பார்கள். இதனால் மனத்திலே தங்குவது தீமைதான். கல்லூரி முதல்வரையே நகைச் சுவைப் பாத்திரமாக்கி, மாணவர்கள் அவரை நையாண்டி செய்து, அவர் எதிரிலேயே நாட்டியமாடவும் செய்கின்றனர். கல்லூரியில் உடன்படிக்கும் மாணவிகளைச் சீண்டுவது முதல், மேலில் விழுவது மோதுவது வரை காட்டி, அதில் காதல் மலர்ந்ததாகவும் காட்டி, முதலில் வெறுக்கும்படி நடந்தவனையே

அவள் விரும்பி விட்டாளாம் - அவனும் திருந்தி விட்டானாம் - இப்படி ஒரு திரைப்படம். வகுப்பறையிலேயே அத்துமீறல்கள்; ஒழுக்கக்கேடுகள்!

இப்படி அண்மையில் எத்தனை படங்கள்!

ஒரு மருத்துவக் கல்லூரி நாவரசு கொல்லப்பட்டதும், ஒரு மகளிர் கல்லூரி சரிகா சித்திரவதைப்பட்டு மடிந்ததும் பத்திரிகைச் செய்தி. ஆனால், நாடு முழுவதும் இந்தத் திசையில் போய்க்கொண்டிருப்பது, சமுதாயத்தை உற்றுப் பார்ப்பவர்களுக்குத் தெரியும்!

மக்கள் தகவல் பரிமாற்றத்தில் பேரிடம் வகிக்கும் துறைகள், மக்கள் மனத்தை நச்சுப்படுத்துவதை மடைமாற்றினாலன்றி, சிலர் பிடிபட்டுக் கைதாகித் தண்டிக்கப்படுவதனால் மட்டும் இக்கொடுமை முழுவதுமாய் ஒழியாது. திரைப்படக் கலைஞர்கள், இயக்குநர்கள், பாடலாசிரியர்கள் கையிலேதான், இச் சமுதாயத்தின் தலையெழுத்துப் பெரிதும் சிக்கிக் கிடக்கிறது.

பிச்சை எடுத்துக் கொண்டிருந்த ஒருவன் சிறுகடை முதலாளியாகி, குடும்பமாகி, இந்த நாட்டுச் சிறந்த குடிமகனாகின்றான். அவனுக்கு இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ஒருவர் உறவினரிலும் மேலாக உதவுகிறார்! அதைப் போன்று இவர்களால் உயர்வை நோக்கியனவாய், மானுடத்தை உயர்த்தும் கதைகளை எழுத முடிவதில்லை. காதல் தவிரக் கதையும் இல்லை; மோதல் தவிரக் காதலும் இல்லை!

இன்றைய காக்கை வலிப்பு நடனம் - அப்படி அப்படியே, பாலுறவைப் படம்பிடிப்பது போல் காட்டவும் பயன்படுகிறது.

எத்தனையோ சிறந்த நாட்டிய வகைகள் தோன்றிய நாட்டில், இந்த வலிப்பு நடனம்தான் அல்லும் பகலும்! இவை எல்லாம் பார்ப்பவர் மனத்தில் படிந்து, குருதியில் ஊறி, மரபணுக்களிலும் ஊடுருவி இன்னும் ஒரு ஐம்பதாண்டில் தெருவில் எல்லோரும் வலிப்பு வந்து, இழுத்துக்கொண்டு கிடந்தால் வியப்பதற்கில்லை.

முன்பெல்லாம் ஒரு கற்பழிப்புக் காட்சி என்றால், ஒரு மலர் கசக்கி எறியப்படுவதைக் காட்டி, நிலைகுலைந்த பெண்ணை மட்டும் காட்டி - நடந்ததை உணர்த்தாமல் உணர்த்துவார்கள். இன்று எப்படிக் கற்பழிக்கலா மென்று வழிகாட்டுவது போலவா படம் எடுப்பது? கற்பழித்து வாழ்வதிலும் ஒரு சுகமிருப்பதுபோல், பார்ப்பவர்களைத் தூண்டும்படியா பட மெடுப்பது?

ஒரு சமூகம் அழியும்; அழிந்தால் நமக்கு என்ன என்று இந்தக் கலைஞர்கள் எண்ணவே கூடாது. இதே சமூகத்தில்தான் இவர் மனைவி, சகோதரி, மகள், பேர்த்தி பரம்பரையும் உலவுகிறது; உலவப் போகிறது. இன்றில்லாவிட்டாலும், இக் கொடுமையை அப்படியே கண்ணெதிரே காட்டிப் பணம் குவித்தவன் மகள், பேர்த்தி உறவினள் இக் கதிக்கு ஆளாக நேரிடாது என்றா கருதுகிறார்கள்? சமுதாயத்திற்கு இழைக்கும் தீங்கு, தனக்குத்தானே இழைத்துக் கொள்ளும் தீங்கு என்பதை, இவர்கள் ஏனோ மறந்து விடுகிறார்கள்?

தீமையை - கொலையை - கொள்ளையை - வஞ்சகத்தை - கற்பழிப்பை என இவை போல்வனவற்றைக் கதையில் கூறாமல் இருக்க முடியாது; உண்மையே. இவற்றைத் தீமை என்றே உணருமாறு காட்ட வேண்டும்; இலைமறை காயாகக் கூறவேண்டும்; தீமை கண்டு வெட்கப்படும் பகுதிக்கு அதிக அழுத்தமிருக்க வேண்டும். தீமையையும் சமுதாய நன்மை நோக்கியதாகப் படைப்பதில்தான் திறமை இருக்கிறது. பெண் குழந்தையைப் பிறந்ததும் அழிக்கும் நாட்டில், அப்படி ஒரு குழந்தையை அழிக்கப்போகும் சமயத்தில், அது காப்பாற்றப்பட்டு, பிறகு ஒரு டாக்டராகி, தன்னை அழிக்க முற்பட்டவர்களுக்கே மருத்துவம் பார்த்து, அவர்களை வெட்கப்பட வைப்பதாகக் காட்டும்போது, அங்குப் பளிச்சிடும் மனித நேயமல்லவா உலகை வாழ்விக்கும்?

நம் படைப்புக்கலை வாழ்வின் உயர்வை நோக்கி, உன்னதத்தை நோக்கி வளர வேண்டுமே!

தற்கொலையைக் காட்டுவதை விடத் தற்கொலையை எதிர்த்துப் போராடி, இறுதியில் வெல்பவர்களைக் கற்பனை செய்ய முடியாதா? காதலில் தோற்றவள், கணவனிருக்கவும் காதலனையே நினைத்து ஏங்கிக் கரைவதையும் நிலைகுலைவதையுமே காட்டும் நீங்கள், கட்டிய கணவன் மீது அன்பை மாற்றிக் கொள்ளத் தன் மனத்துடன் போராடி, நல்ல மனைவியாகி விடுவதைச் சுவையாகச் சித்திரிக்க முடியாதா? மாணவச் சமுதாயத்திலேயே ஓர் இளைஞன் எழுச்சி கொண்டு, மாணவர்தம் ஒழுக்கக் கேடுகளை எதிர்த்து நயமாகப் போராடி, எல்லோரையும் நல்வழிக்கு மடை மாற்றி விடுவதாக ஒரு கதை புனைந்தால் ஆகாதா?

கெட்டதைச் சுவையாகப் படைக்கும் நீங்கள், நல்லதையும் சுவைபடக் கற்பிக்க முடியும் என்பதை எப்போது காட்டப் போகிறீர்கள்?

தன் தங்கைகள் மூவர், பெற்றோரில்லை என்பதால் அவர்களின் ஒரே அண்ணன், அந்த மூவரையும் கரையேற்றித் தன் காதலில் தோற்றுத் தவித்துத் தள்ளாடித் தியாகத்திலேயே ஓர் இன்பமிருப்பதை - அப்பழுக்கற்ற இன்பமிருப்பதை - கண்டு கண்டு மகிழ்வதாக எழுதினால், இச் சமுதாயம் ஓர் அங்குலம் உயருமே!

தமிழில் கதை எழுதுபவருக்குக் கொலையும் கற்பழிப்பும் தவிரக் கற்பனைக்கு வேறு சரக்கே கிடையாது!

மக்களின் மனத்திலே விலங்குகளை நீங்கள் உருவாக்குகிறீர்கள்; விடப் பாம்புகளைப் படைக்கிறீர்கள்; அரக்கர்களை வளர்க்கிறீர்கள்; கயவர்களாவதற்கு அத்தனை வழிவகைகளையும் காட்டுகிறீர்கள்...!

திரைப்படம், தொலைக்காட்சி, விறுவிறுப்பு, மஞ்சள் பத்திரிகை, மிகை நடப்பியல் கதைகள், ஊழல் அரசியல் - இவற்றால் சமுதாயத் தீமைகளையே மேலும் மேலும் நாளும் நாளும் வளர்க்கும் படைப்பாளிகளே! நாளைக்கு இந்த நச்சுக்காற்றுப் பரவலால் சமுதாயம் மட்டுமன்று, உங்கள் குடியும் குடும்பமும் கூட அழியப் போகின்றன என்பதை மறவாதீர்கள்! நீங்கள் பேரும் பணமும் கருதி, வெறி பிடித்து வைக்கும் இந்த நெருப்பு, ஊரை அழிப்பதைப் பார்த்து மகிழாதீர்கள்; நீங்களும் உங்கள் குடும்பமும் சேர்ந்து கருகப் போவதைச் சற்றே எண்ணிப் பாருங்கள்!

இன்றைய சமுதாயம், படைப்புக் கலைஞர்களுக்குத் தெரிவிக்கும் எச்சரிக்கையாக இதை எடுத்துக் கொள்வது நல்லது.

(தினமணி, 2000)

# 3. வீட்டுக்கு நெருப்பு வைக்கும் வேலை!

மேலை நாட்டு நாகரிகத்தை நமது தகவல் பரிமாற்ற ஊடகங்களும், திரைப்படங்களும், சின்னத்திரைகளும், சில வார, மாத இதழ்களும் நம் மக்களிடம் நச்சுக் கிருமிகளைப் போல் பரவ விடுகின்றன.

நம் கதை - புதின - நாடகத் திரைப்படப் படைப்பாளிகள், பெண்களை என்ன நினைக்கின்றார்கள் என்றே விளங்கவில்லை. ஒன்று, நுகர்பொருளாக்கிப் பச்சையாய்க் காட்டும் போது, துரியன் அவையில் துச்சாதனன் துகிலுரிந்ததை விட மோசமாகக் காட்டுகின்றனர். துரியனையும் துச்சாதனனையும் ஒழித்துக் கட்ட, ஒரு ‘கண்ணபரமாத்மா’ அவதாரம் எடுத்தது போல் ஒருவர் பிறந்தால் தான் இக்கொடுமை ஒழியும் போலும்! அது மட்டுமன்று. ஒரு பெண் வருகிறாள் நிற்கிறாள் பறவை போல் ஆடிப் பாடுகிறாள் என்றால், பார்ப்பவர் மனத்தில் ‘திகில்’ ஏற்படுத்த, உடனே அவளை யாராவது தொடர்வான், மிரட்டுவான். தொட்டுச்சித்திரவதை செய்வான். வேறு கதை எழுதத் தெரியாத பெரிய எழுத்தாளர்கள் பல்கிப் போயினர்.

திரைப்படப் பாடல்களோ கேட்கவே வேண்டாம். எழுதக் கை கூசுகிறது. ‘பசி எடுத்தாச்சு, பாய் விரிச்சாச்சு, முடிச்சு அவிழ்த்தாச்சு, முடிவு என்னாச்சு’ இப்படி ஆயிரம் ஆயிரம் பாடல்கள். ஐயோ, கேவலம் கேவலம்! இதற்கெல்லாம் திறமையின்மையே காரணம்.

நம் நாட்டில் மேடையேறிப் பேச, முழங்க, உணர்ச்சியூட்ட, கைதட்டு வாங்க மூன்று ‘பொருள்கள்’ அடிக்கடி பயன்படும். ஒன்று தொழிலாளர், ஏழை எளியவர், பாமரர் பற்றியது. அவர்களுக்காக அனைவரும் ஆயிரம் முறைபேசி, பல ஆயிரம் கைதட்டு வாங்கி, உணர்ச்சி கொப்பளித்தாயிற்று. என்ன ஆச்சரியம்? அந்த ஏழை இன்னும் அப்படியேதான் இருக்கின்றான். ஒருவேளை அவன் முன்னேறிவிட்டால், இவர்கள் உயிரை விட்டு உணர்ச்சி பொங்கப் பேசப்பொருள் வேண்டுமே?

ஊ-2

இரண்டு, தமிழ்மொழி. உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு; 'சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும், சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்; தமிழே தாயே உயிரே' எல்லாம் மேடையில் முழங்குவதற்கு! அதிலும் ஆயிரம் கட்சிகள். ஒருவர் முழங்குவது மற்றவர்க்குப் பிடிக்காது. 'நான்தான் முழங்குவேன்' நான்தான் தமிழ்த்தொண்டன்; என்னையன்றித் தமிழுக்கு யார் துணை; 'என் உயிர்த்தமிழை நானே வளர்ப்பேன்' இப்படி ஆயிரம் பிரிவுகள், கட்சிகள். கடைசியில் ஒருவராலும் எதுவும் பயனில்லை. ஒரு வேளை ஒன்றுபட்டுப் பாடுபட்டுத் தமிழ் வளர்ந்துவிட்டால், இவர்கள் உணர்ச்சியைக் கொட்டி முழங்கப் பொருள் வேண்டுமே? அதனால்தான், பிரிந்து நின்று முடிந்தமட்டும் ஒருவரை ஒருவர் அமிழ்த்தி, அசையவிடாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

மூன்றாவதாக, 'பெண்கள் விடுதலை. ஐயகோ! நம் மாதரசிகள் லேதான் மேடையேறி முழங்கும் போது, 'உலகமெங்கும் பெண்கள் விடுதலை பெற்றுக் கொடி கட்டிப் பறப்பதாகவும், இந்தியாவிலேதான்மகளிர் அடிமைப்பட்டு வாழ்விழந்து, அவதிப்பட்டுத் துடிப்பதாகவும் தோன்றும்! கண்ணீர் ஆறாகப் பெருகும்; நரம்புகள் முறுக்கேறும்; இந்த 'ஆணாதிக்க'ச் சமுதாயத்தைப் பிய்த்துச் சுக்கு நூறாக உதறும்போது, 'பெண்ணாதிக்கம்' கண்டு, அனைவரும் நடுநடுங்குவர்; கிடுகிடுப்பர்!

சில ஆண்டுகளுக்கு முன்னால், ஐ.நா.வின் சார்பில், உலகளாவிய 'குடும்ப தினக்' கருத்தரங்கு, தலைநகர் தில்லியில் நடந்தது. நம் நாட்டுப் பேராளர்கள் அனைவரும் நம் குடும்பங்களில் தீராத பிரச்சினைகளாக உள்ள வரதட்சிணை, குடும்ப அடிமைத்தனம், பெண்ணைக் கொடுமைப் படுத்துதல் பற்றியே கட்டுரைகள் எழுதிப் படித்தனர். வெளிநாட்டவர்களோ, 'நம் இந்தியக் குடும்ப அமைப்பின் சிறப்பைப் பாராட்டிக் கட்டுரை படித்தனர். முடிவாக 'The best family system is Indian family system' எனத் தீர்மானித்ததாகச் செய்திகள் வெளிவந்தன. உண்மையில் நம் குடும்ப அமைப்பு ஆசியக் கலாசாரம் தழுவியது. இந்தியக் குடும்ப அமைப்பு ஒப்பற்றது; இது உலக நாடுகளுக்குப் போய் வந்தவர்களுக்குத்தான் தெரியும்.

நம் குடும்ப அமைப்பில் குறைகள் இல்லை என்பதன்று. 'அவை களையப் பட வேண்டியவைதாம். 'எலித் தொந்தரவுக்காக, வீட்டுக்கு நெருப்பு வைக்கலாமா? பெண் சுதந்திரம் என்று பேசுபவர்கள், கதை எழுதுபவர்கள், படம் எடுப்பவர்கள் எல்லாம் வீட்டுக்கு நெருப்பு வைக்கிற வேலையைத்தான் செய்கிறார்கள்.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் குடும்பக் கட்டமைப்பு, அடியோடு அழிந்து வருகிறது. பாலியல் வன்முறைகளுக்கு எல்லையில்லை. அங்குப் பெண்கள் படும்பாடு பெரும்பாடு.

உயர் பள்ளிகளில் பையன்கள், மாணவியரை வகுப்பறைகளிலேயே படுத்தும்பாடு மிகமிகக் கொடுமை. தன் மாணவனைக் கற்பழிக்கும் ஆசிரியைகளும் அங்கு உண்டு. வாஷிங்டனில் என் நண்பர் கவிஞர் ஒருவர், பள்ளியிறுதி வகுப்பில் தோற்றவர்களுக்காகத் தனி வகுப்பு நடத்துகிறார். அவரிடம் படிக்கும் மாணவியரில் பலர் திருமணமாகாமலே, கைக் குழந்தையுடன், தோற்ற பாடத்தை மீட்கப் படிக்க வருகின்றனர். பள்ளி வயது - பாலப் பருவம் - கையில் குழந்தை! அதுவும் குழந்தை யாருக்குப் பிறந்த தென்று தெரியாது. பிறகு படித்து, மீண்டும் மணந்து, வாழத்துடிக்கும் அப் பெண்களிடம், நம்மவரை அழைத்துப் போய்க் காட்டவேண்டும்.

இதனால் கலிபோர்னியாவில் 'ஒரு பாலினர் பள்ளி' (Single Sex School) என ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனிப் பள்ளி நடத்த முயன்ற செய்தி, இதழ்களில் வெளியானது.

ஒஹாயோ மாநில நாளிதழ் ஒன்றில், ஒரு புதுமை கண்டேன். ஒவ்வொரு வாரமும் ஒரு பக்கம் முழுவதும் தம்பதியர் படம் நிறைந்திருக்கும். மேலே 'ஐம்பது ஆண்டுகள் பிரியாமல் இணைந்து வாழ்ந்த தம்பதியர் காணீர் என்று, தலைப்புப் போடப் பெற்றிருக்கும்! இது அதிசயம் அங்கே!

எழுபது வயதான பாட்டனார் ஒருவருக்கு, அந்த வயதில் பெண்துணை தேவைப் பட்டதால் 68 வயதான பாட்டியை, மனம் ஒப்பி, இசைந்து மணந்து கொண்ட செய்தி படத்துடன் வெளிவந்தது. அத்தனை விவாகரத்துகள்! கடைசி காலத்தில், துணை தேடும் ஆதங்கம்! முதியோர் இல்லங்களில் அன்புக்கு ஏங்கித் தவிப்பவர் தொகை மிகக் கூடுதல்!

புளோரிடா மாநிலத்தில் ஒரு பெரிய சர்ச்சை வழக்கு . ஒருத்திக்கு மூன்று கணவன்மார்கள் வழி, தனித்தனியே பிள்ளைகள் உள்ளனர். அத் தாய் இறந்து போனாள். மூத்த கணவரின் பிள்ளைகள், எங்கள் தந்தையின் சமாதிக்குப் பக்கத்திலேதான் தாயைப் புதைக்கவேண்டும் என்று கூற, மற்றவர்களும் அவ்வாறு வற்புறுத்த, பிணம் கிடந்து நாறிற்று! இது போல் அங்கு ஆயிரம் குழப்பங்கள்.

அங்கே கணவன் - மனைவியர் தனித்தனி வங்கிக் கணக்கு வைத்துக் கொள்வர். எப்போது பிரிய நேரும் என்று தெரியாதல்லவா?

ஒரு கணவன் தன் உயிரை ஆயுள் காப்பீட்டில் பதிவு செய்து, பணம் பெறும் வாரிசு என்ற இடத்தில் மனைவி பெயரைக் குறித்திருந்தான். அந்த இன்சூரன்ஸ் பணம் தனக்குக் கிடைக்கும் என்ற ஆசையில், அவள் தன் கணவனைக் கொல்ல, இதற்கெனவுள்ள ஏஜன்சி மூலம் ஏற்பாடு செய்தாள். ஒருநாள் இன்ன இடம், இந்த விடுதி, இத்தனை மணிக்கு அங்கிருப்போம்

எனத் தகவலும் தந்தாள். ஆனால், கொலை செய்ய முயன்ற நேரத்தில் கணவன் வெட்டுக் காயத்துடன் தப்பித்துவிட்டான். வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தது. அக்கணவன் சொல்கிறான், “அட பாவமே! எங்களுக்குத் திருமணமாகி இரண்டாண்டுகள் ஆகின்றன; ஒருநாள் ஒருகணம் கூட அவள் மன வேற்றுமைப்பட நடந்ததே இல்லை; என் மீது அன்பைப் பொழிந்தாள்; இதனை எப்படி ஏற்பாடு செய்தாள் என்று என்னால் நம்பவே முடியவில்லை” என்று! இதற்கென முகவர்கள், வழக்கறிஞர்கள் உள்ளனர் என்றால், இத்தகைய கொலைகளுக்கு ஆளாகின்றவர் பலரென்பது புலப்படும்.

இவ்வாறு கொல்வதற்கும், பணம் பெற்றுத்தர வழக்காடுவதற்கும், கிடைக்கும் பணத்தில் இத்தனை விழுக்காடு என்ற ஒப்பந்தம் எல்லாம் அங்குச் சாதாரண நிகழ்வுகள்.

இப்படிப் பல தொந்தரவுகள் இருப்பதால், ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ளாமலே, விடுதிகளில் சாப்பிட்டுப் பசியைத் தீர்த்துக் கொள்ளவதுபோல, பாலியல் வாழ்க்கை நடத்திக் கொண்டு, தனித் தனியே இருப்பது பெருகிவிட்டது. ஆணும் ஆணும் திருமணம் செய்து கொள்ளுதல், பெண்ணும் பெண்ணும் திருமணம் செய்துகொள்ளுதல் அங்கு நாளுக்குநாள் கூடிவருகிறது. இத்திருமணங்களையும் சட்டபூர்வமாக்க வேண்டுமென, அத்தம்பதியரில் ஒருவர், காரண காரியத்தோடு எழுதிய கட்டுரையைப் படித்தபோது, முதலில் எனக்குத் திகைப்பு ஏற்பட்டது. பிறகு ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் நம்ப முடியாத - தொந்தரவான - கொலைக்கஞ்சாத - பிரியவே நாடுகிற குடும்ப அமைப்பில், இதுவும் தேவை தானே என்று எண்ணத் தோன்றியது.

இப்போது சொல்லுங்கள்! நாம் நம் குறைகளை மட்டும் போக்காமல் நம் குடும்பக் கட்டமைப்பையே சிதைக்க வேண்டுமா? மேலை நாகரிகத்தை இலக்கியம், சினிமா முதல் அனைத்திலும் அப்படியே பின்பற்ற வேண்டுமா? நம் பண்பாட்டை, நாகரிகத்தை வெளிப்படுத்தத் திறமை இல்லையா? அங்கு பாதிரிமார் சிலர் ஆண்கள் மட்டும் வேலைக்குப் போனால் போதும்; பெண்கள் வீட்டில் குடும்பம் நடத்திப் பிள்ளைகளை வளர்ப்பதே நல்லது எனப் போதிக்கத் தொடங்கியுள்ளார்கள். ஏனெனில், மணவிலக்குகளாலும் பிற காரணங்களாலும் பிள்ளைகள் கட்டுப்பாடற்று வளர்ந்து கெட்டுப் போகின்றனர். பெரிதும் தாமே சம்பாதித்து, கடன்பெற்றுப் படிக்கின்றனர். பிள்ளைகளைச் சுமை என்றும், தங்கள் இன்ப வாழ்விற்கு எதிரிகள் என்றும் கைவிட்டுவிடும் பழக்கமும் பெருகி வருகிறது. இப்போது அவர்கள் நம்மைப் பார்த்துத் திருந்த முயல்கின்றனர்; குடும்பக் கட்டமைப்பின் சிறப்பை அறிவுறுத்தி வருகின்றனர். நாமோ அவர்களைப் பார்த்து அழிய முந்துகிறோம். இது முறைதானா என எண்ணிப் பார்க்க வேண்டும்.

(தினமணி: 8.7.2000)

# 4. சின்னச் சின்ன நடைமுறை நாகரிகம்

உயிர், பாசங்களின் நீங்கி வீடுபேறடைய வேண்டும். தேவ உலகம் கைவசமாக வேண்டும். வானுலகமும் மண்ணுலகமும் வசப்பட வேண்டும். சொர்க்கத்தை இங்கே படைக்க வேண்டும். கடவுள் நம்பிக்கை, அறநெறி வாழ்வு, தருமமும் தானமும் என நாம் பேசாப் பெருமைகள் எதுவுமில்லை.

தத்துவம், மெய்ந்நெறி, பெருமிதமென ஆகாயத்தில் பறக்கும் நாம், மண்ணில் அன்றாட வாழ்வில், சின்னச் சின்ன நடைமுறைகளில் நாகரிகமாக நடந்துகொள்வதே இல்லை.

பேருந்தில் பக்கத்திலிருப்பவரைக் காரணமின்றி நெருக்குதல், வீட்டுக் குப்பையை வீதியில் பலர் நடக்கும் நடுச்சாலையில் கொட்டுதல்; கழிவுநீர் போகும் வாய்க்காலில் குப்பையைக் கொட்டித் தண்ணீரைத் தேங்க விடுதல், வயலில் மறைவாகத் தண்ணீரைத் தன் பயிருக்குத் திருப்பி விடுதல் என ஆயிரம் சொல்லலாம். ஆனால், தருமம் சத்தியம் நேர்மை நியாயம் பற்றி அழகாக அளப்பதில் நமக்கு நிகர் நாமே!

பொது இடங்களில் புகைபிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. ‘மல்லாந்து படுத்துக்கொண்டு புகை பிடிக்காதே; உதிர்வது உன் சாம்பலாகவும் இருக்கக்கூடும்’ என்பது அமெரிக்க நாட்டில் ஓர் அறிவிப்பு. மாடு சாணத்தாலும் நீராலும் தானிருக்குமிடத்தையே அசுத்தப்படுத்தி அல்லற்படுமென்பது ஓர் அகநானூற்றுப் பாட்டு.

இந்தியர்களைப் பிறநாட்டவர் இழிவுபடுத்தி, மிகத் தாழ்வாக, வெளிப் படையாகப் பார்க்க வைப்பன சிலவுள. தங்கள் சூழலை மாசுபடுத்திக் கொண்டு, அதிலேயே உழல்வதில் நமது நாட்டினர் நன்கு பழக்கப்பட்டவர்கள். சுவரொட்டிகள், தெருத் தூசி முதலாக நச்சுக் கழிவுகள் ஈறாகச் சுற்றுச்சூழல் மாசுகள், செவிப்பறை கிழிக்கும் நடுத்தெரு ஒலி பெருக்கிகள், திறந்தவெளிக் கழிப்பிடங்கள்! இவற்றை அறிவுரைகளாலும் பரப்புரைகளாலும் திருத்த

வேண்டும். அரசு இதில் அக்கறை காட்ட வேண்டும். தனக்குக் கீழ்ப்பட்ட அனைத்து அரசு இயந்திரங்களையும் முடுக்கிவிட்டு, இந்த அவமானத்தைக் களைந்தெறிய முற்பட வேண்டும். ஆள்பவர் நினைத்தால், ஆகாதது எதுவுமில்லை. சாம பேத தான தண்டம் என்று இனிதாகவும் வலிதாகவும் முயலலாம்.

ஒவ்வொரு ஊருக்குள் நுழையும் போதும் அந்த ஊர்ப் பெயர் இருப்பதைச் சுவரொட்டியால் மறைப்பது எவ்வளவு தவறென்பது ஒட்டுபவருக்கும் விளங்க வில்லை. அதைப் பார்த்து மகிழும் அரசியலாரும் அமைச்சரும் அதில் தம் பெயர் மிகத் தடியாக இருப்பதையும் தம் படம் வண்ண ஓவியமாக இருப்பதையும் கண்டு பூரித்துப் போகிறார்கள். அல்லாமல், அட அறிவிலிகளே! என் படத்தை இப்படி ஒட்டுவது எனக்கும் அவமானமல்லவா? என்று கண்டித்ததாக வரலாறு இல்லை. பிறருக்குரிய விளம்பரப் பெரும் பலகைகளை மறைத்து, 'முதலமைச்சர் வருகிறார்' என ஒட்டலாமா? 'கட்சித் தலைவர் வருகை' என யாரோ பணம் கொடுத்து, வாடகை தந்து, செய்துள்ள விளம்பரத்தை மறைக்கலாமா? இப்போது அரசியலுக்கு மட்டுமன்று, திருமணம், காதுகுத்து, பூப்புனித நீராட்டு, திருவிழா, கண்ணீரஞ்சலி எல்லாவற்றுக்கும் சுவரொட்டிகள் வந்துவிட்டன. எத்தனை பெரியவை? எத்தனை வண்ணங்கள்?

சுவரொட்டி விளம்பரம் செய்யத் தனிக் கம்பங்களையன்றி, பொது இடம், தனியார் சுவர்கள் எதையும் பயன்படுத்தாத உலக நாட்டவர், இந்தியர்கள் மீது என்ன எண்ணம் கொள்வார்கள்? பிறருடைய வீட்டுச் சுவரைத் தயக்கமின்றிப் பயன்படுத்துவதை என்ன சொல்வது? சிறிது தயங்கினால், போகிறவன் முதுகிலும் ஒட்டிவிடுவார்கள். இதில் ஒட்டுபவன் அறியாமையைக் கண்டு வருந்துவதை விட, ஒட்ட இடங்கொடுக்கும் அல்லது இசைவுதரும் ஒட்டப்படுபவனது பெயரைக் கண்டே நாம் அருவருக்க வேண்டியுள்ளது.

ஒலிபெருக்கிக்கு எப்படித்தான் காவல் துறையினரும் பிறரும் அனுமதி தருகிறார்களோ தெரியவில்லை. காதுகுத்துக்கு வைக்கப்படும் ஒலி பெருக்கி, அக்கம் பக்கம் நாலைந்து தெரு, ஓன்றிரண்டு கிலோ மீட்டர் தூரம் வரை அனைவரது செவிகளையும் செவிடாக்கிக் காது குத்தலாமா? தனியார் வீட்டுச் சடங்குகள், மஞ்சுவிரட்டு (ஜல்லிக்கட்டு), திருவிழா என ஏதாவது வந்துவிட்டால் போதும்; எல்லோரும், காதில் பஞ்சைத் திணித்துக்கொள்ள வேண்டும்போல் அல்லற்படுவார்கள்.

தனியார்தம் நிகழ்வுகள், ஊராரைத் துன்புறுத்துவது என்ன உரிமை? தொடர்பே இல்லாதவர்கள், நாளெல்லாம் சங்கடப்பட வைப்பது என்ன நியாயம்? தனியார் உரிமைகள் வேறு; பொதுவுரிமை வேறு அல்லவா? குடை பிடித்துப் போகிறவன், அடுத்தவன் மூக்கில் இடித்துக் காயப்படுத்த, உரிமை ஏது? இதைக் கேட்காத நாடு, நாடு ஆகுமா?

மேடைப் பேச்சு, அரங்கப் பேச்சுக்கூட, அதைக் கேட்பவர்கள் அனைவருக்கும் போய்ச் சேருமளவுதான் ஒலிபெருக்கிகளும் ஒலியளவும் இருக்க வேண்டும். எங்கெங்கோ இருப்பவர்களை ஒலியளவாலும் ஒலிபெருக்கிகளாலும் சத்தத்தால் தாக்குவது கூடாது. அரங்கிற்குள் வந்து - கூட்டம் நடக்கும் திடல் அல்லது வளாக எல்லைக்குள் வந்து கேட்குமாறு அமைதலே சிறப்பு.

மற்றுமொரு கேடு; அண்மைக்காலமாக நாடெங்கும் வலம் வருகிறது. அதுதான் பேருந்துகளில் ஒலிபெருக்கி மூலம் திரைப்படப் பாடல்கள்! அப் பேருந்துகளிலேயே நாள் முழுவதும் ஓடும் ஓட்டுநர், நடத்துநர் எவ்வாறுதான் தாங்குகிறார்களோ? உச்சத்தொனியில் வைத்துப் பயணிகளை ஈர்க்கிறார்களாம். அரசுப் பேருந்துகளும் போட்டி காரணமாக இதற்கு ஆட்பட்டுவிட்டன. முன்பெல்லாம் இரவு நேரங்களில் அதுவும் முன்னிரவில் பேருந்துகளில் விடியோக் காட்சி போட்டார்கள். இப்பொழுது பகலிலேயே போட்டுப் பயணிகள் உயிரை வாங்குகிறார்கள். இறங்க வேண்டிய இடம் வந்தும், பெரிய தடுமாற்றம். மிகக் கீழ்த்தரமான காட்சிகள்; பாட்டுகள். இந்த நாட்டு மக்கள் இவ்வளவு கீழே போக வேண்டுமா?

கழிப்பிட வசதிகள் பற்றிக் கேட்க வேண்டாம். இந்திய நாடே ஒரு 'திறந்த வெளிக் கழிப்பிடநாடு' என அயல்நாட்டார் கேலி பேசுகிறார்கள். பேருந்து நிலையங்கள், பொது இடங்களில் கட்டணமில்லாத, மிகப் புதுவிதமான கழிப்பிடங்களைக் கட்ட அரசு ஆணையிடுவதுடன், நிதியுதவி செய்து, சிற்றூர் முதல் மாநகரம் வரை கழிப்பிடம் அமைப்பதையே ஒரு தொண்டாகச் செய்யலாம். அன்னதானத்திற்கு நன்கொடை வழங்குவது போல், கழிப்பிட வசதிகளுக்கு மக்களிடம் நன்கொடைகள் பெறுவது மிக மிக நல்லது. மேலே போவதற்கு அது புண்ணியமென்றால், கீழே நலமுடன் வாழ்வதற்கு இது புண்ணியமென மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

பெரியகோயில்களில் தரகர்கள், அருச்சகர்கள் நடந்துகொள்ளும் விதமும், பல சமயங்கள் அருவருப்பாக உளது. 'ஏண்டா, கோயிலுக்கு வந்தோம்' என்று, பக்தர்களைக் கண்ணீர்விட வைப்பவர்களும் உள்ளனர்.

பிளாஸ்டிக் குப்பைகள் போன்றவற்றை எப்படி, எங்கே, மூட்டைகட்டிப் போட வேண்டுமென அறிவுறுத்த வேண்டும். தெருவில் குப்பை கொட்டினால், கண்ட இடத்தில் கழிவைத் தேக்கினால், சுழற்சியுள்ள பிளாஸ்டிக்குகளைக் கண்ட இடத்தில் போட்டால், ஆயிரம் ரூபாய் தண்டம் என விதி வகுக்கலாமே? குப்பைகளை அகற்ற உள்ளாட்சிகள் முதல் அரசு வரை முழு முயற்சி எடுத்தால், சுற்றுச்சூழல் கெடாது; நாடும் ஒளிமயமாகும்.

(தினமணி: 28.5.2002)

# 5. நமது மேடை நாகரிகம்!

ஆண்டுவிழா அழைப்பு ஒன்றைப் பார்த்தாலே, தமிழர்களின் மேடை நாகரிகம் விளங்கிவிடும். இப்போதெல்லாம் அழைப்பிதழில் இடமேயின்றி, பங்கு கொண்டு பேசுபவர் பெயர்கள், நான்கு பக்கங்களும் மிக நெருக்கமாக அச்சிடப்படுகின்றன. வரவேற்போர், அறிமுகம் செய்வோர், முன்னிலை வகிப்போர், வாழ்த்துரை வழங்குவோருக்குப் பிறகுதான் சொற்பொழிவாற்று பவர்கள் வரிசை வரும். கடைசியில் சிறப்புரை ஆற்றுபவர் பெயர், தடித்த எழுத்தில் இருக்கும். இவை தவிர, தலைவர் முன்னுரை, இடையுரைகள், முடிப்புரை வேறு தவறாமல் உண்டு.

இடையிடையே விழாச்செலவுக்கு உதவிய புரவலர்கள் சிறப்புச் செய்யப் பெறுவர். சிலர் நன்கொடை வழங்கிய தொகையைவிடக் கூடுதலான நேரம் பேசவும் விழைவர்.

இதன்பொருள் என்ன? நாம் அனைவரும் நம் பெயர்கள் அச்சிடப் பெற்று, நூற்றுக்கணக்கில் வழங்கப்படுவதை நம் ஆழ்மனத்தில் விரும்புகின்றோம். மேடையில் நம் பெயர் அடிக்கடி உச்சரிக்கப்படுவதில், நமக்கு ஒரு மகிழ்ச்சி உள்ளூற உண்டாகிறது.

விழாத்தொடங்கி, முடியும் நேரம்தான் நம் மேடை நாகரிகத்திலேயே, குறிக்கத் தகுந்த குறைபாடாகும். 4.30 மணிக்கு என்று போட்டுவிட்டு ஆறு மணிக்கும் தொடங்கமாட்டோம். ஒரே ஒரு பெரியவர் வரக் காலத்தாழ்வனால், மற்ற அனைவரும் ஒரு மணி, ஒன்றரை மணி நேரம்கூட வீணே காத்திருப்பர். இரு நூறு பேர், தனி ஒருவருக்காக ஒன்றரை மணிநேரம் காத்திருந்தால், கூடுதல் முந்நூறு மணி நேரம் சமுதாய வாழ்வு வீணடிக்கப்படுகிறது அல்லவா?

மற்றொரு சங்கடம் என்னவென்றால், இப்போதெல்லாம் ஒருவர் கால் மணி அளவுகூடப் பேசக் காலம் கிடைப்பதில்லை. அத்தனைபேரும் பேசியாக

வேண்டுமே? இதற்காக அவர் குறைந்தது மூன்று அல்லது நான்குமணி நேரம் மேடையில் இடுப்புவலிக்க இருந்தாக வேண்டும்; யார் என்ன பேசினாலும் நாகரிகம் கருதிக் கேட்டாக வேண்டும்.

வெளிநாடுகள் எல்லாம் சென்று வந்த பலர், நம் மேடைப் பழக்க வழக்கங்களை, அங்கு நடப்பவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

மேடையில் இருப்பவரை ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி, 'விளிப்பது', தமிழர்களுக்கேயுரிய ஒரு தொற்றுநோய். தலைவர் முக்கியமானவராக இருந்துவிட்டால், பல்வேறு அடைமொழிகளுடன் விளிக்கவேண்டும். கடமையுணர்ச்சியும் மக்கள் சேவையுமே கருத்தாகக் கொண்டு, காலம் போற்றி ஞாலம் காக்கும் மாவட்ட ஆட்சியராம் தலைவர் அவர்களே! என்று ஒருவர் விளித்தால், அடுத்து வருபவர், அதைவிடக் கூடுதலான அடை மொழிகள் சேர்த்து, 'அன்பும் பண்பும் அறிவும் திறமும்' என அடுக்கி, விளிப்பார். சிலர் முன்னே அமர்ந்திருப்பவரையும் பெயர் சொல்லிச் சிறப்பிப்பார்கள். ஒவ்வொருவரும் இப்படி விளிப்பதிலேயே சிலமணி நேரம் செலவழியும் போது, அவையோர் அசட்டுச் சிரிப்புடன், 'விழிப்பதைத்' தவிர வேறு வழியறியாது தவிப்பர்.

இப்படிக் கால்மணியோ, சற்றுக் கூடுதலோ பேசித் தொலைப்பதற்காக, ஒருவர் நானூறு, ஐந்நூறு கி.மீ. பயணம் செய்து வந்து, அதே அளவு தூரம் திரும்பவேண்டும்.

ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொள்ள இது உதவலாம். ஆனால், இம் மேடைகளை மேலும் பயனுள்ளதாக்க முயலக்கூடாதா? வெற்று ஆரவார மேடைகளையே, நாம் குறை சொல்கிறோம்.

சொற்பொழிவு ஒரு சிறந்த கலை. அதனால் மக்களை ஈர்த்துத் திரட்ட முடியும். ஏன்? உலகையே வெல்ல முடியும்.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்

என்பார் திருவள்ளுவர். இங்கிலாந்தில், 'பர்க்' என்பாரின் நாடாளுமன்றப் பேச்சுகள், உலகப்புகழ் பெற்றவை. ஆபிரகாம் லிங்கனின் 'கெட்டிஸ்பர்க்' பொழிவை அறியாதார் யார்? அண்ணாவின் பேச்சைக் கேட்டு, கல்கி பாராட்டியதை அனைவரும் அறிவோம்.

நாவன்மை என்பது, தனித்திறமையாகும். அவையறிதல், சொல் வன்மை, அவை அஞ்சாமை எனப் பல அதிகாரங்கள் திருக்குறளில் இதற்கென ஒதுக்கப் பெற்றுள்ளன. அதுபோலவே 'பயனில சொல்லாமையை' ஓர் அறமாக, அறத்துப்பாலில் விளக்கியிருப்பதையும் நினைவிற் கொள்ள

வேண்டும். ஆயினும் நம்மில் பலர், மேடைப் பேச்சைக் கொச்சைப் படுத்தி வருவதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

இன்று கழகங்கள் ஆண்டு விழாக்கள் கொண்டாடுவதென்பது, ஒரு சடங்காகி விட்டது. சிலபோது, பொருளற்ற காலத்திற்குத் தேவையற்ற அதாவது இன்றைய கால வேகத்தொடு பொருந்தாத வெற்றுச் சடங்காகி, காலமெல்லாம் மொழிப்பணி, இலக்கியப்பணி, சமுதாயப் பணி மூன்றும் மேடைப் பணி மட்டுமே என்றாகிவிட்டது.

கருத்தரங்குகள் ஆய்வரங்குகளையும் இத் தொற்றுநோய் பற்றிக் கொண்டு விட்டது. சிலர் இவ்வரங்குகள் தொடர்பாக ஆழக் கற்காமல், மேற் போக்காகவும் படிக்காமல், படித்தவர்களை மதிக்காமல், வீண் விதண்டா விவாதம் பேசி, மொத்தக் கருத்தரங்கையும் பாழடிக்கப் பார்க்கலாம்.

பெரும்பாலும் உயிரினங்கள் ஒன்றையொன்று உரசிக்கொள்வதில் சுகங் காண்பதுபோல, ஒருவரை ஒருவர் முகமன் பேசுவதில், பாராட்டித் தீர்ப்பதில் இன்பங் காண்பதே வழக்காறாகிவிட்டது. உள்ளத்தில் இல்லாமல், உதட்டளவில் வாழ்த்துவோரே சிறந்த பேச்சாளர்களாகின்றனர்!

வேறு வழிகளில் பணிசெய்வதென்பது கடினமாகப் படுகிறது. ஆயிரக்கணக்கான நம் மன்றங்கள், கழகங்கள், பேரவைகள் அனைத்தும் மேடைப்பணி ஒன்றையே கதியாகக் கொண்டுவிட்டன. மேடைப் பேச்சு வேண்டாம்; சொற்பொழிவே வேண்டாம் என்பதன்று இங்குச் சிந்திக்கப்படுவது. சிலர் உடனே தவறுபட எடுத்துக்கொண்டு, இதனை மறுக்கவே ஒரு 'பேருரை' ஆற்ற முற்படுவர்!

நாம் செயல்செய்வதையே - பயன்படுமாறு செயற்படுவதையே மறந்து வருகிறோம். நம் இளைஞர்களைச் செயலூக்கிகள் ஆக்காமல், வீண் பேச்சூக்கிகள் ஆக்கி வருகிறோம். நம் 'தமிழுணர்வு கூட, வெறும் பொழுது போக்குணர்வாகிப் போனது. மேடை ஏறிக் காரசாரமாகப் பேசுவதையும், 'உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு' என முழங்குவதையும் மட்டுமே தமிழ்ப்பணி என முடிவு செய்ததால், இரண்டுவித இழப்பு ஏற்பட்டு வருகிறது.

ஒன்று, பிற மாநிலத்தவர் எல்லாம் நாம்தான் நாட்டிலேயே மொழியுணர்ச்சி மிக்கவர்கள் என்று கருதுகின்றனர். இரண்டு, இந்திய மாநிலங்களில் தாய்மொழி வளர்ச்சியில் நாம்தான் மிகப்பிற்பட்டுக் கடைக் கோடியில் நிற்கிறோம்.

இக் கழகங்கள், மன்றங்கள் எல்லாம் கூடுகின்றவர்களே கூடி, பேசுகின்றவர்களே பேசி, பேசியதையே பேசிக் காலத்தைக் கழிப்பதை, நுனித்தறிதல் கூடும்.

பாமர மக்களுக்குத் தமிழ், இலக்கியச் சுவையூட்ட வழி என்ன? நம் நாட்டில் 'பண்டிதர்கள் தமிழை மக்களிடம் கொண்டு செல்லவில்லை; தமக்குள்ளேயே வைத்துக்கொண்டு, அதன் அருமை பெருமைகளை அனைவரும் அறியும்படி செய்யத் தவறிவிட்டார்கள்' என்று, சிலர் குறை கூறுவதுண்டு. தமிழ்ப் புலவர்கள் மட்டுமா? எல்லோரும் இக்குற்றத்தையே செய்கிறோம். சங்ககாலம் முதல் இன்றுவரை உழவன், தொழிலாளி, பாமரன், மகளிர் பெரும்பான்மையினருக்குத் தமிழைப் பற்றியோ, சிலப்பதிகாரம், சங்க இலக்கியம் பற்றியோ நாடெலாம் முழங்கும் கம்பராமாயணம் பற்றியோ எள்ளளவும் தெரியாது.

ஒரு தெருமுனையில் நின்று, சிலப்பதிகாரம், கம்பர் காப்பியம் பற்றிப் பேசிப் பார்த்தால், சொற்பொழிவு செய்தால் உண்மை விளங்கும். தேநீர்க் கடைக்காரரிலிருந்து துணிமணி வெளுக்கப்போகும் சலவைத் தொழிலாளி வரை பரக்கப் பரக்க விழித்தபடி செல்வர். அதாவது நூற்றுக்குப் பத்து விழுக்காட்டினர் மட்டும் இலக்கிய அருமை, தமிழின் பெருமை அது இது என்று பேசிச் சிரித்துக் கும்மாளம் போடுகின்றோம். மற்ற 90 விழுக்காட்டினர் இவற்றில் இருட்டிலேயே உள்ளனர். பட்டிமன்றங்கள் அறிவூட்டுவன அல்ல. அறிவூட்டினால் கேட்பாரும் இலர். இந்நிலை நீங்க அறிவொளி இயக்கம் போல, தமிழ்ஒளி இயக்கமாக, எவ்வெவ்விதங்களில் செயற்படலாம்? இலக்கியச் சுவையறிவைக் கடைக்கோடி மனிதனிடமும் கொண்டு செல்வதெவ்வாறு? இளங்கோ மன்றம் நடத்துபவர் ஓர் ஆயிரம் பேரையாவது, சிலப்பதிகார அறிமுகம் உடையவர்களாக, சிலம்புச் சுவையுணர்ந்தவர்களாக, சிலம்பில் திளைத்து அனுபவித்து எடுத்துரைக்க வல்லவர்களாக ஆக்க, எத்தனையோ நெறிமுறைகள் கண்டு விழாக்களைப் பயிற்சிக் களங்களாக்கிப் பணிசெய்யலாம். உலகெங்குமுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழமைப்புகளும் சொற்பொழிவு செய்யும் மேடை நாகரிகம் ஒன்றையே தமிழ்ப்பணியாகக் கருதாமல்; அதைக் கூடியவரை சுருக்கிக் கொள்ள வேண்டும்; செவ்விய முறையினதாய்த் திருத்திக்கொள்ள வேண்டும். செயலூக்கிகளாய் மாற வேண்டும்.

சமுதாயப் பயன்பாட்டுத் களங்களாய் இந்த அமைப்புகள் மாற வேண்டுமேல், நமது மேடை நாகரிகம் கட்டுப்படுத்தப் பட்டு, செயல் வடிவப் பணிகள் பல்க வேண்டும். அதற்கேற்பத் திட்டமிட வேண்டும். அதனால் பெயர், புகழ் தேடும் வாய்ப்புக் குறையும். தமிழர்கள் இந்தத் தியாகத்திற்கு ஆயத்தமாவார்களா என்பது ஐயமே! ஏனெனில், தமிழுக்காக உயிரைக் கொடுக்கப் போவதாக இவர்கள் முழங்குவதே, அதனுடன் தங்கள் பணி நிறை வேறி விட்டதாக, மன ஆறுதல் பெறுவதற்குத் தானே!

(தினமணி: 12.06.2000)

# 6. ‘நாய்களை அவமானப்படுத்தாதீர்’

உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். இது இன்னும் எந்தச் செய்தித்தாளிலும் வெளிவரவில்லை. மலையடிவாரத்தில், ஒதுக்குப் புறமான ஒரு தோட்டத்தில், தனி ஒரு ‘எஜமானர்’, நூற்றுக்கணக்கான நாய்களை வளர்த்துவந்தார். அவற்றிற்கு அளவுக்கு மீறிக் கறியும் சோறும் போட்டு வளர்த்தார். ஒரு நாய் சிறிது குரைத்தால் கூட, அதற்கு என்ன வேண்டுமென்று குறிப்பறிந்து கொடுத்து வளர்த்தார். சிலசமயம் இவை ஒன்றுசேர்ந்து கூடிக் கூக்குரலிடும். உடனே நாய்களைச் சமாதானப்படுத்திப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதில் அவர் மிகவும் வல்லவர்.

அந்த நாய்களை நல்லதற்குப் பயன்படுத்தாமல், தீயவற்றுக்கே அவர் பயன்படுத்தலானார். வேண்டாதவர்கள் மீது ஏவி விடுவார்; தங்களுக்கு ஒரு தீங்கும் செய்யாத அவர்களைக் கடித்துக் குதறிவிட்டு அவை வந்துவிடும். பெண்களை விரட்டி விரட்டிக் குரைப்பதும், சிலசமயம் சித்திரவதை செய்வதும்கூட இந் நாய்களுக்கு நன்கு பழக்கமாகி இருந்தது.

நாய்களைக் காவலுக்கு வளர்ப்பார்கள். நன்றியுள்ள நாய்கள், தங்கள் எசமானின் வீட்டைக் காக்கும்; திருடர்களைத் துரத்தும். ‘நாய்கள் எச்சரிக்கை’ என்று அட்டை எழுதித் தொங்கவிட்டிருப்பார்கள். சில நாய்கள் தங்களை வளர்த்த எஜமானர்களுக்குக் கடைசிவரை நன்றியாக இருக்கும். வளர்த்தவர் இறந்து விட்டால், நாயும் கூடவே உண்ணாது உறங்காது இருந்து செத்துப் போவதுண்டு. ஆனால், மேலே குறிப்பிட்ட நாய்களோ, நேர்மாறாக வளர்க்கப்பட்டன. ஒரு சில நாய்கள் புதிய எசமானன் கிடைத்ததும், பழையவரைப் பார்த்துக் குரைக்கும்; கடிக்கப்போகும். இவ்வாறு விசுவாசத்தை மாற்றிக் கொள்ளும். இவையும் நன்றியுள்ள நாய்கள்தான். ஆனால், நன்றியைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளும். அவ்வளவுதான் வேறுபாடு.

இந்தத் தோட்டத்து நாய்களுக்கு வெளி உலகப் பழக்கம் கிடையாது. குறிப்பிட்ட இடத்துக்குள்ளேயே, அடிமைகளாக வளர்க்கப் பட்டவை. தங்களுக்கென்று எந்த உணர்வுமின்றி, எஜமானன் பழக்கியபடி பழகி, ஆட்டியபடி ஆடி, சர்வ அடிமைகளாக, ஒரே விதமான பழக்கத்துடன் வளர்க்கப்பட்டதால், இவற்றுக்குச் சுயஅறிவு, சுயமரியாதை என எதுவுமே இல்லாமல் வளர்ந்தன.

இந்த நிலையில் சில புதிய வெளிநாட்டு நாய்களைத் தோட்டக்காரர் கொண்டுவந்து, பழைய உள்நாட்டு நாய்களுடன் வளர்க்கலானார். அந்தப் புதிய நாய்கள், நல்ல பழக்கங்களுடன் வளர்க்கப்பட்டிருந்தன. இதனால் வந்தது குழப்பம்.

இரண்டுநாள், குடும்ப வேலையாகத் தோட்டத்துத் தலைவர் போகவே, இந் நாய்கள் இரண்டு பிரிவுகளாக நின்று, ஒன்றை ஒன்று எதிர்த்துக் குரைக்கத் தொடங்கின. ஒரு பெரிய நாய் எல்லா நாய்களையும் அடக்கி, அவசரமாக ஒரு மாநாட்டை, பெரிய ஆலமரத்தடியில் கூட்டியது.

முதலில் வெளிநாட்டு நாய் பேசியது: 'நாம் வீட்டைக் காப்பவர்கள்; நாட்டையும் காப்பவர்கள். இத்தகைய உலகக் காவலர்களாகிய நாம், நம்முள் முறைப்பதும் குரைப்பதும் கூடாது. இங்கேயிருக்கும் நீங்கள் வளர்ப்பு நாய்கள். நாங்கள் சுதந்தரமாகத் திரிய விடப்பட்டவர்கள். மனிதர்களால் வளர்க்கப்பட்டதால், உங்களிடம் கெட்ட குணங்கள் பல படிந்துவிட்டன...

இந்தச் சமயத்தில் தோட்டத்து வளர்ப்பு நாய் ஒன்று கத்தியது. உடனே எல்லாமும் சேர்ந்து, அதைப் பேசவிடுங்கள் என்றன. அவ்வாறே உள்நாட்டு நாய் பேசியது.

'மனிதர்களால் நாம் கெட்ட பழக்கங்கட்கு ஆளாகிவிட்டோம்' என்றீர்கள்! ஆனால், மனிதர்கள் 'போடா நாயே' என்றும், 'ச்சீசீ, நாயே' என்றும், 'நாய்க்குணம்' என்றும், 'நன்றிகெட்ட நாய்' என்றும் ஒருவரை ஒருவர் திட்டிக்கொள்வது நம்மைக் கேவலப்படுத்துவதாக அல்லவா இருக்கின்றன! அவர்கள் எப்படியாவது வசைபாடித் திட்டித் தொலையட்டும். நம்மை ஏன் இழுக்கிறார்கள்? நம் பெயரைச் சொல்லித் திட்ட இவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது. வளர்த்தவனையே சிறிது கால இடைவெளியில் காலை வாரிவிடுகிறார்கள் இவர்கள். பதவி உயர்வு தந்தவனையே பதம் பார்ப்பவர்கள் இவர்கள். பின்னால் வளர்ப்பவனின் பேச்சைக் கேட்டு, முன்னால் வளர்த்தவனைக் குலைப்பவர்கள் இவர்கள்!....

மற்றொரு நாய் குறுக்கிட்டது. நாம் வாய் பேசாதவர்கள் என்பதால், நம் பேரைச் சொல்லி இவர்கள் திட்டுகிறார்கள். நமக்கும் பேசும்படியாக

வாயிருந்தால், "*சீச்சீ*, மனிதக்குணம்; நன்றிகெட்ட மனித குலம்" என்று திட்ட எவ்வளவு நேரமாகும். நாமாவது அடிமைகளாக வளர்க்கப்பட்டுவிட்டோம். மனிதப் பழக்கதோசம் நம்மைக் கெடுத்து விட்டது. மனிதர்களிலே சுயநிர்ணய உரிமை உடையவர்கள்; தாமாக - சுயமாக - மக்களுக்காக - நடுவு நிலையோடு செயற்பட வேண்டியவர்கள்; சுதந்தரமாகத் தனித்து இயங்க வேண்டிய துறையைச் சார்ந்தவர்கள்; நம்மைப்போல் எசமானனுக்கு அடிமையாகாமல், நல்லதன் நன்மையையும் தீயதன் தீமையையும் எடுத்துக் கூறி, எசமானனின் தப்பினை இடித்துக் கூறி, 'நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை'யுடன் தலைநிமிர்ந்து நிற்க வேண்டியவர்கள்; எப்பொழுதும் யாரிடத்தும், எந்தக் கொம்பனானாலும், இன்னார் இனியார் என்று பாரபட்சம் காட்டாமல் நடக்க வேண்டியவர்கள் - ஐயோதனி மனிதர்களின் விசுவாசிகளாய், பகடைக் காய்களாய் உருட்டப் பயன்படுகிறார்களே! இந்த அளவு தன் மானத்தை இழந்தவர்கள், நம்பேரைச் சொல்லித் திட்டுவதை இனிக் கண்டிக்க வேண்டும். "நாய்களை அவமானப்படுத்தாதீர்" என்று தீர்மானம் போட வேண்டும் என்றது அவ்வுணர்ச்சிமிக்க நாட்டுநாய்.

வெளிநாட்டு, வெள்ளைக்கார, வெள்ளைநாய் மீண்டும் தன் தலைமையுரையில் கூறியதாவது: "நம்மிடம் மிக நல்ல பழக்கங்கள் இயல்பாக உண்டு. நாம் உண்ட வீட்டுக்கு இயல்பாக இரண்டகம் செய்தறியோம். வளர்த்தவன் மடிந்தால், ஓரிரு நாளில் உடன் கட்டை ஏறுவது போல், மடிபவர்கள் நம்மில் பலர். சிலபோது மனித வளர்ப்பால் நம்மினம் கெட்டுப் போயிருக்கலாம். ஆகவே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, நாம் இந்தத் தோட்டத்தைவிட்டுச் சுதந்தரமாக வெளியேறுவோமாக" என்று கூறியது. தீர்மானம் படிக்கப்பட்டது: "மனிதர்கள், தங்கள் உரிமையை நிலைநாட்டத் தெரியாதவர்கள்: நாயினும் கேடாக வாலாட்டிக் குழைபவர்கள்; தன்மானத்தை விற்றுச் சுயசிந்தனை - நேர்மை - நடுவுநிலைமைகளை இழந்து, கேவலமான சூழல்களுக்கு ஆட்படுபவர்கள் - தங்களுக்குள் யாரையும் நாய் பேய் என்று இனிமேல் திட்டக்கூடாது. அது நாயினத்தையே அவமதிப்பதாகும்".

மறுநாள் காலை எசமானர் வந்த போது, வயதான ஒருநாய் தவிர, வேறு நாய்களையே காணவில்லை. அந்த நாயும் "ஐயோ, முதன் முதலில் குட்டியாய்க் கண்விழிக்குமுன் உங்களால் எடுத்து வளர்க்கப்பட்ட நாய் நான். எல்லோரும் ஓடிவிட்டாலும், நான் மட்டும் ஓடவில்லை. சாகும்வரை பிரிய மாட்டேன். நாய் சிறந்த காவலன் என்பதையும், நன்றியுள்ளவன் என்பதையும் மெய்ப்பித்துத் தங்களுடனேயே இருப்பேன்" என்றது. வளர்த்தவர் கண்களில் நீர் கசிந்தது. அவர் மனம், 'இந்த மனிதர்களைப் பார்க்கும்போது, அவர்களில் ஒருவனாகப் பிறந்ததற்கு இந்த நாயாகப் பிறந்திருக்கலாமே' என எண்ணியது.

(தினமணி: 7.7.2001)

# 7. ஒரு பண்பாட்டின் சின்னம்

கண்ணகி சிலை இரவோடு இரவாக அகற்றப்பட்டிருக்க வேண்டாம்; எடுத்துச் செல்லப்பட்டிருக்கக் கூடாது என்பதே, பெரும்பான்மையான தமிழர்களின் உட்கருத்து. மக்களின் கருத்தை மதிப்பதே ஆட்சிக்கு அழகு.

கண்ணகி வரலாற்றில் மூவேந்தரும், மூன்று தலைநகரங்களும், மூன்று நாடுகளும் தொடர்புபட்டிருப்பதைக் கண்டார் இளங்கோவடிகள். தமிழகத்தை ஒரே நாடாகவும், தமிழினத்தை ஒரே இனமாகவும் காண விழைந்தார். அவர் காலத்தில் வைதிக, புத்த, சமண சமய பேதங்கள் இருந்தன. ஆனால், சமய சமரசக் காப்பியம் படைத்தார் அவர்.

கண்ணகி எனும் பெண்பாத்திரம். பெண்ணியம் பேசும் இன்றையப் பேரறிஞர்களுக்கும் ஒரு காட்டாக உளது. அவள் ஒரு குடும்பப் பெண்; வண்ணச் சீறடி மண்மகள் அறியாதபடி அடக்கமாய் வாழ்ந்தவள். 'வாழ்க்கைத் துணை' என்ற தொடரை மெய்ப்பித்தவள். பெண்மை நலங் கனிந்த பெட்டகம். இவற்றைப் பார்த்து, பெண்ணடிமை பார்த்தீரா என்று சிலர் விரைவுபடுவர்; வேதனை பேசுவர். ஆனால், பெண் அடக்கம் பேணுவாளே தவிர அடிமையாக மாட்டாள்; பொறுமை பேணும் அவள் பொங்கி எழுந்தால், பூமி தாங்காது; அடிமைப்படுத்தவோ, அவமானப் படுத்தவோ முனைவோரை அழித்து ஒழிக்கவும் தயங்க மாட்டாள்.

திருவள்ளுவர்கூட எண்ணினார் பெண்ணினம் நல்லதாக இருந்தால், உலகம் வாழும் என்று. ஒளவையார்கூட, மகளிர் என்றும் சலனமற்ற திண்மை மிக்கவரே; எவ்வழி ஆடவர் நல்லவரோ, அவ்வழி நல்லை வாழிய நிலனே என்று, ஆடவர்க்குப் பொறுப்பைத் தந்தார். அதாவது பெண்கள்மீது அவருக்கு நம்பிக்கை இருந்தது.

சிலம்பில் அக்கால நிலப்பரப்பை, நிலபுலன்களை, குடிமக்களை, அவர்களின் வாழ்வுமுறைகளை நிரம்பக் காணலாம். இதனால் இது குடிமக்கள் காப்பியம், தமிழர் தேசியக் காப்பியம் எனப்பட்டது.

இன்றும் நாட்டியக் கலை, தமிழ் நாட்டில் தோன்றிய தமிழர்களுக்கே உரிய கலை என்பதைக் கூற, முழுமையாய்த் துணைசெய்வது இக் காப்பியமே. தமிழர்தம் இசையும் கூத்தும் நாடகமும் விரவிக் கிடப்பது இப் பெருங்காப்பியம்.

இவை அனைத்தையும் கூற, கண்ணகி வரலாறு துணையாகும் என்பதாலேயே, இளங்கோவடிகள் இச்செய்திகளைக் கேட்டதும், ‘நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்’என்றார். இவ்வகையில் எண்ணிப்பார்த்தால், கண்ணகி தமிழர் பண்பாட்டின் அடையாளம்; தமிழ் மகளிரின் நாகரிகச் சின்னம்: ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் உளக்கோயிலில் வீற்றிருக்கும் தெய்வச் சிலை.

இளங்கோவடிகள் காப்பியத்தை முடிக்கும்போது, ‘தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்’ என, உலக மக்களுக்கு எடுத்தோதினார். கண்ணகி மதுரையை எரித்தது என்பது, அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து, அரசு முறை பிழைத்த தீமையை எரித்ததாகும். வெறுமனே மதுரை எரியுண்டது என்று மட்டும் கருத வேண்டாம்.

கணவன் குற்றமற்றவன் என்று, கண்ணகி கண்முன்னர் மெய்ப்பித்தாள். மக்கள் யாரும் மறுக்க வொண்ணாத நிலை; ஊரே கொதித்து எழுந்தது. ஊரார் கொதிப்பும், பெண்ணரசியின் மனக் கொதிப்புமே மதுரையை அன்று - முறை தவறிய தீமையைச் சுட்டெரித்தன.

மதுரை எரியுண்ட நாள் ஆடி மாதம் வெள்ளிக்கிழமை மதிமறை (அமாவாசை) நாள். அவள் அன்றே மதுரையைவிட்டு வெளியேறி, வையைத் தென்கரை வழியாக, கல்லும் முள்ளும் காலிற் குத்த, மேடும் பள்ளமும் பாராமல் பதினான்கு நாள்கள் நடந்தாள். சேரநாட்டு எல்லையை அடைந்தாள். பிறந்து வளர்ந்த சோழநாட்டில் வாழவில்லை; வாணிகம் செய்யத் திருந்திய கணவனுடன் புகுந்த பாண்டிய நாடோ வாழவிடவில்லை; எனவே, சேர நாட்டின் எல்லையுள் புகுந்து, ‘நெடுவேள் குன்றம் அடிவைத்து’ ஏறி, உச்சி சென்று, கணவனுடன் சென்றடைந்தாள்.

அவளைப் பார்த்த வேட்டுவப் பெண்ணும் கவுந்தியடிகளும் குன்றக் குறவர்களும், ‘இவள் ஒரு தெய்வம்’ என்றே போற்றினர். மனிதர்களில்

மனிதர்களும் உண்டு; விலங்குகளும் உண்டு; தெய்வங்களும் உண்டு என்ற கருத்தில் இதைப் பார்க்க வேண்டும்.

தமிழ் மக்கள், ஆடிமாதம் வெள்ளிக்கிழமை சார்ந்த 'அமாவாசை' மதிமறை நாள் தொடங்கிப் பதினான்கு நாட்கள் நோன்பிருக்க வேண்டும். நமது இசுலாமிய நண்பர்களின் 'ஈகைப் பெருநாள்' நோன்பு போலவும், முருகக் கடவுளுக்குரிய 'கந்தர்சஷ்டி விழா'ப் போலவும் முழுநாளும் உண்ணா நோன்பிருந்து கொண்டாட வேண்டும். புரட்டாசி மாதம் நகரத்தார்கள் இராமாயணம் படித்து, இறுதி நாளன்று 'பட்டாபிசேகம்' என்று உறவினர்களை அழைத்து, விழாப் போல விருந்து வைத்துக் கொண்டாடுவர்! அது போலப் பதினான்கு நாள்களும் சிலப்பதிகாரம் படித்தல் - முற்றோதுதல் வேண்டும். சிலப்பதிகாரக் காப்பியம் பற்றிய சொற்பொழிவுகள், இசை, கலை நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும். மகளிர் திருவிளக்கேற்றியும், மலர் தூவியும் கண்ணகி வழிபாடு நடத்த வேண்டும்.

குடிசை முதல் அரண்மனை அனைய வீடுகள் வரை மகளிர் முன்னின்று - கண்ணகியின் சிறு சிலையோ, படமோ, சிலப்பதிகாரக் காப்பியமோ, வைத்து - இந் நோன்பைக் 'கண்ணகி நோன்பாக' - மங்கல மடந்தை விழாவாகக் கொண்டாட வேண்டும். கண்ணகி தெய்வமான இறுதி நாளன்று, விழாவாக நிறைவேற்ற வேண்டும்.

சேரநாட்டு எல்லையில் - கேரளம் இசைந்தால் கண்ணகி கோயிலை ஏற்று, தமிழ்மக்கள் அங்கு ஆடிப் பௌர்ணமி முழு மதி நாளன்று சென்று வழிபட வேண்டும். கேரள அரசு இசையாவிடின், தமிழக எல்லையில் கோயில் எழுப்ப வேண்டும். இன்று ஐயப்பனை வழிபடச் செல்வது போலக் கண்ணகியையும் வழிபட வேண்டும். இது மூடநம்பிக்கை என்று யாரும் முணு முணுக்க வேண்டாம். இதனைத் தமிழ் - இயல் இசை நாடக - விழாவாக, தமிழக மகளிர் அறிவொளி இயக்க விழாவாக, தமிழர் பண்பாடு நாகரிக மீட்டுருவாக்க விழாவாக, தமிழ் மொழியை அரியணை ஏற்றும் விழாவாக உலகத் தமிழர்கள் அனைவரும் கொண்டாடவேண்டும். பகுத்தறிவுக்கு ஒத்த, நன்னம்பிக்கை விழா ஒன்று, இன்று தமிழர்களுக்குத் தேவைப்படும் சமயம் இது. மனிதது உளவியல் தன்னம்பிக்கையோடு கூடிய இறை நம்பிக்கையுமாக இருப்பதால், இதை 'அலட்சியமாய்க்' கேலிக்குரியதாகப் பேசாமல், காலத்தினால் செய்யும் 'ஒரு தமிழர் புரட்சியியக்கமாக' உடனே தொடங்குவேமாக! அதற்கான தொடக்கத்திற்கு, இப்போதே அறிஞர்கள் கூடித்திட்டமிட்டு, மக்களுக்கு அறிவிப்பது பயனுடையதாகும்.

உள - 3

(தினமணி: 5-1-2002)

# 8. ‘வாடிக்கையாளர்களுக்காக நாம்’

நம் நாட்டு அரசுப் பொது நிறுவனங்கள், அலுவலகங்கள் அனைத்திலும், “வாடிக்கையாளர்களுக்காக நாம்” என்ற இந்தக் குறிக்கோள் வாசகம், எழுதி வைக்கப்பட வேண்டும். இதன் பொருள், அங்கு வேலை செய்யும் எல்லோருக்கும் நன்கு தெளிவாக, மனங்கொள்ளும்படி விளக்கப் பட வேண்டும். இதற்கான வகுப்புகள், வாரந்தோறும் நடத்தப்பட வேண்டும். இவ் வாசகம் வெறும் வாய்ப்பேச்சு வாசகமாக இல்லாமல், அன்றாடம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அது மட்டுமன்று; நடைமுறையிலிருக்கிறதா என்று மேலாளர்கள், பொதுமக்கள், நாள், வார, மாத இதழ்கள் எல்லாம் கண்காணிக்கவும் வேண்டும்.

இன்று மின் வாரியத்தில், மின் கட்டணம் கட்டும் கடைசிநாள். நீண்ட சாரிசாரியாக ஆணும் பெண்ணும் கட்டும் இடத்தெதிரே வந்து நிற்கின்றனர். சீக்கிரம் கட்டிவிட்டு வேலைக்குப் போகலாம், மற்ற வேலை பார்க்கலாம் என், காலை 9 மணி முதல் வந்து நிற்பவர் பலர். பத்து மணிக்கு அலுவல் தொடங்க வேண்டும். பத்து ஐந்திற்கு ஒருவர், பத்தேகாலுக்கு மற்றவர் வருகிறார்கள். மற்றொருவர் பத்தரை வரை வரவே இல்லை. ஒரே தர்பார், சொந்தப் பேச்சு, சிரிப்பு, வெற்றிலை போடத் தொடங்குகிறார். வராதவர்க்கும் வந்தவரே பார்ப்பாராம்; இது அவர்களுக்குள் உடன்பாடாம்! எதிரே வரிசையில் நிற்பவர்களை அந்த இருவரும் பார்க்கும் பார்வையே,எதிரிகளைப் பார்ப்பது போல் இருக்கிறது! “சில்லரை இல்லாமல் ஏன் வந்தாய்! போ! மறுபடியும் கியூவில் வா” என்று, இது போலப் படுத்தும் பாடுகள் மிகப்பல!

இத்தனை பேரும் மின்சாரத்தைப் பயன்படுத்துவதால்தான், அவர் வேலை பெற்று, தன் குடும்பம் தழைக்குமாறு வாழ்கிறார். அவர்களோ அரசுக்கு - வாரியத்துக்குப் பணம் கட்டவே வந்துள்ளார்கள்! சண்டை போடவோ, கொள்ளையடிக்கவோ வரவில்லை!

அன்பாகப் பேசி, சில்லரை உதவி, கூடிய உதவியைச் செய்து பணம் கட்டுபவர்களை மன மகிழ்ச்சியோடு வழியனுப்ப வேண்டிய இவர்களில் சிலர், 'வெறிபிடித்ததோ' என எண்ணுமாறு, எரிந்து விழுவதை அடிக்கடி பார்க்கலாம்.

இவர்களுக்குத்தான் அந்தப் பாடம் 'வாடிக்கையாளர்களுக்காக நாம்' என்ற பாடம் விளக்கமாக நடத்தப்பட வேண்டும்.

தொலைபேசித் துறைப் பணியாளர்கள், அதைப் பயன்படுத்துபவர்கள் மனத்தைச் சித்திரவதைப் படுத்தத் தவறுவதே இல்லை. சாக்குப் போக்குச் சொல்லிக் காலம் நீட்டித்து, ரொட்டித் துண்டுக்கு மட்டுமே வாலாட்டும் பழக்கம்போல, காசுக்காகவே அலையும் ஒரு சிலர் இருப்பதால், அந்தத் துறையோ வாடிக்கையாளரை வாட்டும் துறையாக உள்ளது. அத்தகைய பணியாளரைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ வழியே இல்லாததால், சீர் கேடுகளை எல்லோரும் பார்த்துக் கொண்டுள்ளனர். கல்கத்தாவில் கையூட்டே தர விரும்பாத ஒரு பொறியாளர், இறுதியில் தற்கொலை செய்து கொண்ட செய்தி, எதைக் காட்டுகிறது? இத்தகைய மனம் குறுகிய பணியாளர்களைக் கட்டாயப்படுத்தி, வகுப்புக்கு அழைத்து, "யாரால் நம் துறை இயங்குகிறதோ, யாருக்காக நாம் வேலை செய்கிறோமோ அவர்கள்தான் பொது மக்கள்! அவர்கள்தான் நம் எசமானர்கள்! அவர்களை மதிப்பது நம் கடமை! அவர்களுக்குக் குறிப்பறிந்து உதவவேண்டும். நம்மைத் தண்டிக்கக் கூடிய மேலாளர், அதிகாரிகளுக்கு மட்டுமோ, நமக்குக் காசு போடக்கூடிய சிலருக்கு மட்டுமோ நாம் கடமைப்பட்டவரல்லர். நாம் தொலைபேசி வைத்திருக்கும் எல்லோருக்கும் கடமைப்பட்டவர்" என, இவ்வாறு குடிமைப் பயிற்சி போலக் கடமைப் பயிற்சி கற்பிக்க வேண்டும.

அஞ்சலகங்களுக்குள் நுழைந்தால், கேட்கவே வேண்டாம். அங்குச் சரியான வழிகாட்டுதல் எழுதி வைக்கப்படவே மாட்டாது. "ஐயா! சிறு சேமிப்பில் பணம் கட்டினேன். முதிர்ச்சி அடைந்துவிட்டது. எங்கே பணம் பெற..." என்று ஒருமுறை கேட்க நேர்ந்தது. எதிரே அமர்ந்திருந்தவர் முகத்தில் சலனமே இல்லை; பேச்சே இல்லை; உயிருள்ளதற்கான மெய்ப்பாடு எதுவுமே இல்லை. எதிரே ஒரு சுவரைப் பார்த்து நாம் பேசினால், அந்தச் சுவரில் ஒரு வேளை எதிரொலி எழலாம். இதில் அதுவும் இல்லை. பக்கத்தில் ஒரு பெண் அலுவலர் வந்து அமர்ந்ததும் அவர் குழைந்ததைப் பார்த்தே, அவர் ஓர் உயிருள்ள 'ஜீவனே' என்று உணர்ந்தேன். நான்

நாட்டுக்கும் வீட்டுக்கும் நலம் தரும் சிறு சேமிப்பில் பணம் கட்டி, மீண்டும் கட்டச் சென்றிருப்பவன். எனக்கு அரசு அலுவலகம் தரும் மதிப்பு, மரியாதை இது! நம்மைத் தூக்கி வைத்துக் கொண்டாடவா கேட்கிறோம். நாம் செய்யும் ஒரு பயனுள்ள செயலை ஊக்கப் படுத்தாமல், “யாரோ வந்து விட்டானே! கதை படிப்பது போச்சே! வேலை கொண்டுவந்துவிட்டானே!” என்று பொருமும், கறுவும் பணியாளர்களையே நூற்றுக்குத் தொண்ணூறு பேராகப் பார்க்கிறோம்.

‘நரி வலம் போனால் என்ன? இடம் போனால் என்ன? கடிக்காமல் போனால் போதும்!’ என்றநிலை தான் பெரிதும் வருமானவரி அலுவலகத்தில், வணிகவரி நிலையத்தில், உரிமம் வழங்கும் இடங்களில் எல்லாம் எங்கும்! ஊழல் பணம் பறித்தல் ஆசையால், இதுபோல் எங்குபோனாலும் முதல் போடுபவனுக்கு, தொழில் நடத்துபவனுக்கு, வாணிகம் செய்பவனுக்குச் சங்கடம், துன்பம், மன உளைச்சல், தீராத துயரம்! நம் நாட்டில் பொது நிறுவனங்கள், மக்களை வாழவும் விடுவதில்லை; சாகவும் விடுவதில்லை!

‘வாடிக்கையாளர்களுக்காக நாம்’ என்று, இவர்களுக்குப் பாடம் நடத்தும் போதும், வாடிக்கையாளர்களில் ஏமாற்றுபவர் இருந்தால், வஞ்சகம் செய்பவர் இருந்தால், அவர்களை மரியாதையாக எவ்வெவ்வாறு நடத்தித் திருத்தவேண்டும்; திருத்த முடியாதவர்களை என்ன செய்ய வேண்டும் என்பதையும் கற்பிக்க வேண்டும்; அதாவது இவர்கள் ஆள்பவர் சார்பாளர்களாதலால், வாடிக்கையாளர்களை நடத்தும் முறையில், அவர்கள் தாமாகவே திருந்துமாறு சட்டங்களும் விதிகளும் நடத்தும் முறையும் இருக்க வேண்டும்.

வளர்ந்த நாடுகளில் வாடிக்கையாளர்களை மிகவும் மதிக்கிறார்கள். அவர்களுக்குத் துன்பம் வராமல் காப்பதுடன், கூடியவரை உதவுகிறார்கள். இந் நெறிமுறையில், வாடிக்கையாளர் தவறு செய்ய எண்ணாத அளவு சூழலை, மன உணர்வை உண்டாக்குகிறார்கள். அதற்கேற்றவாறு நிருவாக நடைமுறைகளை அங்கு அமைத்துள்ளனர்.

அரசுடைமையாக்கிய இருபத்து இரண்டு வங்கிகள் சேர்ந்து, ‘வாடிக்கையாளர் தினம்’ ஒன்றை மதுரையில் கொண்டாடினர்.

அன்று வாடிக்கையாளர்கள், மனம் திறந்து பேச வாய்ப்பளிக்கப் பட்டது. மிகவுயர்ந்த பதவியிலிருந்த ஒருவர், வட நாட்டிலிருந்து ஓய்வு பெற்று மதுரைக்கு வந்துவிட்டார். அவர்தம் வங்கிக் கணக்கு மாற்றலில் சில

சிக்கல்கள். அதனால் அவர் அடிக்கடி வங்கிக்குப் போக நேரிட்டது. அவரை ஒரு 'தலைவலி' என்றே, அந்த அரசுடைமை வங்கியினர் நடத்தியதை அவர் விவரித்தபோது, 'போதுமடா சாமி தொல்லையென்று', இந்தச் சிறிய விசயத்திற்காக அவர் வடக்கேயே போக எண்ணியிருப்பதையும் கேட்ட போது, கண்ணீரே வந்து விட்டது.

இவ்வாறு நூறு உதாரணங்கள் சொல்லலாம்; சான்றுகள் காட்டலாம். நாளும் கண்ணெதிரே நடப்பன இவை! ஒரு பேருந்து நடத்துநர், பயணிகளை இம்மியளவும் மதிப்பதில்லை. அந்தப் பேருந்திற்குள் அவர் புலி; பயணிகள் ஆட்டுக்குட்டிகள்! பயணிகள் என்ற முயல்களை விரட்டியடிக்கும் சிங்கம் அவர்!

சில்லரை கேட்டால், அவர் சீறிப் பாயும் வேகம், கொடிய உயிரிடமும் காணப்படாது. இந்தப் பயணிகளால்தானே பேருந்து ஓடுகிறது; இவர்கள் தரும் பணம்தானே நம்மை வாழ வைக்கின்றது; இவர்கள்தானே உண்மையில் நம் எசமானர்வள்; இந்தப் பேருந்தின் உரிமையாளர்கள் என்று ஒருவர்கூட உணர்வதில்லை; உணர்த்துபவர்களும் இல்லாததுதான் கொடுமை!

அரசுடைமை அலுவலகம், பொது நிறுவனம் எப்படி நடைபெற வேண்டும்மென்ற கல்வியை ஒரு பாடமாக, பாடத்திட்டம் வகுத்து, உடனடியாக நாடெங்கும் நடத்தவேண்டும். கல்வியும் விவரமும் தெரிந்தால், பலர் திருந்தி விடுவர். இயல்பிலேயே - பிறவியிலேயே கெட்ட குணம் மிக்கவர்களை மட்டும் தனியே திருத்த நேரலாம்.

'வாடிக்கையாளர்களுக்காக நாம்' என்ற வாசகம் ஒவ்வோர் அலுவலக வாசலிலும், ஒவ்வொரு பேருந்திலும் பளிச்சென்று அச்சடித்து ஒட்டப்பட வேண்டும்.

ஆயிரக்கணக்கான தொழிற்சங்கம் வைத்திருப்பவர்கள், உரிமைக்கு ஆர்ப்பாட்டம் நடத்துவது போலக் கடமைக்கு வகுப்பு நடத்த வேண்டும். உரிமையை மட்டும் வற்புறுத்திக் கடமையை உணர்த்தாமலே விட்டதால்தான், கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று கூறப்படுகிறது.

உரிமைக்கு முன் கடமையைச் செய்து உரிமைக்குப் போராடு என்று, கடமை பற்றிய காரல் மார்க்சின் கருத்துகளையும் தொகுத்துப் பாடமாக்கி, இச் சங்கங்கள் பாடம் படிக்க வேண்டும். அணுகுண்டு வெடித்ததைப் போல, இது ஒரு அவசரமான பணி. இதில் வெற்றி பெற்றால், உலக நாடுகள் பொருளாதாரத் தடைகள் விதிப்பதாகக் கூறும் அச்சுறுத்தல்களுக்கு இடமே இராது.

(தினமணி : 22-5-1998)

# 9. முன்னேறும் காலும் எது?

என் நண்பர் ஒருவர், தம் மகனுக்கு அரசு உத்தியோகம் ஒன்று 'வாங்க'ப் படாத பாடு பட்டார். அவர் அரசுசார் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர். அதன் 'சுகத்தை' முழுவதும் அனுபவித்தவர். இப்போது அரசியல் கட்சிகளைப் பிடித்து - அவரைப் பிடித்து இவரைப் பிடித்துக் கடைசியில் அமைச்சரையும் பிடித்து, வேலையை 'வாங்கி' விட்டார். இனி ஒரு கவலை இல்லையாம்; பேசாமல் குடும்பக் காரியங்களைக் கவனித்துக்கொண்டு வாழலாமாம். வேலை பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் சம்பளம் என்ற மானியம் தவறாது கிடைக்குமாம். இன்னும் தொழிற்சங்கத்தில் ஈடுபட்டுக் கொஞ்சம் 'கம்யூனிசத்தையும்' கண்டவர்போல் பேசி நடந்து கொண்டால், தட்டிக் கேட்க ஆளே இராதாம்!

அவருக்கு அரசுப் பதவி என்பது 'அரச பதவி' போன்றது! நம் பாரத நாட்டில் இவ்வாறு 'அரச பதவி' வகிப்பவர்களே நூற்றுக்குத் தொண்ணூறு பேர். ஒரு சில தொழிற்சங்கங்கள் இத்தகைவர்களைக் காப்பாற்றவே அரும் பாடுபடுகின்றன.

ஒருவர் அரசுக் கல்லூரியில் வேலை தேடி அரும்பாடு பட்டார். வேலை வாய்ப்புப் பதிவு அலுவலகம், அமைச்சர் வீடு, அதிகாரிகளின் அலுவலகம் என்று, அவர் அலையாத இடமும் இல்லை; அலையாத நாளும் இல்லை. இறுதியில் எப்படியோ வேலை கிடைத்துவிட்டது. அவர் அந்த அளவு, படிக்கும் காலத்தில் உழைத்ததில்லை; படிப்பில் அக்கறை செலுத்தியதுமில்லை. அவரைவிட நன்றாகப் படித்து, முதன்மை பெற்றுத் தேர்ச்சி பெற்றவர்களெல்லாம் தவித்துக்கொண்டிருக்க, அரசியல் நாட்டமிருந்ததால் இவருக்கு மட்டும் வேலை கிடைத்துவிட்டது. இப்போது அவர், வேலை கிடைத்த அன்றிலிருந்து 'கவலையற்ற' மனிதராகிவிட்டார்.

இனி யாரும் அவரை அசைக்க முடியாதாம்! படிப்பது, பாடம் நடத்துவது இவை யாவுமே அவருக்குத் துணை வேலைகளாகிவிட்டன. அவரோடு, இவ்வாறு வேலை பெற்ற, சிறிது கல்வியறிவையும் வளர்த்துக் கொண்டவர்கள் பட்டிமன்றம், வழக்காடு மன்றம் என்று போய்ச் சம்பாதிக்கிறார்கள். ஓய்வுக்காகக் கல்லூரிக்கும் போகிறார்கள். இவர் அந்த அளவு படிப்பறிவற்றவர். அதனால் ஏதாவது 'பிசினெசில்' ஈடுபடத் திட்டமிட்டார். வேறு ஒரு தேர்வுநிலை விரிவுரையாளர், எருமை மாடுகள் வைத்துப் பால்பண்ணை நடத்துகிறார்; மற்றொரு பேராசிரியர், 'பங்கு வாணிகம்'; வேறொருவர் 'ஆங்கில மருந்துக்கடை' என வெவ்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

எந்த நேரமும் படிப்பது, கருத்தரங்குகளில் கலந்து கொள்வது, நூல்கள் வெளியிடுவது எனக் கல்விசார் தொழில்களிலும் ஈடுபட்டுப் பணம் சம்பாதிக்கலாமே என்றால், 'அவை எல்லாம் மலையைக் கல்லி எலியைப் பிடிக்கிற வியாபாரம்; நமக்கு ஒத்துவராது' என்பது அவர் கருத்து. இப்போது அவர் சக ஆசிரியர்களிடம் வட்டிக்குக் கொடுத்து வாங்குகிறார்; மாதச் சீட்டு நடத்துகிறார். அதற்காகவே கல்லூரிக்குப் போய்வருகிறார். இப்போதெல்லாம் கல்லூரி விடுமுறை என்றால், அவர் படுகிற மனவேதனை சொல்லி முடியாது. அவ்வளவு 'கடமை உணர்ச்சி' அவருக்கு! அது என்ன? பணம் வசூலாவது தடைப்படுமே என்ற கவலைதான் அது.

ஓர் அரசுத் தொடக்கப் பள்ளி ஆசிரியர், அவர் பக்கத்து குக்கிராமம் ஒன்றில் ஓராசிரியர் பள்ளிக்குப் போய் வருபவர். ஆனால், கைநிறையச் சம்பளம் வாங்கும் அவர், மாதத்தில் இருபது நாட்கள் தம் கிராமத்தில் பொதுக் காரியங்களில் ஈடுபடுகிறார்; சந்தையில் வியாபாரம் செய்கிறார். பள்ளி என்ன ஆனது? ஆள்வைத்துப் பிள்ளைகளை மேய்ப்பதாகக் கேள்வி. உண்மை தெரியவில்லை. மாதந்தோறும் முதல் வாரம் மட்டும் தவறாது பள்ளிக்குப் போகிறார். அவருக்கு அரச 'மானியம்' சம்பளமாகத் தடையின்றிக் கிடைத்து வருகிறது. அவருக்கு ஊரில் நல்ல பேருங்கூட!

இப்படியே ஆயிரக்கணக்கான உதாரணங்களைச் சொல்லிக் கொண்டு போகலாம். நாளும் நம் கண்ணெதிரே நடப்பவை இவை. அரசாங்க உத்தியோகத்தையும் அதுபோன்ற உத்தியோகங்களையும் இளையோர் அனைவரும் தேடி அலைவதன் 'இரகசியம்' இதுதான்! அத்தகைய பணியிடம் வாய்த்து விட்டால், பணக்கார இடத்தில் திருமணமாகும். வரதட்சிணை வரம்பின்றிக் கிடைக்கும். இவை எல்லாவற்றுக்கும், 'அசைக்க முடியாது; பணி

நிரந்தரம்; எந்த வேலையும் செய்யாமலும் அதட்டிக் கொண்டு வாழத் தொழிற்சங்க உதவி' என்பனவே காரணம். இதனால் வேலை செய்பவனும் நாளாவட்டத்தில் கெட்டுப் போகிறான்.

முதலாளிகள் 'சுரண்டுகிறார்கள்' என்பதை ஒப்புக் கொள்வோம். தொழிலாளிகள் வேலை செய்யாமல் சம்பளம் வாங்குவது, கடமையைச் செய்யாமல் அரசுப் பணத்தை வாங்கிக்கொண்டே பிழைப்பது, அரசு அலுவலகங்களில் தானும் வேலை செய்யாமல் செய்பவனையும் முன்னேறவிடாமல் செய்வது எனும் இவை 'சுரண்டலாகாவா?' அரசுப் பணியில், வங்கியில், ஒரு பெரிய தொழிற்சாலையில் வேலை கிடைத்தபின், இனித் திறமை பற்றிக் கவலை இல்லை; கடமையைச் செய்தே தீர வேண்டுமென்பதில்லை; பண்புடன் வாடிக்கையாளர்களிடம் நடந்து நற்பெயர் வாங்க வேண்டுமென்பதில்லை; கெடுதல் செய்யலாம் - ஊழல் புரியலாம் - துணைத் தொழில்கள் பார்க்கலாம் என்ற நிலை இருக்கலாமா? ஆண்டுகள் கழியக் கழிய ஊதிய உயர்வு தானே வரும்; பதவி உயர்வு தேடி வரும் என்று இருப்பது என்ன நியாயம்?

சிலர் அரசியல் ஆதரவு தேடி, கடமை உணர்வு மிக்கவர்களைக் கீழே தள்ளிவிட்டு, அவர்களின் மீது ஏறிச் சவாரி செய்தால் திறமை - கடமை - பண்பு வளருமா? தன் கட்சிக்காரரா என்று பார்ப்பதும் தவறல்லவா? ஒரு பொது உண்மையை நாம் மனங்கொளல் வேண்டும். திறமையையும் கடமையையும் மதிக்க மதிக்கவே அவை வளரும்; திறமையுள்ளவர்களையும், கடமையுணர்ச்சி மிக்கவர்களையும் தேடித்தேடி, இனங்கண்டு ஊக்கம் தந்தாலே அவை வளரும்; நாடு விரைந்து முன்னேறும்.

திறமையற்றவனையும், கடமையைக் கழிப்பவனையும் வாங்குகிற ஊதியத்துக்கு நியாயமாக வேலை செய்யாதவனையும் கண்டுகொண்டு, அவனைத்திருத்துகிற முறையிலேனும் கண்டித்தும், தண்டித்தும் - குறைந்த எல்லையாகப் பதவி உயர்வு, ஊதிய உயர்வுகளை அவன் திருந்துகிறவரை நிறுத்திவைக்க வேண்டும்; இல்லாவிடில் திறமையும் கடமையும் எவ்வாறு வளரும்?

அரசியல் கட்சிகள் வாக்கு வங்கிகளையே நம்பி, இத்தகைய ஊழல் பேர்வழிகளையே தட்டிக் கொடுப்பது தவறல்லவா? பதவி இருந்தாலும் போனாலும் நியாயத்தைக் காப்போம் என, அரசியல் கட்சிகள்

முன் வருவது எக்காலம்? அரசியல் சூழ்ச்சிகளுக்காக ஆட்சியை இழக்கவும் தயாராகும் கட்சிகள், நீதியின்படி நடந்து பதவியை இழந்தாலும், அதையன்றோ 'வெற்றி' எனக் கருதவேண்டும்?

ஒரு பெரிய பதவியில் இருப்பவர் முதல் தொழிலாளி - எழுத்தர் வரை, தன் பணிக்கும் அதன் பயனுக்கும் ஏற்பவே, தனக்கு உயர்வுகள் உண்டு; தவறினால் தன் உயர்வு தடைப்படக் கூடும் என்பதைப் புரிந்து கொண்டிருப்பதால், மிக ஒழுங்காகக் கட்டுப்பாடாக வேலை செய்வதை முன்னேறிவரும் நாடுகளில் பார்க்கிறோம்.

ஒரு காலத்தில் நகரப் பேருந்துகள் நிறுத்தங்களில் நிற்பதில்லை. கையைக் காட்டினாலும் பார்க்காதது போல் விரைந்து போய்விடுவார்கள். பிறகு வசூலில், குறிப்பிட்ட விழுக்காடு 'ஊக்கத்தொகை' உண்டு என்று அறிவித்தது முதல், கையைக் காட்டும் முன்பே நிறுத்தத் தொடங்கினார்கள். இப்போது எத்தனை கூட்டம் ஏறினாலும், முணுமுணுப்பதே இல்லை.

அதுபோலப் 'பணி நிரந்தரம்' என்பதைச் சில எல்லைகளுக்குட்படுத்த வேண்டும். பண்புள்ள திறமையாளர்களை, கடமையுணர்ச்சி மிக்கவர்களை, வேலையே கண்ணுங்கருத்துமாய் இருப்பவர்களைக் கண்டுகொள்ள வழிவகை காணவேண்டும். அவர்களைத் தட்டிக்கொடுக்க, ஊக்கப்படுத்த பதவியுயர்வும் ஊதிய உயர்வும் தர, 'கடமையுணர்ச்சி' அற்றவரிலும் மேம்படச் செய்ய ஆவன அனைத்தும் செய்தாக வேண்டும்.

தொழிற்சங்கங்கள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். அறம் வளர வளர அல்லவை தேயும். கடமையுணர்ச்சியை ஊக்கப்படுத்தினால்தான், அவ்வுணர்ச்சி வளரும். திறமைக்கு மதிப்புக் கொடுத்தால்தான், திறமை வளரும். வாடிக்கையாளர்களிடம் நன்மதிப்பு பெறுபவர்களைத் தட்டிக் கொடுத்தால்தான், தொழிலகம் முன்னேறும்! அல்லாதவை சிறுகச் சிறுகத் தளர்வுறும். நாட்டு முன்னேற்றம் - திறமை - கடமை - பண்பு எனும் இவற்றின் முன்னேற்றத்திலேயே அடங்கியிருக்கிறது.

எனவே, 'பணி நிரந்தரம்' என்பதைச் சில எல்லைகளுக்குட்படுத்தி, திறமை - கடமை - பண்பு இவற்றுக்கு முன்னுரிமை தருமாறு விதிகள், சட்டங்கள், மனப்பான்மை யாவும் மாறுங்காலமே நாடு வளர்ந்து முன்னேறும் காலமாகும்.

(தினமணி : 26-8-1998)

# 10. மக்களாட்சியில் மக்களின் பங்கு

அமெரிக்காவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளக் கூடாதன பலவுள. எனினும், கற்றுக்கொள்ள வேண்டியனவும் சிலவுள. மக்களாட்சி என்பது உண்மையிலேயே நடைபெற, அங்குச் சில நல்ல கூறுகள் பின்பற்றப் படுகின்றன.

அங்கு அரசு மூவகைப்படும் : நடுவணரசு (Federal), மாநில அரசு (State), உள்ளாட்சி அரசு (Local). இவற்றுள் இந்த உள்ளாட்சி அரசின் சிற்றெல்லை தொகுதி அல்லது வார்டு. அதை ஆளும் பொறுப்பினர் அதன் உறுப்பினர் அல்லது கவுன்சிலர். இங்கே தொடங்கும் அரசு, மக்களுடன் நேரடித் தொடர்பு கொள்கிறது; பெரிதும் - ஒரு வகையில் மக்களால் ஆளப்படுகிறது. எவ்வாறு என்பதைக் காண்பது, நமக்கு நமது போக்கிலும் 'மக்களாட்சியை' மலர வைக்கப் பயன்படக்கூடும்.

ஒரு குழந்தை படிப்பைத் தொடங்கும்போது தன் பெற்றோர் பெயர், வீட்டு முகவரி, பள்ளி முகவரி, பள்ளிக்குச் செல்லும் வழி, தொலைப்பேசி எண்கள் என இவையே முதலில் கற்பிக்கப்படுகின்றன. பிள்ளைகளுடன் பெற்றோர் மூன்று, நான்குமுறை பள்ளி சென்று திரும்பி, அக்குழந்தைகள் தாமே சென்று திரும்பும்படியான அனுபவத்தை ஏற்படுத்தச் சொல்கிறார்கள்.

அது படிக்கும் முதல் பாடங்கள் - பூகோளம், சமூகவியல், அறிவியல், வரலாறு எல்லாம் அதன் ஊரைப்பற்றித்தான். ஊர், நகர், வட்டாரம், 'கவுண்டி' எனப்படும் கோட்டம், மாநிலம், நாடு, உலகம் என இப் பாடங்கள் புள்ளியிலிருந்து வட்டத்தின் மேல் வட்டமாய் விரிவது போல் கற்பிக்கப் படுகின்றன.

தனது ஊர், பகுதி பற்றி முழு விவரம் அறியாத பிள்ளை வளர்ந்து, தன்பகுதியைத் தான் ஆள்வது எவ்வாறு? திடீரென்று மதுரை வாழ் ஒருவரை

நிறுத்தி, 'மதுரையின் பரப்பளவு என்ன? மக்கள் தொகை எவ்வளவு? எத்தனை பள்ளிகள் - என்னென்ன வகைப் பள்ளிகள் - அவற்றின் தரம் என்ன? எத்தனை மருத்துவமனைகள் உள? ஆபத்தில் யார்யாருக்கு, எந்த எந்த எண்களில் '.:.போன்' செய்ய வேண்டும்? சாலை வசதிகள் யாவை? ஊரின் அமைப்பு யாது? மின்வசதி, எங்கிருந்து எவ்வாறு கிடைக்கிறது? குடிநீர் வசதி யாது?' என இவைபோல் அந்த நகர் பற்றிக் கேட்டால், அவருக்குத் திகைப்பாகவே இருக்கும்.

அமெரிக்காவில் செய்தி இதழ்களின் பங்கு பெரிது. அவை மக்களின் பொது அறிவுச்சாலைகளாக, அவ்வப்பகுதித் தகவல் தரும் உடனடிச் சாதனங்களாகப் பயன்படுகின்றன. அந்நாட்டில் இன்று 1700 நாளிதழ்கள் உள்ளன. இவை அறுபது மில்லியன் (ஆறு கோடி) பிரதிகள் விற்பனையாகின்றன. நாடு தழுவிய நாளிதழ்கள்; பயணத்தின்போது பயன்படுவன; மாநிலம் - வட்டாரம் - நகர்களுக்குரியன; பல்கலைக்கழகங்கள் வெளியிடுவன எனப் பலவகையின. பெரிய பல்கலைக்கழகங்கள் பல, தத்தம் உள்வட்டச் செய்திகளுக்கென நாளேடு, வார ஏடுகளை வெளியிடுகின்றன. 7500 வாரம் ஒரு முறை - இருமுறை இதழ்கள் உள. இவைதவிர பத்தாயிரம் வானொலி நிலையங்கள், 1400 தொலைக்காட்சி நிலையங்கள் உள. எண்ணிக்கையன்று பெரிது; இவை மக்களுக்குப் பயன்படும் விதமே கருதுதற்குரியது. பெரும்பாலானவை தனியார் நிறுவனங்களே. அதனால் மக்கள் சேவையில் இவை கடும் போட்டியிடுகின்றன.

கலிபோர்னியா மாநிலப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறை; கொலம்பஸ் கல்வி வட்டாரப் பள்ளிகளின் தரம் பற்றிய வரைபடச் செய்தி; பிராங்ளின் வட்டத்தில் கோழிக்கறித் தொழிற்சாலையினால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு - இவ்வாறு முதல் பக்கத் தலைப்புச் செய்திகள், மக்கள் தொடர்பானவை இடம் பெறுகின்றன. அரசியல் தலைவர்களின் வாக்குறுதிப் பேச்சுகள் மூன்றாம் பக்கம் - ஏழாம் பக்கத்துக்குப் போகின்றன.

அங்கு நடப்பதை, நம் நாட்டுப் போக்கில் சொன்னால், ஒரு 'வார்டு' - ஊர்- நகரில் வாழ்பவருக்கு - அங்கு ஆட்சி நடைபெற மத்திய, மாநில அரசுகளிடமிருந்து கிடைக்கும் வருமானம் எவ்வளவு? என்னென்ன வகையில் செலவுகள் உள? திட்டங்கள் என்ன? அவற்றுக்கான பணம் எவ்வளவு? எங்கிருந்து வருகிறது? எவ்வாறு செலவாகிறது? அங்கு எத்தனை பள்ளிகள் - மருத்துவமனைகள் - நூலகங்கள் - பொதுநலச் சங்கங்கள் -

அரசு அலுவலகங்கள் உள? அவற்றின் தரவரிசை யாது? - இவ்வாறு அங்குள்ள பலருக்கு, படித்தவருக்கு, உள்ளாட்சி உறுப்பினர்கட்கு, பல்வேறு குழுவினர்க்கு நன்கு தெரிகிறது. எடுத்துக்காட்டுக்குச் சொன்னால், ஒரு சிறு தொகுதியில் பள்ளி மேற்பார்வைக்குழு, மகளிர் மேம்பாட்டு அமைப்பு, மருத்துவ மனைக்குழு, திட்டச் செலவுக் கண்காணிப்புக்குழு என இவ்வாறு பலவகைக் குழுக்கள் இயங்குகின்றன. நம் நாட்டில் ஒவ்வொரு 'வார்டு' - தொகுதியிலும் அதன் உறுப்பினர் இவ்வாறு சில, பல குழுக்களை அமைக்க வேண்டும். ஏற்கெனவே உள்ள சங்கம் - அமைப்புகளையும் பயன்படுத்த வேண்டும்.

இங்ஙனம் ஆகும்போது, தனி ஒரு 'கவுன்சிலர்' ஆட்சியாகாமல், அது மக்களின் ஆட்சியாக மலர வாய்ப்புள்ளது.

இதற்கு அங்குச் செய்தி இதழ்கள் துணை நிற்கின்றன. ஊராட்சியாயினும் நகராட்சியாயினும்அங்கு நடக்கும் யாவும் இதழ்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. மேற்கூறியவாறு பல குழுக்கள் - அமைப்புகளும் அவற்றின் தலைவர், செயலர் உறுப்பினரெனப் பலரும் இடம் பெறுவதால், சிறிய தொகுதியளவில் பலர் அத்தொகுதி நடப்பு, வரவு - செலவு பற்றி நன்கு அறிந்து கொள்ள நேர்கிறது.

எடுத்துக்காட்டிற்குச் சொல்வதானால், ஒரு குறிப்பிட்ட தொகுதிசார் பள்ளிகளின் நடப்புப் பற்றிய புள்ளிவிவரங்களை, இந்த இதழ்களில் காணலாம். ஆசிரியர் எவ்வெவ்வாறு விடுமுறை எடுத்தனர், மாற்று ஏற்பாடு என்ன என்பது போன்ற விவரம் வெளியாகிறது. ஒரு குறிப்பிட்ட கல்வி வட்டாரப் பள்ளிகளில் அரசுப் பொதுப்பள்ளி, தனியார் பள்ளி, தனிப்பட்ட சமயச் சார்ப்புப் பள்ளி - இவற்றில் இந்த ஆண்டு சேர்க்கை விகிதம் என்ன என்ற செய்தி, பத்திரிகையில் வருகிறது. தேர்ச்சி விகிதம் வரைபடம் போட்டுக் காட்டப் படுகிறது. பள்ளிகளின் தரமும், தரமின்மையும் முதல் பக்கத்தில் வரைபடம் மூலம் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

நம் நாளேடுகள் ஊழல்களை வெளிப்படுத்த - கொலை, கொள்ளை அனைய அதிர்ச்சிச் செய்திகளை வெளியிடவே பெரிதும் முந்துகின்றன. அங்குப் பகுதி பகுதியாகத் தொகுதி முதல் அனைத்து நிலைகளிலும் நாட்டு நடப்பை - திட்ட வரவு செலவை - முன்னேற்ற விகிதத்தை - குறைகளின் பெருக்கத்தை வெளியிட்டு, மக்கள் தங்கள் தொகுதி - பகுதியின் நிலைகளை

நன்கறியச் செய்கின்றன. மக்கள் ஆட்சியில், மக்களுக்கு அனைத்து விவரமும் தர வேண்டுமல்லவா? மக்கள்தானே எசமானர்கள்? தேர்தல் நேரத்தில் மட்டும்தானா அவர்கள் மேற்பட்டவர்கள்?

ஊழல்கள் நடந்து முடிந்து, அதைப் புலனாய்வது இங்கு 90 விழுக்காடு உள்ளது. அங்கு ஊழல் நடக்கவொண்ணா வகையில், வரவு செலவுகள் யாவும் புள்ளிவிவரமாக அலசி ஆராய்ந்து, அடிக்கடி வெளிப் படுத்தப்படுகின்றன. அதனால் குற்றங்கள் நடக்கும் முன் தடைப்படுத்தப் பட வாய்ப்புளது. ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டின் போது, மதுரை நகரை அழகுபடுத்தப் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. அவை யாவை? நிதி ஒதுக்கீடுகள் எவ்வளவு? எந்த அளவு செலவழிக்கப்பட்டன? நிறை வேறியவை யாவை? யாருக்கேனும் இவை தெரியுமா? அங்கு இவை போல்வன வெளிப்படையாக அறிவிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பலதுறை அறிஞர்கள் யாவரும் தத்தம் சுற்றுப்புறம் சார்ந்த சிக்கல்கள் - நிகழ்வுகள் - நோய்கள் - குறைபாடுகள் - மக்கள் ஒழுக்க நிலைகள் இவற்றையே ஆராய்ந்து முடிவுகளை வெளிப் படுத்துகின்றனர். அவற்றை இதழ்கள் புறக்கணிக்காமல், நன்கு வெளிப் படுத்துகின்றன. இதனால் ஆய்வு முடிவுகள் மக்களுக்கும் அரசுக்கும் போய்ச் சேருகின்றன.

நம் நாட்டில் அடிக்கடி பல திட்டங்கள் கோடிக்கணக்கில் அறிவிக்கப்படுகின்றன. கடந்த கால முதல்வர் மாவட்டந்தோறும் பல கோடி அளவில், திட்டங்களை அறிவித்தார். அமெரிக்காவிலெனில், ஒரு பேராசிரியர், "திட்ட அறிவிப்புகளும் அவற்றின் முடிவும்" என எடுத்து ஆராய்ந்து, மக்களுக்குப் பயன்படும்படியான தகவல்களைத் தருவார். மற்றொருவர், "திட்டங்களும் மக்கள் பங்கேற்பும்" என எடுத்துக்கொண்டு, இவற்றில் மக்களின் ஒத்துழைப்பைக் கணித்தறிவார். இங்கு ஒரு சிலவேனும் இத்தகைய ஆய்வுகள் நடைபெறவே காண்கிறோம். ஆனால், செய்தி இதழ்கள், அவற்றைப் பெருமைப்படுத்தி, அனைவரும் அறியுமாறு முழுமையாக வெளியிடுவதில்லை.

இங்கு ஒரு கெட்டகுணம் இருக்கிறது. யாரேனும் அமைச்சர், அவர் இவர் என்று பதவியில் இருந்தால்தான், அவர் அரைகுறையாக என்ன பேசினாலும் பெரிதாக வெளியிடுகிறோம்; மற்றவர் மிக ஆழமான, நுட்பமான, பயன்பாடுமிக்க கருத்துகளைச் சொன்னாலும், 'அவரும் பேசினார்' எனச் சுட்டுவதோடு விட்டுவிடுகிறோம். பேச்சின் சாரம் நாட்டுக்குப் பயன்படுவதைக் கருதாமல் ஆளையும், பதவியையும் கருதுகிறோம்.

ஒரு நாட்டு அரசின் சிற்றெல்லையாக ஊராட்சி, நகராட்சி அவற்றின் உட்பிரிவுகளைக் குறிப்பிடலாம். அங்கு மக்களாட்சி வேர் பிடித்து வளர வேண்டும். அதன் உறுப்பினர்களுக்கு, 'நல்லாட்சி செய்தல்' பற்றிய பயிற்சி தருதல் அவசியம். பலரும் உறுப்பினராக வாய்ப்புளது. அவர்கள் ஆளும் விதம், நெறிமுறை பற்றி எதுவும் அறியார். தம் பொறுப்புகளை அவர் உணர வேண்டுமேல், அவருக்குத் தக்க பயிற்சியளிப்பது முக்கியம்.

இரண்டாவதாக, தொகுதிதோறும் பல குழுக்கள் - சங்க அமைப்புகள் உருவாக வேண்டும். நாட்டாட்சியில் பல்வேறு அமைச்சுத் துறைகள் அமைவனபோல, இச்சிறு தொகுதியிலும் பல்வேறு துறைகள் சார்ந்த குழுவினர் உருவாதல் நலம். அமெரிக்கா முழுவதும் சிறுசிறு துறைமுதல் துறைப் பிரிவுகள் வரை பல ஆயிரம் சங்கங்கள் - அமைப்புகள் இயங்குகின்றன. அத்தொகுதி பற்றிய அனைத்து விவரமும் - நிறைகுறை - வரவு, செலவு யாவும் வெளிப்படையாக, விவாதிக்கப்பட வேண்டும். அனைவருக்கும் போய்ச் சேருமாறு அறிவிக்கப்பட வேண்டும். வளர்ச்சி, முன்னேற்றம் பற்றி அடிக்கடி கணிக்கப்பட வேண்டும்.

இதற்கு மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி, இதழ்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். நாள்தோறும் அரசையே பெரிதுபடுத்தாமல், மக்களைப் பெரிதுபடுத்தி - அவர்களை முன்னிலைப் படுத்தி - தலைமைப்படுத்தி - அவர்கட்கு நாட்டுநிலை, வளர்ச்சி பற்றிய அனைத்து விவரமும் போய்ச் சேருமாறு செய்திகள் வெளியிட்டும் விவரம் தந்தும் துணைநிற்க வேண்டும்.

செய்தி இதழ்கள் முதலாய மக்கள் தொடர்புச் சாதனங்கள், அரசை விட, அதிகாரிகளை விட மக்களையே முதன்மைப்படுத்தி, மதித்து அவர்கட்கு அனைத்து விவரங்களும் கிடைக்கும்படியாகச் செய்யும் காலமே, மக்களாட்சி மலருங் காலமாகும். இன்று அவை அத்திசை நோக்கித் திரும்பியுள்ளதற்கான அறிகுறிகள் உள. இது மேலும் முழுமைபெற உருவாக வேண்டும்.

ஆய்வாளர்கள், மக்களுக்குப் பயன்படும்படியான, அவ்வப்பகுதி சார்ந்த தலைப்புகளையே எடுத்து ஆராய்ந்து உதவ வேண்டும். அரசு 'பயன் தரும் பழமரமாய்' மக்கள் அனைவர்க்கும் பயன்படும். அமெரிக்காவில் இப்போக்குக் காணப்படுகிறது. ஆயிரம் குறைபாடுகளிலிருந்தாலும், வாழ்க்கைத் தரத்தில் அந்நாடு மேம்பட்டு நிற்பதற்கு, மக்களுக்குத் தரப்படும் முக்கியத்துவமே அடிப்படையாகும்.

(தினமணி : 19-11-1996)

# 11. அரசும் அதிகாரமும் மக்களுக்காகவே

குடியாட்சி என்பதன் பொருள் தெரியாமலும் 'சனநாயகம்' என்று கூறிக் கொண்டு, பழைய மன்னராட்சிப் பண்பையே கடைப்பிடிப்பதனாலும் உலகில் பெரியதான பாரத மக்களாட்சி, உண்மையான மக்களாட்சியாக மலர்ந்திலது.

குடியாட்சித் தத்துவத்தின் அடிப்படைகள் பல, சட்ட விதிகளாலும் மரபுகளாலும் இங்கிலாந்தில் உருவாயின. இன்று தேர்ந்தெடுக்கப்படும் நம் நாட்டுக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆளும் உரிமை கிடைத்த பிற்பாடும், இக் குடியாட்சி நெறிமுறைகள் பற்றிய உணர்வோ, அறிவோ சிறிதளவும் அமைவதில்லை. அத்தகைய அறிவு படைத்தவர்கள் சிலர் இருப்பினும், பெரும்பான்மையினரின் அறியாமையை நீக்காமல், மக்கள் மீது பச்சைக் குதிரைச் சவாரி செய்ய இந்த நிலை வாய்ப்பாக இருப்பதால், நமக்கு என்ன என்று விட்டுவிடுகிறார்கள்.

உண்மையான மக்களாட்சி மலருமானால், ஊழலுக்கு இடமிராது. சில சமயம் மனம் சலித்து, சர்வாதிகார ஆட்சி வந்தாலும் நல்லதென்றும், அன்னியராட்சியே இதற்கு மேலென்றும் மக்கள் பேசிக் கொள்ளக் காரணம் முழுமையாக மக்களாட்சி நடைபெறாமையே ஆகும்.

தேர்தல் நேரம் மட்டுமே மக்களாட்சியாக வெளிப்படுகிறது. மக்களிடம் கட்சிகளும் வேட்பாளர்களும், "நாங்கள் உங்களின் தொண்டர்கள்; வேலையாட்கள்; உங்களுக்குப் பணிசெய்ய எங்களுக்கு ஆணையிடுங்கள்" என்று மக்களைத் தலைவர்களாக்கி அடிபணிந்தும் வேண்டுகிறார்கள். எல்லாம் தேர்தல் நடக்கும் நாளன்று மாலை ஐந்து மணியோடு சரி. இது தொடர்ந்து வரும் பல தேர்தல்களிலும், வாடிக்கையான நிகழ்ச்சியாகவும் ஆகிவிட்டது.

ஆட்சி, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குரிய போட்டியாகத் தேர்தலை மதிக்கின்றனர். மக்களுக்குப் பணி செய்யத் தரப்படும் வாய்ப்பாக யாருமே கருதுவதில்லை. அவ்வாறு கருதினால், இத்தனைப் போட்டி, பகை, குழப்பம் எதுவும் வராது. தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பதவிகள் வரும்; காரில் பவனி வரலாம்; பணப்புழக்கம் கூடும் என்ற நினைப்பே உளது. பழைய காலத்து மிட்டா, மிராசு, சமீன் பண்ணையார்கள் நினைத்ததைச் செய்து வாழ்ந்ததை, மக்களை அடிமைகளாய் நடத்தியதை அறிஞர் அண்ணா தொடர் கதைகளாய், நாடகங்களாய் எழுதி வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். இன்று ஒவ்வொரு எம்.எல்.ஏயும் எம்.பி.யும் தேர்ந்தெடுக்கப்பட்டதும், பண்ணையார்களாக மாறிவிடுகின்றனர். அவர்கள் வீட்டில் பொதுமக்கள் கூட்டம், பெட்டி பெட்டியாகப் பணவரவு செலவுகள் - காவல்துறையினர் உட்பட எல்லாம் அவர்கள் கட்டுப்பாட்டில்!

இது எவ்வாறு மக்களாட்சியாக முடியும்!

மக்களுக்கு உடல், பொருள், ஆவியைத் தருகிறேன் என்றவர், மக்களின் உடல் பொருள் ஆவியை எடுத்துக்கொள்கிறார். மக்களுக்குச் சேவை செய்கிறேன் என்றவர், மக்களை ஆட்டிப் படைக்கின்றனர். மத அடிப்படை வாதம் பற்றிப் பேசுகிறார்கள். சாதி வெறி பற்றி வருந்துகிறார்கள். இன்று வளர்ந்துவரும் கட்சிவெறி, கட்சி அடிப்படைவாதம் மிகக் கொடுமையானது.

ஒரு கட்சியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், தேர்ந்தெடுக்கப் பட்டதும் அவர் அந்தத் தொகுதி மக்கள் அனைவருக்குமே பிரதிநிதியாகி விடுகிறார். அவர்களின் சார்பாளராய் அவர் சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் எல்லாம் பேச வேண்டுமே தவிரக் கட்சிச் சார்பாகவே வாதிட வேண்டு மென்பதில்லை. எவ்வாறு குடியரசுத் தலைவர், ஆளுநர், சட்டப்பேரவைத் தலைவரெல்லாம் கட்சிக்கு அப்பாற்பட்டவர் ஆகின்றாரோ, அதுபோலத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற்பாடு தாம் அத்தொகுதி வாழ் மக்கள் அனைவருக்கும் பொதுவென நினைத்துப் பணிசெய்வதே குடியாட்சி மரபுகளில் முக்கியமானதாகும்.

ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததும், கால காலத்திற்கு இப்பதவியைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென நினைப்பது மிகப்பெருந்தவறு. தேர்ந்தெடுக்கப்பட்ட நாள் முதல், அதிகாரம் கைக்கு வந்ததும் தங்கள் கட்சிக்காரர்களுக்கே பட்டம், பதவி, வேலை, பாதுகாப்பு என்று போவது

மாபெருந் தவறு. மக்கள் அங்ஙனம் எதிர்பார்ப்பதும் தவறு. கட்சியைச் சேர்ந்த வட்டங்களும் மாவட்டங்களும், செல்வாக்குள்ள கட்சித் தலைவர்களும் அவ்வப் பகுதிகளைத் தாங்கள் நினைத்தபடி ஆட்டிப் படைப்பதும், தங்களுக்கு முரண்பட்ட நல்லவர்களை இழிவுபடுத்துவதும், இதற்குத் தலைமைப்பீடம் அடுத்துவரும் தேர்தல்களை நம்பி இடம் கொடுப்பதும், கண்டும் காணாமல் விடுவதும் கொடுமையிலும் கொடுமை. இது கட்சி அரசியலாகி, கட்சிகளை மதவாதம், சாதி வெறி போல் பயன்படுத்தி, அதிகார ஆசையுள்ளவர்களின் புகலிடமாகி, நம் குடியாட்சி முறை சீரழிந்து போனது.

இன்று உத்தரப்பிரதேசத்தில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு முறை, புதிய அரசு அமைத்த முறைகளையும், பீகாரில், தமது மனைவியை முதலமைச்சராக்கியதுடன், குற்றப்பத்திரிகை தரப்பட்ட ஒருவர் நாட்டை ஆட்டி வைக்கும் தன்மைகளையும் பார்க்கிறோம். குடியாட்சித் தத்துவத்தையே முழுவதும் அழித்துவிட்டோம் என்றுதான் தோன்றுகிறது.

'மக்களுக்காக நாம்' என்ற குறிக்கோள் வாசகம், தேர்ந்தெடுக்கப் பட்ட ஒவ்வொரு வேட்பாளரின் வீட்டு முன்வாயிற்படி மேலும், அவருள்ளத்திலும் அச்சாகப் பதிய வைக்கப்பட வேண்டும்.

மக்களின் பொதுக் கருத்தையும் எதிரொலிக்கவும், ஆட்சிக்கு வருவோர் கடமைப்பட்டுள்ளனர். தாம் நினைத்தவாறும் கட்சிக்குகந்தவாறும் வேண்டியவர்கள் - நண்பர்கள் - உறவினர்கள் என்று பதவிகளில் அமர்த்துவது கூடாது. எல்லோராலும் மதிக்கப்படுகிறவர், தமது துறையில் வல்லவர், அத்துறையில் குறிப்பிடத்தக்கவர் எனக் கருதுபவர்களையோ உயர் அதிகாரிகளாக, வாரியத் தலைவர்களாக, துணைவேந்தர்களாக நியமிக்க வேண்டும். அதாவது இந்த நியமனமெல்லாம் மக்கள் கருத்தையே எதிரொலிக்க வேண்டும். மக்களின் பொதுவான 'அங்கீகாரம்' 'இசைவு' உளதா என்று ஆராய்ந்து மேன்மேலும் நியமனங்கள் நிகழ வேண்டும்.

ஆட்சியைப் பிடிக்கும் கட்சியும் பிடிக்க முடியாது போன கட்சியும் தேர்தலுக்குப் பிறகு, அடுத்த தேர்தல் வரை, மக்களுக்குப் பணி செய்வதன் மூலமும் பணி செய்யத் தூண்டுவதன் மூலமுமே உருப்பெற்று, அடுத்த தேர்தலில் போட்டியிட வேண்டும். தேர்தல் முடிந்த இந்தச் சமயம் முதல் ஒரு தொகுதியில் நின்று தோற்றவர் ஐந்தாண்டுகளுக்கும் அதே தொகுதி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டால், அடுத்த தேர்தலில் யார் அவரை வெல்ல

முடியும்? எதிர்க்கட்சி ஆளுங்கட்சியைத் தாக்கியும், செய்யும் நன்மைகளையும் தீமைகளெனப் பேசியும் அல்லது புறக்கணித்துமே வளர வேண்டுமென்ற மனநிலையை, நம் இளைஞர்களிடையே வளர்த்துவிட்டோம்.

ஆட்சியாளர்கள், 'மக்களுக்காக நாம்' என்ற மனப்பான்மையைச் செயலில் காட்டி, நாள் நடைமுறையாக்கி, வளரும் எதிர்கால ஆட்சியாளராம் இளையோர் மனத்தில் பதிவிக்க நூற்றுக்கணக்கான நெறிமுறைகள் உள. மக்கள் தேவையைக் கேட்டறிந்து செய்வதைக் கடமையாகக் கருத வேண்டுமே தவிர, தம் சொந்தப் பணத்திலிருந்து செய்வதுபோல் காட்டி, அவர்களின் நன்றியறிதல் வாக்குகளாகத் திரும்பாதா என்று கணக்குப் போடக்கூடாது. நம் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன், வரிசையில் நின்று வாக்களித்ததை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினரும் பின்பற்ற வேண்டும். குடியரசுத் தலைவர் நாட்டின் முதற் குடிமகன். கடைசிக் குடிமகன் வரையுள்ள சமவுரிமையே தமக்குளது எனக் காட்டிய அவர் பெருமை, இமயத்தைவிட உயர்ந்து நிற்கிறது. பத்துக் கார் சூழ வந்தோம்; திடீரென நுழைந்தோம்; ஏனைய மக்கள் வரிசையில் நிற்பவர்கள் வாயைப் பிளந்து பார்க்கவும், தம்மைப் படமெடுக்கவும் வாக்குப் போட்டோம் என்பதற்காகவே மற்ற அனைவரும் காணப்படுகின்றனர். குடியரசு தலைவரே காட்டிய நெறியை அனைவரும் பின்பற்றியிருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்?

வாக்குச் சாவடியில் அனைவரும் சமமான வாக்காளர்களே. அங்கு அமைச்சர் வாக்காளர், ஆளுநர் வாக்காளர், அதிகாரி வாக்காளர், சாதாரண வாக்காளர் எனப் பிரித்துப் பார்ப்பது, 'சாதி' ஒழியக் கருதும் மனவுணர்வு, நம் உள்ளத்தின் ஆழத்தே இல்லை என்பதையே காட்டுகிறது. இடைக் காலத்தில் மதம் ஒருவருக்கொருவர் பகை மூட்டிச் செய்த கொடுமைகளை விடப் பிற்காலத்தில் சாதி மக்களைப் பிரித்து மோதவைத்து, இன்று வரை அழிந்து வருவதைவிடக் கட்சி மக்களைப் பிரித்து வைத்துச் செய்துவரும் கொடுமைகள், எல்லை மீறிய நிலையில் வளர்ந்து விட்டன.

மக்களுக்குப் பணி செய்ய வேண்டிய பொறுப்பையல்லவா சுமக்கப் போகிறோமென்றால், கம்பர் காட்டிய இராமனைப் போல் பதவி ஆசை பிறவாமல், தயக்கமே மேலோங்கி நிற்கும். ஆனால், இலாபம் தரும் தொழில் - வாணிகம் என்பன போய்ச் சட்டத்திற்குட்பட்டே கொள்ளையடிக்கக் கிடைத்த வாய்ப்பு என்ற நிலையும் மேலோங்கிவிட்டதால், எத்தனை

அநாகரிகச் செயல்கள்! வெட்கம், மானம், சுரணை இருந்தால், இன்றைய - மனச்சான்றுக்குக் கட்டுப்பட்ட - அரசியல்வாதிகள் பலர் தாங்களாகவே தூக்கிலேறியிருப்பார்கள்!

அரசன் என்பவன் கடவுளின் அவதாரம். அவனே கடவுள். அவன் திருவுடையவன்; அதற்கேற்ற தெய்வ அருள் இருந்ததால், அரசனாகப் பிறந்தவன். அவனை வணங்க வேண்டும்; அவனிடம் குற்றம் குறை காணக் கூடாது. அவனைப் பழிப்பது தெய்வத்தை நிந்தனை செய்வதாகும். அவன் எதுவும் செய்யக் கடவுளிடம் உரிமை பெற்றவன். இப்படித்தான் உலகம் தொடக்க காலத்தில் நம்பியது. திருவள்ளுவர் கால நிலையும் இதுதான். பிற்காலத்தும் இதன் தொடர்ச்சிதான். ஆனால், அன்றே வள்ளுவர் ஒருவர்தான், "முறை செய்து, நேர்மை தவறாது ஆண்டால் மட்டுமே, அரசன் மக்கட்கு இறை என்று போற்றப்படுவான்; பிறப்பாலன்று" என எதிர்மறுத்து மொழிந்தார். ஆனால், இன்றைய குடியாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்கள் அனைவரும் தாம் அப்பதவியைப் பிறப்பினால் பெற்றவர் போல் நடந்து கொள்வதுதான் வியப்பாக இருக்கிறது.

(தினமணி : 27-2-1998)

# 12. தொகுதிப் பணியே முதற்கடமை

தேர்தல் முடிவுகள் அதிர்ச்சி தரும்படி மாறிமாறி அமைவதைக் கடந்த பல தேர்தல்கள் உட்படக் கவனித்திருக்கலாம். தோற்றவர்க்கு மட்டுமன்று அதிர்ச்சி. வென்றவர்களே கூடத் தங்களுக்கு அத்தனை இடமுமா என்று அதிர்ச்சியடையுமாறு நடப்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். பெரும் பான்மையான இடத்தைப் பிடித்தவர்கள், திடீரெனப் பெரும்பான்மையான இடங்களை இழக்கின்றனர். சரிவு படிப்படியாகவோ, எச்சரிக்கை மணிபோல் சிறிது சிறிதாகவோ அமையாமல், ஒரேயடியான சரிவாக அமைவதே வாடிக்கையாகி விட்டது. காற்றுத் திசைமாறி அடிப்பதுபோல் இருக்கிறது, நிலைமை. மக்கள் இவ்வாறு சாய்ந்த பக்கமே அனைவரும் ஒட்டு மொத்தமாக - பெரிதும் - சாய்வதன் காரணம் என்ன?

மக்கள் அறியாமையினால், இப்படிச் சாய்கிறார்களா? தங்களை அன்றாடம் பாதிக்கும் காரணங்கள் சில, ஆள்வோரால் தொடர்ந்து கடைப் பிடிக்கப்படவே, பேருந்துக் கட்டண உயர்வு, விலைவாசி ஏற்றம் போன்றவற்றால் வெறுப்பேற்பட்டுச் சாய்கிறார்களா? அல்லது அரசின் அணுகு முறைகளால் சமயம், சாதி, சிறிய கட்சிகள் என எண்ணப்படுவனவற்றின் மனமாற்றங்கள் பாதிப்பை விளைவிக்கின்றனவா? பல்வேறு காரணங்களும் சேர்ந்தே வேலை செய்கின்றன.

இந்தச் சூழ்நிலையில், இன்று வெற்றி பெற்ற பலர் தத்தம் சொந்தத் திறமையாலோ, தாம் பணி செய்த சிறப்பாலோ, மக்கள் நம்பிக்கையைத் தனிப்பட்ட முறையில் பெற்றுவிட்டதாலோ, தாம் வெற்றி பெற்றதாக எண்ணினால், அதைவிட அறியாமை வேறு இருக்க முடியாது. ஏதோ காற்றுத் திசைமாறி அடித்தது; 'அதிர்ஷ்டம்' கைகூடியது என்றுதான் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எண்ண வேண்டும். எஞ்சிய பத்துப் போர்தான் தமது தியாகம், திறமை, தொண்டு இவற்றால் வெற்றி பெற்றுள்ளனர். ஒன்றை இவர்கள் அனைவரும் நன்கு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**இகழ்ச்சியின கெட்டாரை உள்ளுக தாந்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.**

வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் மிதந்து, அதன் உச்சத்திற்கே போய், அதிலேயே மூழ்கித் திளைக்கும் சமயத்தில், அவ்வாறு மிதப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமாம். எதை? இதுபோல, முன்பு மகிழ்ச்சியில் கொண்ட கடமைகளை இகழ்ந்து, மறந்து அலட்சியப்படுத்தி நடந்து கொண்டவர்கள் இன்று தோற்றுப்போய்க் கிடப்பதைச் சிறிது நினைத்துப் பார்க்க வேண்டுமாம். இன்றைய அரசியல் வாதிகளுக்குத் தேர்தல்கள் புகட்டும் பாடம் இதுதான்! ஒருமுறை மகிழ்ச்சியிலே மூழ்கித் திளைத்தவர்கள், அடுத்தாற் போலலே தோல்வியில் துவண்டு விழுகிறார்கள்! இத்தனை நடந்தும், இத்தனை முறை நடந்தும் புத்தி வரவில்லையென்றால், என்ன செய்வது? இப்போது மகிழ்ச்சியிலே உச்சிக்குப் போய்க் கண்மண் தெரியாமல் ஆடினால், இந்தக் கணம் முதலே அடுத்துத் தோல்வியிலே துவண்டுவிழ ஆயத்தமாகிறார்கள் என்றுதான் பொருள். நமது பக்குவப்படாத குடியாட்சி முறைக்கு, இந்த அரைவேக்காட்டு அரசியல்வாதிகளே காரணமாகிறார்கள்; பொதுமக்களல்ல!

தோற்றவர்களும் இன்று சலிப்படையத் தேவை இல்லை. ஏனெனில், தங்களுக்கும் இந்தத் தோல்விக்கும் அதிகத் தொடர்பில்லை என்பதை எண்ணிக்கொள்ள வேண்டும். காற்று திசைமாறியதற்கான காரணங்கள் கட்சிகளாலும் தலைவர்களாலுமே பெரிதும் தீர்மானிக்கப்படுகின்றன.

இந்தச் சூழ்நிலையில், நல்ல 'அரசியல் பாடம்' அனைவரும் கற்பது நல்லது. இதை அந்த அந்தக் கட்சிகள்தாம் ஏற்பாடு செய்யவேண்டும். அரசியல், பொருளாதாரம், சமூகவியல், உளவியல் போன்றவற்றில், 'தேர்ந்தவர்களைக் கொண்டு உண்மையில் பாடமே' நடத்த வேண்டும்; வழி காட்ட வேண்டும். தங்கள் தங்கள் கட்சிக்காரர்களை, அவரவர் நெறிப்படுத்த வேண்டும்.

தேர்தலுக்கு முன் வெளியிட்ட அறிக்கைகளை ஒவ்வொருவரும் இப்போது படிக்கச் செய்ய வேண்டும். அதன் சாரத்தை, புள்ளிவிவரமாக மீண்டும் அச்சிட்டு, ஒவ்வொரு வேட்பாளருக்கும் - வென்றவர்க்கும் - தோற்றவர்க்கும் - மற்றும் ஒவ்வொரு கட்சித் தொண்டருக்கும் தர வேண்டும். ஒன்றியம் வட்டம் மாவட்ட அளவிலெல்லாம் 'கொள்கை விளக்கக்' கூட்டங்கள் நடத்த வேண்டும் - தொண்டர்களுக்கு, கட்சிக்காரர்களுக்கு! மக்களுக்குப் பணி செய்வதோடு, அவ்வத் தொகுதி மக்கள் அரசின் செயற் பாடுகள் பற்றி விலையேற்றம் பற்றி, கட்டண உயர்வுகள், வரி கூடுதல்கள் போல்வன பற்றி என்ன கருதுகிறார்கள் எனக் கண்டறிந்து வந்து தலைமைக்கு அறிவிக்குமாறு பணிக்க வேண்டும்.

வென்றவரேயாயினும், தோற்றவரேயாயினும் தாம்தாம் தொடர்ந்து அரசியல்வாதியாகத் திகழ விரும்பினால், மக்களுக்குத் தொண்டு செய்ய எண்ணினால் தத்தம் தொகுதிக்குப் பணி செய்வதையே முதற்கடமையாகக் கொள்ள வேண்டும்.

தொகுதிக்குப் பணி செய்வதென்றால் என்ன? எவ்வெவ்வாறு பணி செய்யலாம்? மத்திய, மாநில அரசுகள் வழி தொகுதிக்கு அறிவிக்கப்பட்ட வளர்ச்சி நிதிகள், திட்டங்கள் எவையெவை? புதிதாகத் தொகுதிக்குத் தேவைப்படும் குடிநீர் வசதிகள் முதல் வளர்ச்சித் திட்டங்கள் வரை எவையெவை தேவை எனப் பட்டியலிட வேண்டும்.

இன்று தேர்ந்தெடுகப்பட்டதும், எந்தெந்த வழிகளில் குடும்பத்திற்குச் சொத்து, சேர்க்கலாம்? எந்த எந்த உறவினர் பேரில், பிநாமியாக எவ்வெவ்வாறு கொள்ளையடிக்கலாம்? இவற்றைப் பதுக்குவது எப்படி? ஏமாற்றுவது எப்படி? எல்லாவற்றையும் செய்துவிட்டு நல்லவர் போல் நடிப்பது எப்படி? - இவ்வாறுதான் பெரும்பாலோர் திட்டமிடத் தொடங்குகின்றனர்.

தொண்டு, பணி, உதவி என்று வந்தாலும் தத்தம் கட்சிக் காரர்களுக்கு மட்டுமே செய்ய வேண்டும் என்று நினைக்கின்றனர். தொகுதி மக்கள் அனைவருக்குமே தாம் சார்பாளர் என்ற சிந்தனை வருவதே இல்லை. மேலும் தொகுதியை ஆள்வதாக எண்ணி, காவல்துறை அரசுத்துறைகள் எல்லாவற்றையும் ஆட்டிப் படைக்க முந்துமளவு, மக்களிடம் குறையும் முறையும் கேட்டுத் தீர்ப்பதற்கு முந்துவதில்லை.

இதனால் இந்திய மக்கள் இன்று திகைத்துப் போய்ச் செய்வதறியாது தடுமாறுகின்றனர் என்பதையே, தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. ஐயையோ! கொள்ளையடிக்கிறார்களே என்று பதறி, எதிர்க்கட்சிக்கு வாக்குப் போட்டு ஆளவிடுகிறார்கள். மீண்டும் ஆளவந்தவர்கள் இதுபோலவே நடக்கப் பார்த்து, முன்பு யாருக்குப் போட வேண்டாமென எண்ணினார்களோ, அவர்களுக்குப் போட்டு, ஆட்சியை மாற்றுகிறார்கள். மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், அங்ஙனம் வருபவர்கள், மக்களைக் கருதாமல், தாங்கள் நினைத்தபடி ஆளவே மக்கள் அதிகாரம் தந்திருப்பதாக எண்ணி, மக்கள் மனப்போக்குக்கு மாறுபட நடக்கவே, மீண்டும் மக்கள் தங்கள் வாக்கை, மாற்றிப் போடுகிறார்கள். அதாவது மக்களுக்கு யார் முற்றிலும் நல்லவர் என்று தீர்மானிக்குமாறு யாரும் முழுத் தியாகவுணர்வோடு செயற்படவில்லை. இது ஒரு 'விஷச் சக்கரம்' போல ஆகிவிட்டது. கடைசியில் அலுத்துப் போய் அழியும் நிலைக்கு நாடு போய்க் கொண்டிருக்கிறது.

தத்தம் தொகுதியைப் பற்றிய முழு விவரம் அறிய வேண்டும். பரப்பளவு, முக்கிய தொழில்கள், மக்களின் தேவைகள், நிறைவேற வேண்டிய திட்டங்கள், நிறைவேறியவை, மக்களுக்குத் துன்பம் தரும் சூழல்கள் என, எல்லாவற்றையும் அறிந்தவனே அத் தொகுதியின் சார்பாளனாக முடியும்.

தத்தம் தொகுதிக்கு ஓதுக்கப்பட்ட நிதி விவரம்அறிந்து, அதில் தனக்கும் தன் கட்சிக்கும் எவ்வளவு சுரண்டலாம் எனக் கணக்குப் போடாமல், பொதுநலனுக்கு என ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் மக்களுக்குப் போய்ச் சேருமாறு செய்தல் வேண்டும்.

தொகுதிக்குப் பணி செய்வது எப்படி? என்று அவ்வக் கட்சியினர் தத்தம் ஆர்வமுள்ள தொண்டர்களுக்குப் பயிற்சியளித்து, அதில் சிறந்து விளங்குபவர்களை, அடுத்த தேர்தலில் அவ்வத் தொகுதிகளில் நிறுத்த வேண்டும்.

தொண்டு தவிர்த்த பிறபல செல்வாக்குகளால் வெற்றிபெற முடியுமெனினும், உண்மையான தொண்டர் என மக்கள் கண்டுகொள்ளும் ஒருவர் தலைதூக்கி வந்துவிட்டால், அவரைப் பிற சக்திகள் வெல்லவே முடியாது. இன்று எல்லாமே குலுக்குச் சீட்டு முறையில், சாதிக்காரர் - பணக்காரர் - செல்வாக்காளர் என்று எடுத்து நடத்தும் முறைகளே மிகுந்துள்ளன. மக்களிடம் கட்சிகள் அசைக்க முடியாத நம்பிக்கை பெற வேண்டுமேல், தொகுதிப் பணியில், முதன்மையான அக்கறை காட்ட வேண்டும். தாம் 'கொள்ளையடித்த' பணம் முழுவதையும் வழக்குகட்கும் வழக்கறிஞர்கட்கும், கட்சித்தாவல்களுக்கும், தங்கள் குடும்பத்திற்கும் எனப பயன்படுத்தாமல், மக்களுக்கென்று பயன்படுத்தினால், அக் கட்சியின் தியாகம் மக்களால் உணரப்படும்.

தவறு செய்யாதவர்களைக் காண முடியவில்லை. தவற்றை உணர்ந்து திருந்துபவர்களையாவது காணமாட்டோமோ என்று மக்கள் உள்ளம் ஏங்குகிறது. மக்களின் உள்ளுணர்வுகளை உடனுக்குடன் உணரவல்லவர்களை, நமது அரசியலில் மிகுதியாகக் காணவேண்டும். ஒரு மன்னர், மக்களுட்பட உயிரினங்கள் வரை, அவை என்ன நினைக்கின்றன என அறியும் ஆற்றல் பெற்றிருந்ததைச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார். குடிமக்கள் என்ன நினைக்கிறார்கள் எனக் 'கருதிற்று அறிவார்கள்', அரசியலில் பெரும்பான்மையினராகும் காலமே, பாரதத்தின் நற்காலமாகும்.

(தினமணி : 7 - 3 - 1998)

# 13. இனியும் 'மூடு மந்திரம்' வேண்டுமா?

நம் பாரத நாட்டைப் பற்றி வெளியுலகில் உயர்ந்த கருத்துருவாக்கம் எவ்வளவும் இல்லை. 'இந்தியன்' என்றாலே, மதிப்புக்குறைவுதான்; இந்தியப் பணத்திற்கோ மிகமிக மோசமான, மதிப்பற்ற கீழ் நிலை.

புதுதில்லி தொட்டு ஊராட்சிவரை - நம்மை ஆள்பவர்கள் இதை மிக ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

நம் அரசியல் கட்சியினர் ஒவ்வொருவரும் பல்வேறு வகைளில் 'பொதுநலப் புத்தொளி இயக்கங்களைத்' தொடங்கவேண்டும். வெறுமனே எழுதப் படிக்கக் கற்பிக்கும் 'அறிவொளி இயக்கம்' மட்டும் போதாது. நம் மக்கள் பொதுநலத்தைக் கண்ணும் கருத்துமாய்ப் பேணும் பண்பாட்டை வளர்க்கவேண்டும். தனிப்பட்ட 'மனிதன்', இங்கு நன்றாகவே இருக்கின்றான்; சுயநலம் பேணிப் பழகிப் பழகி அதுவே வாழ்வாகிப் போனான். அரசியலில் இளைஞர்கள் பதவிகளைத் தேடுவதை விட, இப்புத்தொளி இயக்கத்தில் ஈடுபட வேண்டும். அவர்களின் தொண்டு காரணமாக, பதவிகள் "அவர்களிருக்கும் இடத்தைத்தேடிச்செல்ல வேண்டும்". 'பதவி வேட்டை' என்பது உலகெங்கும் காணப்படுகிறது. ஆனால், அது பொதுநல வேட்டையாகவும், பொதுமக்கள் நலங்காக்கும் பாட்டையாகவும் உள்ள நாடுகள் முன்னேறுகின்றன.

எந்தக் கட்சி ஆள்கிறது? எந்த அரசியல் கோட்பாடு நல்லது? எந்தச் சார்பு பயனளிக்கிறது? - இவையல்ல முக்கியம். யார் இதனை உண்மையில் பொதுமக்கள் ஆட்சியாகவே கருதி, தேர்தலில் வெற்றிபெற்ற பிறகும் பொதுமக்களைத் தங்கள் மேலாண்மையினராக மதித்து, அவர்களைக் கல்வியறிவும் - நாட்டு நடப்பு அறிவும் - பொறுப்புணர்வும் உள்ளவர்களாக ஆக்க முயல்கிறார்களோ, அங்கு நாடு முன்னேறக் காண்கிறோம்.

பொதுமக்களிலிருந்துதானே அரசியல் கட்சிக்காரர்கள், நாடாளும் உறுப்பினர்கள், அமைச்சர்கள், தலைவர்கள் உருவாகிறார்கள்? எனவே, பொதுமக்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாகக் கருத்திற்கொண்டு, புத்தொளி இயக்கங்கள் தோன்றினாலன்றி, நாட்டு நிலை சீர்படாது. கட்சிகளின் வெற்றி, நாட்டு வெற்றியாக மலரவேண்டும்; இன்னும் சொன்னால் கட்சிகளின் தோல்வி கூட, நாட்டு முன்னேற்றத்திற்குக் காரணமாகுமாறு, அக்கட்சி தன்னைத் "தியாக"த் தீயில் புடம்போட்டுக் கொள்ளும் சூழலேற்பட்டால், அந்த நாடு உலகிலேயே உன்னத நாடாக வாய்ப்புண்டு.

நமக்குப் பல்வேறு பிரச்சினைகள், சிக்கல்கள், சங்கடங்கள் இருந்தாலும், 'எய்ட்சை' விடக் கடுமையாகப் பரவியிருக்கும் 'ஊழலை' ஒழிப்பதுதான் உடனடித் தேவை. அங்கிங்கெனாதபடி எங்கும் பரவிவிட்ட இதைத் தனி ஒருவரோ, ஒரு கட்சியோ மட்டும் ஒழிக்கவியலாது. இது நமக்குத் தொடர் நோயாகவும் -தொற்று நோயாகவும் ஆகிவிட்டது. இதற்கு மருந்து தேடியாக வேண்டும்.

இன்று குற்றங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன; விசாரிக்கப் படுகின்றன. தலைமை அமைச்சர், முதலமைச்சர், அரசு கடை நிலை ஊழியர் என்ற வேறுபாடில்லாமலும், புதுதில்லி, பிகார், தமிழ்நாடு என இடவேறு பாடில்லாமலும், 'எங்கும் ஊழல் - எதிலும் ஊழல்' என்ற பரந்த தத்துவத்தை நோக்கி நாம் போய்க் கொண்டிருக்கிறோம். நம் இதழ்கள் - வானொலி - தொலைக்காட்சி போன்ற தகவல் தொடர்புச் சாதனங்கள், இவற்றை நன்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. என்றாலும், குற்றங்கள் நிகழ்ந்தபின் கண்டுபிடிக்கும் நிலையிலேயே நிற்கிறோமே தவிர, குற்றங்கள் நிகழாமல் முன் கூட்டிக் காக்கும் நிலைக்கு நாம் ஓரங்குலம்கூட நகரவில்லை. இது ஒரு நாடகம் பார்ப்பது போலச் சுவையாய் விறுவிறுப்பாய்ப் போனது. நாடகத்தின் முடிவென்னாகுமென ஆர்வநிலையைத் தோற்றுவிப்பார்கள் அல்லவா? ஒவ்வொரு நாட்செய்தி ஒலிபரப்பும், இந்நாடக உச்சத்தையே நினைவூட்டுகிறது. இப்படி நாடகம் போல் ஆக ஆக ஊழல் புரிபவர்கட்கும் இது ஒரு கொண்டாட்டம் ஆகிவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஏனெனில், ஊழல் புரிந்தவர்கள் - புரிபவர்கள் அதற்காக வெட்கப்படுவதாகக் காணோம். கலைவாணர் என். எஸ். சிருஷ்ணன், 'குடிப்பது பாவம் என்று கருதும் நாடு' என்ற அரிய கருத்தை ஒருமுறை நடித்துக்காட்டினார். அதுபோன்ற 'ஊழல் புரிய வெட்கப்படும் நாடு' என்ற நிலையும் போய்விடும் போல உளது.

நம் கதை ஆசிரியர்கட்கு இது இன்னும் தக்க முழுமையான ‘கரு’ வாகவில்லை. நம் நாடக ஆசிரியர்கள் - காப்பியம் எழுதுவோர்க்கு இது ஒரு நல்ல ‘அடிக்கருத்து’ அல்லவா? கவிமணியின் ‘மருமக்கள் வழி மான்மியம்’ போல - முதல் வரி தொடங்கி, இறுதியடிவரை - ஊழல்வழி ஊழல், ஊழலுக்கு எதிர் ஊழல், ஊழலுக்குள் ஊழல் - எத்துணை நகைச்சுவைமிக்க அங்கதம் எழுதலாம்?

கையூட்டுப் பெற்றாலும் காரியத்தை முடித்துத் தருபவன் சிறந்த கடமையாளனாக, தருமவானாக, அறநெறி அன்பனாகப் போற்றப் படுங்காலமாக இது இருக்கிறது! சுருக்கமாகச் சொன்னால், நாம் ‘ஊழல் புலனாய்வுச் சமுதாயமாக’ முன்னேறிக் கொண்டிருக்கிறோமே தவிர, ஊழல் ஒழிப்புச் சமுதாயமாக இன்னும் உருவாகாதிருக்கிறோம்! விரைவில் நாம் ஊழலற்ற ஒருநிலையை அடைந்தாக வேண்டும்!

இதற்கான முயற்சிகளில் தலைமையானது - முதன்மையானது அரசுப் பொது வரவு - செலவு விவரங்களை, திட்டங்களைப் பற்றிய வரவு - செலவுகளை நன்கு மக்களுக்குத் தெரிவிப்பதாகும். எந்த ஒரு சிறுதிட்டமாயினும், அதற்கான முதலீடு எவ்வளவு? அம்முதலீடு எங்கெங்கிருந்து பெறப்பட்டது? அத்திட்டச் செலவு பற்றிய நிதிப் பங்கீடு என்னென்ன? ஒப்பந்தக்காரர் யார்? அவருக்குரிய இலாபமும் அவர் செய்யவேண்டியனவும் யாவை? எவ்வாறு செலவிடப்படுகின்றது? முடிவென்ன? பயனென்ன? இதுபோன்ற விவரங்கள் நாளும் அனைத்துத் திட்டங்களுக்கும் தரப்பட வேண்டும். அங்ஙனம் தருமாறு சட்டமியற்ற வேண்டும். சிற்றூராட்சிகள் தொடங்கி, இவ்விவரங்கள் அறிக்கைவழி மக்களுக்குத் தரப்பட வேண்டும்; வட்டார இதழ்கள், பெரு நாளிதழ்கள் உட்பட யாவும் இவ்விரங்கள் தருவதற்கென ஓரிரு பக்கங்கள் ஒதுக்கப்பட வேண்டும். அறிவிக்கப்பட்ட வண்ணம் இருக்கவேண்டும்.

நெற்குப்பைக் கிராமத்திற்குப் பக்கத்துக் கிராமம் சார்ந்த, நல்ல ஊற்றுள்ள இடத்திலிருந்து குழாய்கள் வழி தண்ணீர் கொண்டு வருவதாய்ச் சொன்னார்கள். பாதிவேலை நடந்தது - பல ஆண்டுகளாகியும் சரிவரத் தண்ணீர் வரவில்லை. சில குழாய்கள் தண்ணீருக்குப் பதிலாகக் கண்ணீர் விட்டபடி நிற்கின்றன. யார் தடை? எதுவுமே மக்களுக்குத் தெரியவில்லை.

மதுரை மேலமடைக் கண்மாயைப் படகுவிடும் சுற்றுலா மையம் ஆக்குவதாகச் சொன்னார்கள்; கரையில் சிறுவர் பூங்கா அமையப் போகிறது என்றார்கள். வேலை தொடங்கியதை மக்கள் கண்டு மகிழ்ந்தார்கள். சிறிது

காலத்திற்குப் பின் எதுவுமே நடக்கவில்லை. ஏன்? ஒதுக்கிய பணம் எவ்வளவு? அதில் எவ்வளவு செலவானது? பற்றாக்குறை ஆனதேன்? யார் தவறு? என்ன நிலை? யாருக்கும் எதுவும் தெரியாது.

அருப்புக்கோட்டை - தூத்துக்குடி வழியில் நெசவாளர்களுக்கு என்று 150 குடியிருப்புகள் கட்டிமுடிக்கப் பெற்றன. யாரும் குடியேறவில்லை. காரணம் - கட்டி முடிக்கும் முன்பே இவை தொங்கிப் போய் விழுந்து, சரிந்துகொண்டு நிற்கின்றன. இக் குடியிருப்புக் கட்டத் தொடங்கும்போதே, அதற்கான நிதி ஆதாரம், செலவுப் பங்கீடு, குத்தகைதாரர் வழி ஒப்பந்த விவரம், நடப்பு முன்னேற்றம் யாவும் சொல்லப்பட்டு, நடந்திருந்தால், இப்படிச் சரியும் நிலை ஏற்பட்டிராது. அவ்வாறே சரியும்நிலை ஏற்பட்டிருந்தால், வேலை நடக்கும் போதே குற்றவாளி கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டு, குறைநீக்கப் பட்டிருக்கும்!

நாடு முழுவதும் நடக்கும் இத்தகைய பொதுநலத் திட்டங்களில் ஊழலே புகாத நிலையை, ஊழலே நடைபெற முடியாத ஒரு சூழலை, ஊழலுக்கு இடமளிக்காத ஒரு கட்டமைப்பை நாம் கண்டுபிடிக்க முடியாதா? அந்நெறிமுறைகளைச் சட்டமாக்க முடியாதா? அவற்றை நாள் நடைமுறை யாக்கி, 'ஊழல்' என்ற சொல்லே இடம் பெறாவாறு, ஆட்சியைத் தூய்மைப் படுத்த முடியாதா?

ஊழலால் நாட்டின் ஒட்டுமொத்தமான முன்னேற்றமே பாதிக்கப் பட்டுவிட்டது. 21ஆம் நூற்றாண்டை நோக்கி நம்மை மிகவும் அச்சுறுத்திக் கொண்டிருப்பன இரண்டு: ஒன்று ஊழல்; மற்றது மக்கட்தொகைப் பெருக்கம்.

வெளிநாட்டு, உள்நாட்டு முதலீட்டாளர்கள் ஒரு தொழிலை எளிதில் தொடங்கமுடிவதில்லை. இருபது இடங்களில், இருபது முதலைகளின் வயிற்றுட் போய் வெளிவர வேண்டியுளது. சேலத்தில் மிக நேர்மையாகப் பல் தொழில் நுணுக்கக் கல்லூரி நடத்தும் ஒரு பெரியவர், பொறியியற் கல்லூரி தொடங்க விண்ணப்பம் செய்தார். அரசு அதிகாரிகள் அவரிடம், 'ஐம்பது இலட்சம்' கேட்டு, "இதை நீங்கள் மாணவர்களிடம் சில ஆண்டுகளில் சம்பாதித்துக் கொள்ளலாம்" என்று யோசனை கூறினார்களாம். சில ஆண்டுகளுக்கு முன் நடந்தது இது. இப்படிக் கொடுத்து, அப்படி வசூலித்துக் கொள்ளக் கூடியவர்களெல்லாம் கல்லூரிகள் தொடங்கிவிட்டார்கள்! நேர்மையாளர் தொடங்கமுடியவில்லை. போலீஸ் வேலைக்கு ஆளெடுக்கும் போது கூட, அவரிடம் குறிப்பிட்ட பணம் பெற்றுக்கொண்டு, 'இதை நீ இரண்டு

வருடங்களில் சம்பாதித்துக்கொள்' என்று முன்னதாகவே கூறி வேலைக் கமர்த்தினால், காவலர் காவலராக நடந்து கொள்வாரா? ஒருவீட்டுக்கு, அதைக் கட்டும்போது வரைபட ஒப்புதல் பெற, மின் இணைப்பு, குடிநீர் இணைப்புப் பெற அரசுக்குச் செலுத்தும் கட்டணங்களைவிடப் பல மடங்கு கூடுதலாக, அதிகாரிகட்குத் தர நேரிடுகிறது. இங்ஙனம் எண்ணிப் பார்த்தால், ஊழலால் வளர்வதை ஆயிரம் கதைகளாக எழுதலாம்.

நம் நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் உடனடியாகச் சிந்திக்க வேண்டிய செய்தி இது. இதற்கான வழிமுறைகளைப் பலவேறு கோணங்களில், மேலும் மேலும் கூர்மையாகத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

ஊழலைக் கண்டுபிடிக்கும் அதே வேகத்தைவிடப் பன்மடங்கு வேகமாக, ஊழலை முழுவதுமாகத் தடுக்கும் - நீக்கும் - இம்மியளவும் இல்லாமல் செய்யும் நெறிமுறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும்; கண்டு பிடித்துச் சட்டமாக்கி, நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆம்! ஊழலுடன் ஒரு போர் தொடங்கியிருக்கிறது! இதில் ஊழலை நாடு வெல்லப் போகிறதா? அல்லது நாட்டை ஊழல் வெல்லப் போகிறதா? இத்தகைய தடுமாற்றமான கட்டத்தில் நாம் இப்போது இருந்து கொண்டிருக்கிறோம். நாம் நமது எதிர்காலச் சந்ததிகள் போற்றும்படி நடந்து கொள்ளப் போகிறோமா என்பது இனிமேல்தான் தெரியப்போகிறது.

(தினமணி : 14-12-1996)

# 14. இரட்டை வாழ்வு

விடுதலைப் பொன்விழாக் கொண்டாட்டங்களில் முழ்கித் திளைக்கும் அதே சமயத்தில், இந்தியர்களாகிய நாம் நம்மைநாமே திறனாய்வு செய்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். நாமே சிந்தித்து, உணர்ந்து திருந்தவேண்டியவர்களாக இருக்கிறோம். இவற்றுள் மிக அடிப்படையானவற்றைப் பயன்தரும் வழியில் எண்ணிப் பார்ப்போம்.

இந்தியர்களாகிய நம் ஒவ்வொருவரிடமும் இரட்டை வாழ்வு முறை தொற்றிக்கொண்டு உளது. உதாரணத்துக்குச் சில: ஓர் ஆசிரியர் ஆசியராகவே வாழ்ந்து சிறக்க விரும்பவில்லை. உலக ஆசைகளால் வியாபாரியாக, வட்டிக்கடைக்காரராக இரட்டை வாழ்வு மேற்கொள்கிறார். எனக்குத் தெரிய ஒரு தலைமையாசிரியர், நாள் முழுவதும் பள்ளியே கதியென வாழ்ந்தார். கடைசியில் பள்ளியிலிருந்து வீட்டிற்கு நடக்கும்போது, ஒருநாள் மாலையில் வழியிடையே மயங்கி வீழ்ந்து உயிர் நீத்தார். கல்லூரியில் வேலை பார்த்த ஒருவர், எருமை மாட்டுப் பண்ணையே வைத்துப் பால் வாணிகமும் செய்து, ‘எருமை மாட்டு வாத்தியார்’ எனப் பெயர் பெற்றார். இருவரும் இந்தியர்களே!

துறவிகளுக்கு இந்த ‘உடம்பும் மிகை’ என்றார் திருவள்ளுவர். இன்றைய ‘சுவாமிகள்’ பலரைப் பார்த்தாலும், கேள்விப்பட்டாலும் அங்ஙனம் கேள்விப்படும் நமக்கே கூச்சமாக இருக்கிறது. அவர்களோ வெட்கமின்றிப் ‘பவனி’ வருகிறார்கள். பொதுநலத் தொண்டர் என வெளிப்படுபவர், உள்ளே முழுக்க முழுக்கப் பொதுநலக் கள்ளராக உலவுகிறார். இதனால், நாட்டிலுள்ள பிற கள்ளர்கள் ‘எங்களையும் ஏன் பொதுநலத் தொண்டர்களாகக் கருதக்கூடாது’ என்று கேட்கும நிலையும், இருவரும் ஒருவராகி வாழும் நிலையும் உச்சநிலையை அடைந்துவிட்டன.

இந்த இரட்டை வாழ்வை இந்தியர்களிடமிருந்து அறவே நீக்க, இப் பொன்விழா ஆண்டில் சபதம் பூணவேண்டும். எந்த விதத்திலெல்லாம் குத்திக் காட்டி, அங்கதப்படுத்தி, அழவைத்து, இடித்திடித்துத் திருத்த முடியுமோ, அந்த விதங்களிலெல்லாம் முயலவேண்டும்.

ஒருவரிடமே இரண்டுமனம், இரண்டு கொள்கை. அதாவது, தம்முள் முரண்பட்ட இரண்டு கருத்துக் குடிகொண்டிருக்கும் விசித்திரத்தை, இந்தியனிடம்தான் காண முடிகிறது.

நேர்மை, நியாயம் பற்றிப் பொறிபறக்கப் பேசிச் சிந்தனைகளை உதிர்ப்பவனிடமே, நேர்மையற்ற சிந்தனையையும் பேச்சையும் செயலையும் பார்க்கிறோம். 'ஊழலை ஒழிப்பதே முதற்பணி' எனக் கனல் தெறிக்கப் பேசிக் கொண்டே, ஊழல் வாழ்வு வாழ முடியுமா? முடியும். ஓர் இந்தியனால் மட்டுமே அது முடியும். எல்லோருமே மற்றவர்களிடம் உள்ள ஊழலை ஒழிக்கத் தீவிரப்படும் அதே வேளையில், தங்களிடம் ஊழலை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ வளர்த்தபடி இருக்கிறார்கள்.

என் நண்பர் ஒருவர் மிகுந்த பகுத்தறிவுச் சிந்தனையாளர். அவர் வீட்டுப் படங்கள், புத்தகங்கள் எல்லாம் அவருடைய புரட்சிச் சிந்தனையைப் பறைசாற்றின. ஒருநாள் அவர் தமது சாதிச் சங்கத் தலைவரானார். யான் அதிர்ச்சியடைந்தேன். அவர் சொன்னார்; ஔவையார் 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்றாரல்லவா? அதன்படி நடப்பவன் நான். என் சாதி ஒன்று; என் சாதியல்லாத மற்ற சாதிகள் எல்லாம் ஒன்று. இவை இரண்டொழிய வேறில்லை என்றார். பரந்த மனத்திலே குறுகிய பார்வைகளும் குடி கொண்டிருப்பதை, பத்து இந்தியர்களில் எட்டுப் பேரிடம் காணலாம்.

சாதி, சமயம் சார்ந்த தோற்றத்தில் சிலைகள் வைப்பதோ, பெயர்கள் வைப்பதோ சட்டப்படி தடுக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட உலகளாவிய பெரும்புகழ்த் தலைவரை, ஒரு சாதியார் தெருப்பெயர், குடியிருப்புப் பெயர், சங்கப் பெயர் என்று ஆக்க ஆக்க, நமக்கு அந்தத் தலைவரைப் பற்றியிருந்த பெருமைமிகு எண்ணமே சுருங்கிவிடுகிறது. நாம் சிறிது சிறிதாக அவரிடமே அன்னியப்படுகிறோம். அவர் 'இந்தியர்' என்ற எண்ணம் அகல்கிறது. இன்ன பிரிவினர், இன்ன சாதியினர், இவர்களுக்கு மட்டும் உரியவர் என்று அப் பெயர், புகழ், திறன் எல்லாவற்றையும் சாதிச் சுருக்குக் கயிற்றால் சுருக்கி விடுகிறோம். அவரே உயிர்பெற்று வந்தால், 'என்னை இந்தியனாக வாழ விடுங்கள்' எனக் கூவியழுவார்.

சமயப் பெயரால் பேரவை, சங்கம், முன்னணி, பேரணி வேண்டாம். வேண்டவே வேண்டாம். மக்கள் பேரவை, மக்கள் முன்னேற்றச் சங்கம்,

மக்கள் முன்னணி, மக்கள் பரிஷத்துகள் தோன்றட்டும். நல்ல செயல்கள், பொதுநலப் பணிகள், நாகரிகச் செயற்பாடுகள் மூலம் சமயங்கள் உணர்ந்து, அறிந்து காக்கப்படட்டும். இது இலைமறை காயாக நடைபெறும். பொதுத் தொண்டு ஆற்றாமல் பொதுநலம் பேணாமல் பெயர் வைத்து மட்டும் 'வெறி'யைக் கிளப்பிச் சமயங்களைக் காக்க, வளர்க்க நினைப்பன, அழிவில் கொண்டு போய்விடும். உண்மையான சமயநெறியும் அதுவன்று.

சாதிகள் ஒன்றையொன்று அழிப்பதை, அழிக்க முயல்வதைத் தடுப்பது எவ்வாறு? சமயங்கள் எல்லை மீறுவதை, விருப்பமில்லாத மத மாற்றங்கள் நிகழ்வதை, கட்சிப் பிரச்சாரம் செய்வதை, மதவாதிகள் மோதிக் கொள்வதைத் தடுப்பது எவ்வாறு? சாதிச் சங்கம், சமயச் சங்கம் வைத்துத் தானே தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்? 'எதிரிகளை' அச்சுறுத்தித் தங்கள் நலத்தைப் பெற வேண்டும்? குடியாட்சி நாட்டில், குரல் எழுப்பினால்தானே எதையும் பெறமுடியும்? - இவ்வாறு வினாக்கள் தொடுக்கலாம். இன்றையத் தீமைகளின் வளர்ச்சிக்கு இச் சிந்தனைகளே காரணம்.

ஒரு சாதி அல்லது சமயம், எல்லைக் கோட்டை மீறும் எந்த நடவடிக்கையும் பிற சாதி, சமயங்களைத் தாக்குமெனினும், அவை அங்ஙனம் மீறியவர்களையும் பாதிக்கவே செய்யும். இவையாவும் பொது நன்மைக்குக் கேடு விளைவிப்பனவே. மற்றொன்று: சாதி அல்லது சமயத்திலுள்ள சில 'வெறி'யாளர்களே, தீவிரவாதிகளே இத்தகைய முரண்பட்ட செயல்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களிடையே நல்லவர்கள், பொது நன்மை கருதுகிறவர்கள் மிகப் பலர் இருக்கவே செய்கிறார்கள். எனவேதான், 'மக்கள்நலப் பேரவை' 'மக்கள் நல முன்னணி' என்று பொதுப் பெயரைச் சூட்டி, தற்காப்பும் தேடலாம். தீமை இரு சாராருக்கும் கேடு பயக்கும் என்றும் வாதாடலாம். இரண்டு பக்கமுள்ள நல்லவர்களையும் பாதிக்காமற் செய்யலாம். சீற்றம் தணிந்து ஒன்று கூட வாய்ப்பு மிகுதியாகும்.

'பெயரில் என்ன இருக்கிறது?' என்று சொல்லாதீர்கள். அங்கேதான் 'தீப்பொறி', 'கங்கு', 'தணல்' உருவாகிறது.

தமிழ் திட்பநுட்முடைய மொழி. ஒரு காலத்தில் இன்றைய ஆங்கிலம் போல், கருத்துக் கூர்மையுடைய புலப்பாட்டு உத்திகள் பல, தமிழில் பேச்சு வழக்கிலேயே இடம் பெற்றிருந்தன. மொழி வளம்பெற வளம்பெற அறிவும் வளம் பெறும். மொழி கூர்மையும் சீர்மையும் பெறப்பெறவே, அம்மொழி பேசுவோர்தம் அறிவும் திறமும் கூர்மை பெறும். மொழி ஒரு கருவிதான். கருவியின் திறனறிந்து பயன்படுத்தினால்தான், கலைகள் உலகப் புகழ்பெறுகின்றன. இன்று மொழியை, எளிமை எளிமை என்று தரக்குறைவு செய்து செய்து, தமிழர்தம் அறிவும் தரங்குறையலாயிற்று.

வழிபடுதல் - கும்பிடுபோடுதல்; வழிப்படுதல்; அவர் வழி நடத்தல். சிலை வைக்கும் இன்றைய முறைகள் சூடம் ஏற்றி, மலர்வளையம் வைத்து வழிபடுவதோடு நிறுத்துகின்றன. புதுதில்லியிலுள்ள சாந்திவனம் முதலாய சமாதிகள் தொடங்கிக் கன்னியாகுமரி வரை, நம் தலைவர்கள் பிறந்த நாளையும் இறந்த நாளையும் மலர் வளையம் வைத்துக் கொண்டாடி வருகிறோம். ஆனால், அத் தலைவர்கள் பற்றிய அறிவை வளர்த்து, அவர்கள் போன தடத்தில் இன்றைய இளைஞர் சமுதாயத்தை அழைத்துச் செல்ல இச் சாதிகள், நினைவாலயங்கள் மட்டும் பயன்படுமா? நாடெங்கும் தெருவெங்கும் சிலைகளும் தலைகளும் வைப்பதால் பயன் உண்டா?

அமெரிக்காவின் முதல் தலைநகரான பிலடெல்பியாவில், அதன் விடுதலைக்கு உழைத்தவரும், அரசியலமைப்பை வகுத்தவர்களில் முக்கியமானவரும், அறிவியலறிஞருமான பெஞ்சமின் பிராங்கிளினுக்கு நினைவகங்கள் சிலவுள. ‘அறிவியல் அருங்காட்சியகம்’ ஒன்று, ஐந்து மாடிக் கட்டத்தில் எழுப்பப்பட்டுள்ளது. பலகோடி செலவிலான இம் மாளிகையில், பள்ளி மாணவர்கள் முதல் பொதுமக்கள் வரை அறிவியல் பற்றி அறியும் படியான பல கண்காட்சிகள், ஒலி - ஒளிக் காட்சிகள் உள. விடுமுறை தோறும் பல ஆயிரம் மாணவச் சிறார்கள், பொதுமக்கள் அங்கு வந்து பார்த்துச் செல்கிறார்கள். உள்ளே நுழைந்ததும், முற்றப் பெருவாயில் தாண்டியதும், பிராங்கிளினுடைய முழு உருவ வெண்கலச் சிலை, மிகப்பெரிய அளவில், ஒரு மாமனிதரே நேரில் நிற்பதுபோல் காட்சியளிக்கிறது. நாட்டு இளஞ் செல்வச் சிறுவர், சிறுமியருக்கு, கூடவரும் ஆசிரியர் - அங்குள்ள வழிகாட்டி இருவரும், பிராங்கிளினை அறிமுகப்படுத்தி, விளக்கிச் சொல்லிப் பிறகுதான் உள்ளே அழைத்துச் செல்கிறார்கள். அவர்தம் புகைப்படங்கள், அவரைப் பற்றிய துண்டு அறிக்கைகள் பார்க்கலாம். ஒரு வீடியோ படம் அவரைப் பற்றியது; பார்த்தவர் அவரை நேரே கண்டு திரும்பிய அனுபவத்தை ஏற்படுத்தும். ‘ஒவ்வோர் அமெரிக்கனும் தம்மைப் பின்பற்றிச் செயற்படுமாறு கூறி’ அவர் விடைபெறும் காட்சியுடன் திரும்பும் மாணவ உள்ளங்கள், தாம் அமெரிக்கராகப் பிறந்ததற்காகப் பெருமை கொள்ளுமாறும், தாம் ஒவ்வொருவரும் அத்தகு பெருந்திறனாளராக மலர வேண்டுமென உந்துதல் பெறுமாறும், அக்காட்சி அமைந்திருந்தது. எல்லாவற்றுக்கும கட்டணம் உண்டு.

நம் நாட்டிலும் சிலை வைத்து, நினைவாலயம் அமைக்கும்போது, இவ்வாறு ஒரு தலைவருக்காவது செய்து பார்த்தால், வழி படுவதாக மட்டும் ஒழியாமல், அவர் வழிப்படுவதாகவும் நம் சமுதாயம் மலருமல்லவா? மேலும், நினைவகங்கள் நாள்தோறும் பயன்படும் நிலையங்களும் ஆகுமன்றோ?

(தினமணி : 19-8-1997)

# 15. சிங்கப்பூரில் தமிழ்க் கொத்தடிமைகள்

சிங்கப்பூர் உலகிலேயே சின்னஞ்சிறு நாடு; ஆனால், அதன் கட்டுமானப் பணிகளுக்கும் சிறிய கூலி வேலைகட்கும் வெளிநாடுகளிலிருந்து தான் தொழிலாளர்கள் வரவழைக்கப்படுகின்றனர். இங்குள்ள பொருளாதார வலிமை அத்தகையது.

கட்டுப்பாடு, ஒழுங்கு, இவற்றோடு திருவள்ளுவர் அரசியலில் கூறிய 'குற்றங்கடிதல்' அதிகாரத்தைச் சொல்லுக்குச் சொல் நிறைவேற்றும் பாங்கையும் இங்குக் காணலாம். தன்பொருள் வலிமையைக் கட்டுக்குள் வைத்திருப்பதால், அண்டை அயல் நாடுகளிலிருந்தும் இந்தியா, வங்கதேசம், பாகிஸ்தான் போன்ற பல நாடுகளிலிருந்தும் தொழிலாளர்கள் நூறாயிரக் கணக்கில் இங்கு வந்து, மாடுகளாய் உழைத்து மகிழ்ச்சியடைகின்றனர்! தாயகத்தில் கிடைக்காத வேலை வாய்ப்பு, அந்தப் பணம் - மாற்றுவிகிதத்தில் இங்கு 4 வெள்ளி பெற்றால், அது இந்தியாவில் நூறு ரூபாய் ஆகிறதே - அதே 'மகிமை' அவர்களை உயிரைக் கொடுத்து இங்கே உழைக்க வைக்கிறது!

"வந்தாரை வாழவைக்கும் சிங்கப்பூர் வாழ்க!" என்று வாழ்த்தத் தோன்றுகிறது!

இங்ஙனம் வந்து உழைக்கும் தொழிலாளர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் தமிழர்களே. பல ஆயிரம் தமிழர்கள் இங்குக் கூலி வேலை செய்கின்றனர்.

ஒருபுறம் பார்த்தால், தமிழராய்ப் பிறந்த நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி! தமிழோடும் தமிழரோடும் தொடர்புடைய நாடு சிங்கப்பூர். இங்கு ஆங்கிலம் ஆட்சி மொழி. ஆங்கிலம் உள்ளிட்ட சீனம், தமிழ், மலாய் ஆகிய நான்கும் தேசிய மொழிகள். தேசிய மொழி என்ற பெயருக்கேற்ற மதிப்பு, மரியாதை

அனைத்தையும் இங்குத் தமிழ் பெறுகிறது. ஆனால், இங்கு வந்து தமிழகத் தொழிலாளர் படும் அவதி சொல்லுந்தரத்ததன்று. அண்மையில் இது உச்சக்கட்டத்தை எட்டிவிட்டது.

திடீரென்று இருநூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழந்தனர். அவர்களைக் கூட்டிவந்த முகவர்களும், வேலைக்குச் சேர்த்த முதலாளிகளும் அவர்களை முற்றிலும் கைவிட்டனர். தங்க இடமில்லை; உண்ண உணவில்லை; 'குட்டி இந்தியா' (Little India) எனப்படும் பகுதியான சிராங்கூன் சாலை, சந்தர் தெரு போன்ற இடங்களில் - அதாவது நடுத்தெருவில் இவர்கள் தஞ்சம் புகுந்து, இரவும் பகலும் பசித்துக் கிடக்க வேண்டியதானது. இதை இங்குள்ள தமிழ் முரசு, நியூ பேப்பர் நாளிதழ்கள் படத்துடன் செய்தியாக வெளியிட்டன. வீதியில் படுத்துக் கிடக்கும் தொழிலாளர்களையும், அவர்களுக்கு 'நிவாரணம்' தர முன்வந்த இந்தியர்களையும் தொலைக்காட்சி தொடர்ந்து ஒளிபரப்பியது.

இங்குள்ள பல தொண்டு நிறுவனங்கள் இவர்களுக்கு ஒருவேளை உணவு நல்கி, உயிரைக் காப்பாற்றின. சகோதரர் ரங்காச்சாரி இந்தியத் தூதரகத்தோடு தொடர்பு கொண்டு, நிலைமையை அறிவித்தார். அவரும் சகோதரர் சிவா, சகோதரி மாலதி ராகவா போன்றோர் பலரும் உணவு வழங்கப் பெருமுயற்சி எடுத்தனர். சத்திய சாயி பாபா பக்தர்கள், நன்கு உதவினர். சிராங்கூன் சாலை ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயிலில், பல நாட்கள் உணவு வழங்கப்பட்டது. உணவுடன் தீபாவளிக்காக உடை வழங்கவும் ஏற்பாடு செய்து வருவதாகச் சகோதரர் ரங்காச்சாரி அறிவித்ததைத் தொலைக்காட்சியில் காண நேர்ந்தது. ஸ்ரீ உருத்திர காளியம்மன் கோயிலிலும் இருநூறு பேரும் வழிபாடு செய்யவும் பசியாறவும் உதவி செய்தனர்.

இங்குவரும் தொழிலாளர்களிடம் 'வேலையனுமதி' இருந்தாலும், பார்க்குமிடத்தில் வேலை போனால், அவர்கள் உடனே தாயகம் போய்விட வேண்டியதுதான்! சுற்றுலா விசாவில் வருகிறவர்கள், வேலை பார்க்க முடியாது. மேலும் ஓரிடத்தில் வேலை என்று வந்தவர், அது பறி போனால், வேறு இடத்தில் பார்ப்பதாக, வேலை நியமனத்தை மாற்றிக் கொள்ளவும் முடியாது. இங்குச் சுற்றுலா விசாவில் இருந்துகொண்டே, 'வேலை அனுமதி'க்கு விண்ணப்பிக்கவும் கூடாது.

“என்றாலும் இப்போது பாதிக்கப்பட்டிருக்கும் ஊழியர்கள் தங்கள் நாட்டில் பெரும் பணம் கொடுத்துக் கடன்பட்டுச் சிங்கப்பூரில் வேலைக்கு வந்திருக்கிறார்கள் என்பது தெரிய வந்திருப்பதால், அரசாங்கம் வேலை இழந்த ஊழியர்களை இங்குத் தங்க அனுமதித்து, அவர்களுக்கு மாற்று வேலை பெற்றுத்தர உதவுகிறது” எனத் தமிழ் முரசு இதழில் ஆசிரியர் கடிதம் பகுதியில் சிங்கப்பூர் அரசு அறிவித்துளது. புதிதாக வேலைக்கு ஆள் தேடும் சுமார் 9 நிறுவனங்களிடம் இந்த இருநூறு பேரின் முகவரிகள் தரப்படுகின்றனவாம். இவர்களுக்குத் தங்குமிடத்தோடு, இரண்டாண்டுகள் வேலை தர அரசு ஆணையிட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை இதனோடு முடிவதன்று. இது நிரந்தரமாகத் தீர வேண்டுமேல், இந்த நல்ல சமயத்தில் இதன் முழு விவரமும் தெரிந்து, தமிழக அரசு, நடுவணரசு உட்பட அனைத்துத் தரப்பினரும் சில நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். இங்குப் பல தனியார் நிறுவனங்கள் கூலி வேலைக்கு ஆள் தேடுகின்றன. இந்த ஊரில் கூலி வேலை செய்ய யாரும் முன்வர மாட்டார்கள்; அயல் நாடுகளிலிருந்துதான் வரவழைத்தாக வேண்டும்.

இந் நிறுவனங்கள், குழுமங்களுக்குத் தலைமை ஒப்பந்தர் பலர் இந் நாட்டில் உளர். ஆனால், அவர்கள் நேரே பிற நாடுகளுடன் தொடர்பு கொள்ள இயலாததால், உள் ஒப்பந்தர்களை நாடுகின்றனர். இந்தியாவிலுள்ள உள் ஒப்பந்தர்கள் (Sub - Contractor) தான், இன்றைய இவ் அவல நிலை கட்கெல்லாம் காரணமென்று கூறப்படுகிறது.

இங்கு வேலைக்கென்று வந்தவர்கள்தான் இச்சிறு ஒப்பந்தர்களாக மாறி, முதன்மை ஒப்பந்தர்களுக்கு ஆள் கூட்டி வந்து ஒப்படைக்கின்றனர். இந்தியாவில் ஒன்றரை இலட்சத்திற்குமேல் பணம் பெற்றுக்கொண்டு, வேலையாட்களைக் கூட்டி வருகின்றனர். இங்குள்ள தலைமை ஒப்பந்தர்கள், குழுமங்களிடமும் வேலையாட்கள் தருவதற்காகக் ‘கழிவு தொகை’ பெறுகின்றனராம்! தாம்தாம் ஆள் தருவதாகப் போட்டி போட்டுக் கழிவுதொகை தந்து, ஆட்களைச் சேர்த்துவிடுவதுண்டாம்! ஆக அங்கு தொழிலாளியிடமும் பணம்; இங்கு முதலாளியிடமும் பணம்! ஆசை யாரைவிட்டது! அவலம் எல்லைமீறிப் போய்விட்டது! தொழிலாளியிடம் அளவுக்கு மீறி ஆசை காட்டி அழைத்துவந்து, இங்குப் பொருத்தமில்லாத இடங்களில் விடுவதால், இடையில் வேலை பறி போகிறது; மாதத்தில் 3 நாள்கள் வேலை - மற்ற நாள்களெல்லாம் வேலையின்றி ஆகிறது; குறிப்பிட்ட சம்பளமும் கிடைக்க வில்லை. இவ்வாறு பல இடர்ப்பாடுகள்.

ஒரு தொழிலாளி, இடுப்பு ஒடிந்துவிட, அவரைத் தூக்கி எறிந்துவிட முயன்றதுண்டாம்; ஒரு பையன் வேலை பார்க்கும்போது, எந்திரத்தில் அரைபட்டு மாண்டுபோக, அவனுக்கு இன்றுவரை எவ்வித உதவித் தொகையும் கிடைக்க ஏற்பாடு செய்யவில்லையாம். செய்தால் அந்த 'இந்தியன்' தனக்குரிய 'கமிஷனாகப்' பாதியை விழுங்கிவிடுவானாம்!

உள் ஒப்பந்தர்கள் இவற்றையெல்லாம் கவனிப்பதே இல்லையாம்; பணத்தைக் 'கறப்பதே' தொழிலாம். இந்தியாவில் தராத மீதிப் பணத்துக்கு, அநியாய வட்டி போட்டு, இங்குத் தொழிலாளி வாங்கும் சம்பளத்தைப் பறிப்பது முதல், 'உண்டில்' என்று வசூலிப்பது வரை இதே தொழிலாக இருப்பதால், கொத்தடிமைகளிலும் கேடான சூழலே இங்குளது. சம்பளமும் முழுவதும் போய்ச் சேர்வதில்லை. ஒரு நாளைக்கு 20 வெள்ளி வரை சம்பளமுள்ள இடத்தில், தொழிலாளர்க்கு அதன் முக்கால்பங்கு, அரைப்பங்குதான் போய்ச் சேருமாம்.

அப்படி மோசடி செய்த, ஒரு முகவரின் திருமணம், இந்தியாவில் சுமார் 4 கோடி ரூபாய் செலவில் அண்மையில் நடந்ததாம்!

நல்ல ஒப்பந்தர்களாக அமைந்தால், கவலையில்லை. ஆனால், போலி ஒப்பந்தர் தொகையே இன்று கூடிவிட்டது. போலி ஒப்பந்தர்களை அடக்கவும், நேர்மை உண்டாக்கவும் கருதிச் சிங்கப்பூர் அரசு செயற்படத் தொடங்கிவிட்டது. இனிமேல்,

1. தலைமை ஒப்பந்தர்களுக்கே கூடுதல் பொறுப்பு. ஓர் ஒப்பந்த வேலைக்கு எத்தனை ஊழியர் தேவை என்பதை அரசே முடிவு செய்யும். அதைத் தலைமை ஒப்பந்தர்களுக்கு அறிவிக்கும்.

2. உள் ஒப்பந்தர்கள் எத்தனை பேருக்கு அனுமதி பெறலாமென்பதைத் தலைமை ஒப்பந்தரே அறிவிப்பார்; அதன்படிதான் ஆட்கள் அனுமதிக்கப் படுவர். கண்டபடி இனி யாரையும் அழைத்துவர முடியாது.

3. வேலை தரும் குழுமங்களின் முதலாளிகளும் பொறுப்புடன் நடக்க அரசு வலியுறுத்தும். மேற்படி குழுமங்களை அரசு கண்காணித்துத் தொழிலாளரைத் தக்கபடி நடத்தச் செய்யும்.

இவை உடனடியாகச் செயலுக்கு வருகின்றன. முதலாவதாக இத் தொழிலாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படவேண்டும். இவர்கள் சுமார் 2

இலட்ச ரூபாய்க் கடனில் சிங்கப்பூர் வருகிறார்கள். வேலை பார்க்க ஒப்பிய இரண்டு ஆண்டுகள் முழுவதும் வேலை பார்த்தலான்றி, வட்டியும் முதலுமாக இவர்கள் பணத்தைக் கட்ட முடியாது. ஏதேனும் காரணத்தால் இவர்கள் இடையே இந்தியா போக நேர்ந்தால், குடிமுழுகிப் போய்விடும். கடனுக்கு அடிபட்டுச் சாகவேண்டியதுதான்! அதனால் இந்த முகவர்கள் அடிப்பதையும் உதைப்பதையும் வாங்கிக்கொண்டு, செக்குமாடுகளாய் உழைக்கின்றனர். வாய் திறந்தால் எங்கே வேலை போய்விடுமோ என்று, அஞ்சி அஞ்சிச் சாகின்றனர். செய்தியாளர், தொலைக்காட்சியினர் யார் சென்று, என்ன கேட்டாலும் உண்மை சொல்ல அஞ்சுகின்றனர். சுதந்தரத்துக்கு முன் இந்திய நாட்டில் இந்தியன் அஞ்சி அஞ்சிச் செத்தான் என்று பாரதி பாடினான். இன்று அயல் நாடுகளில் அஞ்சிச்சாவதையும், “கஞ்சி குடிப்பதற்கு இல்லான், அதன் காரணங்கள் இவையென்று சொல்லவும் அஞ்சுவான்” என்பதையும் பாட, இன்று யாருமில்லை! கொடுமை என்னவென்றால், இந்தியனை வாயில்லாப் பிராணிகளிலும் மோசமாக நடத்துபவனும் இந்தியனே என்பதுதான்!

இரண்டு ஆண்டுகளும் உழைத்தால்தான் இரண்டு இலட்சம் கடனும் வட்டியுடன் அடைபடும். மேலும் இரண்டு ஆண்டுகள் வேலைவாய்ப்புக்கு இங்கு இடமுண்டு. அங்ஙனம் தொடர்ந்து கிடைத்தால், இத்தொழிலாளிகள் ஓரளவு செல்வ வளத்துடன் இந்தியா சென்று வாழலாம். ஆனால், புதிது புதிதாக ஆள்கொண்டு வந்தால்தான் தங்களுக்குப் பணம் கிடைக்கு மென்பதால், இப்போலியாளர்கள் அனுபவப்பட்ட பழைய வேலையாட்களைக் கழுத்தைப் பிடித்துத்தள்ளி, இந்தியாவுக்கு அனுப்பி விடுகிறார்கள்!

அவதிப்படுபவர் தமிழர்களே என்பதால், நமது நடுவணரசுக்கு மட்டுமன்றித் தமிழக அரசுக்கும் இதில் அக்கறை ஏற்படல் வேண்டும்.

(தினமணி : 27-10-1997)

## 16. புலி வருகிறது புலி!

சிறு பிள்ளைகளை அடக்குவதற்காகச் சில தாய்மார்கள், 'புலி வருது, சிங்கம் வருது' என்று பயங்காட்டுவதுண்டு. இன்று, "நீ விடுதலைப் புலிகளுக்கு உறவா, ஆதரவா" என்று கேட்டே, ஒவ்வொரு தமிழனின் உயிர் நாடியும் அடக்கி ஒடுக்கப்பட்டு விடுகிறது.

ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு, தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டது. இங்கு இல்லாத ஓர் இயக்கம் தடை செய்யப்பட்டது. விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்கச் சட்டம் கொண்டுவரப்பட்டதென்று சமாதானம் சொல்லலாம். பாரதத் தவ மைந்தன் எனக் கருதப்பட்ட ஒருவரின் அரிய உயிர் பறிபோன அதிர்ச்சியாலும் அனுதாபத்தாலும் தமிழர்கள் இச்சட்டத்தை எதிர்க்காமல், அமைதியாக முழு மனத்துடன் உடன்பட்டனர்.

நாமும் தமிழ் பேசுகிறோம்; விடுதலைப் புலிகளும் தமிழ் பேசுகிறார்கள். நம் இருவருக்கும் மொழி, இலக்கியம், பண்பாடு போன்றவற்றில் பொதுப் பாரம்பரியங்கள் பலவுள. அண்ணனும், தம்பியுமாகப் பிறந்தவர் களிடையே இரத்த சம்பந்தம் இருக்கவே செய்யும். இதற்காகத் தம்பி வன்முறையாளனாக மாறினால், அண்ணன் மீது சந்தேகப்பட்டுத் கொண்டே இருக்க வேண்டுமா?

உண்மையாகப் பார்க்கப் போனால், நடுநிலையோடு சிந்தித்தால், விடுதலைப் புலிகளின் வன்முறையை இங்குத் திராவிட இயக்கத்தவரும் சரி, பொதுமக்களும் சரி யாரும் ஆதரிக்கவில்லை. வன்முறை வழியையே எண்ணாத, அறியாத தமிழர்களைப் பார்த்து, எதிர்பாராத சூழலில் ஏற்பட்டு விட்ட ஒரு விபத்துப் போன்ற பேரிடர் காரணமாக நாளும், "நீங்கள்தான்

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாளர்கள்” என்று ஒரு கட்சியினர் எதிர்க்கட்சியினரைக் குற்றம் சாட்டுவதும், அவர்கள் “இல்லை இல்லை நீங்களே ஆதரவாளர்கள்” என்ற மறுதளிப்பதும் ஒரு சோக நாடகமாக நடைபெற்று வருகிறது.

தமிழர் என்ற உறவையும், அனுதாபத்தையும் விட்டுத் தள்ளுங்கள். இலங்கை, தமிழகத்தின் அருகில் உளது; பூகோளப்படி யாழ்ப்பாணத்தவர் தமிழகத்தில் நுழைய, இங்கும் அங்கும் போய் வர வாய்ப்புகள் அதிகம் உள. இதைக் கட்டுப்படுத்திக் கொண்டே இருந்தாலும், நில அணிமை காரணமாக நடப்பதை, சிலர்மீது ‘குற்றப்பத்திரிகை’ வாசிக்கப் பயன்படுத்தலாமா? இந்தியா எங்கும் பாகிஸ்தானிய உளவாளிகளும், தீவிர வாதிகளும் ஊடுருவுவதை என்ன செய்ய? இதை வட நாட்டவரோ, இந்தியரோ ஆதரிக்கிறார்கள் என்றா பொருள்? இதைக் காரணம் காட்டி, நடுவணரசைக் கலைத்து விடலாமா?

விடுதலைப் புலிகள் வன்முறைப் போக்குடன் கருத்து வேறுபடு பவர்களே, இங்கு நூற்றுக்குத் தொண்ணூற்றுறொன்பது பேர். அதற்காகச் சிங்களவர்கள் சாதாரணத் தமிழ் மக்களைச் சித்திரவதை செய்வதையோ, தமிழையும் தமிழனையும் இரண்டாம் தரமாக வைத்து நடத்துவதையோ, தமிழர்களுக்கு ஆட்சியில், அதிகாரத்தில் இடம் தராமல் அடிமைகளாய் ஆக்கிவிட முயலுவதையோ பற்றி, இங்குள்ள தமிழர்கள் பேசவே கூடாதா? தங்கள் உடன்பிறப்புகள் சித்திரவதைப் படுவதைப் பொறுத்துக் கொள்ளாவிட்டால், உன்னை விடுதலைப் புலலிகளின் ஆதரவாளன் என்று தொலைத்துவிடுவேன் என்று மிரட்டுவதா?

வன்முறையை ஆதரித்துப் பேசினால் குற்றம்; விடுதலைப் புலிகளுக்கு இங்கிருந்து குண்டுகள் தயாரித்து அனுப்பினால் குற்றம்; பொது மக்கள் பணம் சேகரித்து அனுப்பினர் எனக் கண்டால் குற்றம் எனலாம்.

யாழ்ப்பாணத்துப் புலிகள் தமிழர்கள் என்பதற்காக இங்குள்ள யான், “நான் தமிழனில்லை; இல்லவே இல்லை” என்று சத்தியம் செய்ய முடியுமா? வேண்டுமா? தேவையா?

விடுதலைப் புலிகள் வன்முறையைக் கைவிட்டு, கிடைத்தவரை சுய ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுப் படிப்படியாக யாழ்நாட்டை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் - சிங்கள அரசுடன் பேச்சு வார்த்தை மூலமே

அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளவெண்டும் - கூடிய மட்டும் அறப் போராட்டங்களில் மட்டுமே ஈடுபட வேண்டும் - வன்முறையால் வன்முறையே வளரும் - வன்முறை கூடவே கூடாது என்ற கருத்துடையவர்களே இங்குப் பெரும்பான்மையினர். அதற்காகக் குருதி கொட்டும்போது அனுதாபப் படாமல் - பல ஆயிரம் தமிழ் மக்கள் வீடு இல்லாமல், சொத்து சுகங்களை இழந்து பரிதவிப்பதைப் பார்த்து அழாமல் இருக்க முடியுமா? தமிழினம் உலகெங்கும் சிதறிப் போனதை எண்ணிக் கவலைப் படாதிருக்க முடியுமா? பேராசிரியர் சிவத்தம்பியும், மனோன்மணி சண்முகதாசும் போன்ற இன்னபிற யாழ்ப்பாணத் தமிழ்ப் பேரறிஞர்களை எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கும், அண்மையில் தஞ்சையில் நடந்த உலகச் சைவ சமய மாநாட்டிற்கும் வந்தபோது, அவர்களை அவமானப்படுத்தி, வந்த காலுடனேயே, மனைவி பிள்ளை குட்டிகளுடன் ஓடஓட விரட்டியதைப் பார்த்து, நெஞ்சம் பதை பதைக்காமல் இருக்க முடியவில்லையே!

இங்கு இன்னும் மானமுள்ள தமிழர்கள் இருக்கத்தானே செய்கின்றார்கள்; முதுகெலும்புள்ள தமிழர்கள் ஒருவர்கூட இல்லாமலா போனார்கள்?

சிவத்தம்பி போன்ற சான்றோர்கள் யாழ்ப்பாணத்தில் பிறந்தது குற்றமா? அவரும் நாமும் எல்லோரும் தமிழ் பேசும் தமிழர்கள் என்பது குற்றமா? அவர்கள் தங்கள் கையிலே தொல்காப்பியத்தையும், சங்க இலக்கியத்தையும், சிவஞான போதத்தையும் தானே ஏந்திக்கொண்டு வந்தார்கள்? கைகளில் குண்டுகளையா கொண்டு வந்தார்கள்? அல்லது அவர்கள் உளவாளிகளாக வந்தார்கள் என்று ஒரு சான்று காட்ட முடியுமா?

நான் தமிழனாகப் பிறந்ததே குற்றமென்றால், தமிழனாகப் பிறந்ததற்காகவே ஒவ்வொரு நாளும் ஐயுறவோடு பார்க்கப் படுவேனென்றால், விடுதலைப் புலிகளின் ஆதரவாளன் என்று எந்த நிலையிலும் 'தடா'வில் அடைக்கப்படுவேன் என்றிருந்தால், எத்தனை நாளுக்கு நாள் என் பிறப்பை நொந்து கொண்டிருப்பேன்? ஒரு நாள் என்னையும் முந்திக் கொண்டு எனது நெஞ்சம் கொதித்து எழுமானால், இந்த நாடு என்ன ஆகும்?

உலகில் புரட்சிகள் வெடித்த நாடுகளை எண்ணி, வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். தூங்கும் புலி மீது இடறி விழுந்த குருடன் போல் நிலைமை ஆகிவிடக்கூடாது என்றே எச்சரிக்க விரும்புகிறோம்.

இன்று தமிழர்களும், தமிழகத்தை ஆள்பவர்களும் திரும்பத் திரும்ப, “நாங்கள் விடுதலைப் புலிகளை ஆதரிக்கவில்லை; ஆதரிக்கவேயில்லை” என்று சத்தியம் செய்தவண்ணம் இருக்க வேண்டியுளது. இது ஒரு கற்புப் பரிசோதனை போல் ஆகிவிட்டது.

ஒரு சந்தேகப் பேர்வழி தன் மனைவியை, ‘உன் கற்புப் பற்றிச் சந்தேகமாக இருக்கிறது. நீ அப்படி, இப்படி’ என்று ஒவ்வொரு நாளும் அவளை ஏசிச் பேசி, ‘விரட்டி விடுவேன்’ என்று மிரட்டிக் கொண்டேயிருந்தால், நிலைமை என்ன ஆகும்? மானமுள்ள அப்பெண் என்ன செய்வாள்? தாங்க முடியாத நிலையில், என்றாவது ஒருநாள், அவளுக்குச் சீற்றம் பொங்கி, “அடப் போய்யா! நான் கெட்டவள்தான்! உன்னைக் கட்டிக்கிட்டதே தப்புத்தானய்யா” என்று, அவன் முகத்தில் காறித் துப்பிவிட்டு, வெளியேறிவிட மாட்டாளா?

விடுதலைப் புலிகள் நில அணிமை காரணமாகவே இங்கு ஊடுருவவும், சில மறைமுக வேலைகள் செய்யவும் வாய்ப்பாகிறது. அது அவர்கள் குற்றமேயன்றி இங்குள்ள தமிழர்களின் குற்றமாகாது. கூடுமானவரை அவர்களைத் தடுக்கவும், நீக்கவும், தண்டிக்கவுமே இங்குள்ளவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். இதை அரசியல் ஆதாயம் தேட ஒரு வழியெனக் கொள்வதையோ, தமிழக அரசைக் குறிப்பிட்ட காலம்வரை ஆளவிடாமல் கலைத்து விடுவதற்கோ பயன்படுத்தினால், அது மாபெரும் தவறாகிப் போகும்.

ஒருவருக்கொருவர் பகையென்றால், வேறு காரணங்களைத் தேடுங்கள்! நீங்கள் பகைத்துச் சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக ஆடும் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கத்தானே, இந்த நாட்டு மக்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

காஷ்மீரில் நடக்கும் ஊடுருவல்; குண்டுவெடிப்புகள்; மும்பையில் நடக்கும் வன்முறைகள்; தில்லியில் அடிக்கடி நடக்கும் கொடுமைகள், இந்திய எல்லையோரப் பகுதிகளில் நடக்கும் அட்டூழியங்கள் இவையாவற்றுக்கும் அந்தந்தப் பகுதியினர் காரணமா? ஊடுருவி வன்முறையில் ஈடுபடுவோர் காரணமா? இவர்களில் யாரைத் தண்டிக்கவேண்டும்? இதற்காக எந்த எந்த ஆட்சிகளைக் கவிழ்ப்பது? எல்லாவற்றையும் எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

தமிழனுக்கு மட்டும் ஒரு தனி நீதி என்று போகுமானால், இங்குள்ளவர்கள் எல்லாம் ‘விடுதலைப் புலி ஆதரவாளர்கள்’ என்று திரும்பத்

திரும்பக் கூறி, பழிதூற்றி, ஆட்சிகளைக் கலைத்துத் துன்புறுத்திக்கொண்டேயிருப்பார்களானால், அது வெட்டத் துளிர்க்கும் மரம் போல, இங்கொரு 'விடுதலைப் புலிகள் இயக்கம்' துளிர் விடவே வழிவகுக்கும்.

புலிகள் பற்றிப் பள்ளிக்கூடப் பாடப் புத்தகத்தில் வந்தால்கூட, 'எங்கே புலிகளின் ஆதரவாளர்கள் என்று நம் ஆட்சியே கலைக்கப்பட்டுவிடுமோ' என்று, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிக்கு வந்தவர்களே அஞ்சி அஞ்சி நடுங்கும்படி நிலை நீடிக்குமானால்; ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்களே, 'சத்தியம் செய்து, புலிகளை அடக்கி ஒடுக்குவதாகச்' சரண்புகுமாறு செய்ய இதை ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொண்டேயிருப்பார்களானால்; மனிதன் என்பவன் மானமுள்ளவனாதலால், 'ஆமாம், நான் ஆதரவாளன் மட்டும் இல்லை! நானே புலிதான் - நான் ஒரு விடுதலைப் புலி!' என்று தன்னை மறந்து கூவும் நிலை ஏற்பட்டுவிடக் கூடும்.

இங்குள்ளவர்களையெல்லாம் சந்தேகக் கண்ணோடு பார்த்து, தமிழர்கள் நெஞ்சில் கொஞ்சம் கொஞ்சமாக நஞ்சைக் கலந்து, தமிழகத்தை இந்தியாவை விட்டுப் பிரித்துத் தனிமைப் படுத்திவிட முயல்பவர்களை - மறைமுகமாகத் தங்களை அறியாமல் தமிழர்களை வேறுபடுத்திப் பிரித்துப் பார்த்துக் கொடுமைப்படுத்திப் பிரிக்க முயல்பவர்களைப் பார்த்து, ஒன்று மட்டும் சொல்லலாம்: "இது இந்திய ஒருமைப்பாட்டிற்கு உகந்ததன்று; பாரதத்தைச் சிதைக்க நீங்களே முயலாதீர்கள்!" என்று.

மனுநீதிச் சோழன் கட்டிவைத்த ஆராய்ச்சிமணி இது. இதன் ஓசை எல்லோர் செவியிலும் விழுந்தால் நல்லது.

(தினமணி : 21-4-1998)

# 17. கட்டுரை இலக்கியம்

'கட்டுரை' என்ற சொல், பழமையானது. இளங்கோவடிகள் பல இடங்களில், 'கட்டுரை' என்ற சொல்லை ஆள்கிறார். தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்றவற்றிலும் அரிதாக ஆளப்படுகிறது. 'கட்டு' என்பது, 'முன்னறிந்துரைத்தல்' எனப்பொருள்பட்டு, கட்டுவிச்சி வாயிலாகக் கட்டு உரை கட்டுரையாக வெளிப்படுதல் பற்றியன ஒருவகை. கட்டுரை - 'புனைந்துரை' எனப்படுதலும் உண்டு. சிலம்பில், 'கட்டுரை' என்பது, நாடகக் கலைச்சொல்லாக ஆளப்படுகிறது. காண்டம் தோறும் உள்ள 'கட்டுரை' காண்டப்பொருளைத் தொகுத்துரைக்கிறது. 'நூற் கட்டுரை' என இறுதியில் இடம்பெறுவது, நூலில் இடம்பெறும் ஆடல்பாடல் கூத்து முதலியவற்றால் முடிக்கப்பெற்ற தன்மையைச் சுட்டி, 'முடிவுரை' போலவுளது.

'கானல்வரியில்' கட்டுரைகள் பலவுள. அவை இடையிடையே கதையைக் கூறித் தொடர்புபடுத்தும் இடங்களாக உள்ளன. 'ஆங்குக் கோவலன் பாடிய கானல்வரி கேட்ட மாதவி, இவன் தன்னிலை மயங்கினான் என யாழ் வாங்கித் தானும் ஒரு குறிப்பினள்போல் பாடத்தொடங்கும்மன்' என்பது கோவலன் வரிப்பாட்டுக்கும், மாதவி வரிப்பாட்டுக்கும் இடையிலுள்ள கதை கூறும்பகுதியாகும். இதுவே 'கட்டுரை' எனப்படுகிறது. சிலம்பின் மதுரைக் காண்ட இறுதியில், 'கட்டுரை'க் காதை ஒன்றுளது. அது மதுராபதித் தெய்வம், கண்ணகிக்குப் பழம்பிறப்புக் கூறி, வரப்போவதை உரைத்த உரையாகும். கட்டுரை, இவ்வாறு பொருள் வளர்ச்சி பெற்றுப் 'பொருள் பொதிந்த சொல்', 'உறுதியையுடைய சொல்' எனவும் பொருள்படக் காண்கிறோம். பதிகத்தில் 'கட்டுரை' (அடி. 82) என வரும்போது, அரும்பத உரையாசிரியர் 'விளங்கச் சொல்லுதல்' எனப் பொருள் எழுதுகிறார். ஆனால், அடியார்க்கு நல்லார் முற்பிறப்புச் செய்தியைக் கட்டுரைத்த என எழுதிப்போகிறார்.

'கோவலன் கூறும் ஓர் குறியாக் கட்டுரை' என்றும் (.37), 'உலவாக் கட்டுரை பலபாராட்டி' (அடி. 81) என்றும் வருமிடங்களில், கோவலன் கண்ணகியின் நலம் பாராட்டிய பகுதிகள், 'கட்டுரை' எனப்படுகின்றன. இங்கு அடியார்க்கு நல்லார் 'கட்டுரை - நலம் பாராட்டல் என்னும் பொருள் பொதிந்த உரை' என்று விளக்கக் காண்கிறோம்.

## தொடக்க நிலை

இன்று நாம் 'கட்டுரை' எனக் கூறுவது, ஒரு புதிய இலக்கிய வகை என்றே கூறலாம். பழைய சொற் பொருட்தொடர்பு உண்டே தவிர, வகைமை தமிழுக்குப் புதியதே. மேலைநாட்டார் வருகையின் வழிக்கதை இலக்கியங்கள், வடிவமும் வரம்பும் பெற்றுத் தழைத்தன; கட்டுரை இலக்கியம் உருப்பெற்று வளரலாயிற்று.

முழுமையான கட்டுரை வகைகள் என்று கருதுங்காலத்து, சென்ற 19ஆம் நூற்றாண்டின் இறுதி முதலே இவ் வகைமை வளரலாயிற்று. தொடக்கத்தில் இவ் வகைமை ஆங்கிலத்தைப் பின்பற்றி, ஆங்கிலம் கற்றவர்களால் தமிழில் வரையப்பெற்றது. எனக்குக் கிடைத்த சான்றாதாரங்களின் வழி, யான் இங்கு இருவரை மேற்கோளாகக் காட்ட எண்ணுகிறேன். உண்மையில் இவர்களைப் போல்வார், மேலும் பலர் என்பதை யான் மறுக்கவில்லை; மறக்கவும் இல்லை.

டி. செல்வக் கேசவராய முதலியார், எம்.ஏ., எழுதி வெளியிட்ட தமிழ், தமிழ் வியாசங்கள், வியாச மஞ்சரி என்ற நூல்கள் குறிப்பிடற்பாலன. இவற்றுள் பல 1900 ஆண்டினை ஒட்டி நூல் வடிவாக, அன்றே வெளியிடப் பெற்றவை. ஆயினும், அவை எழுதப்பெற்ற காலம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலமாகும். இவற்றுள் 'தமிழ்' என்ற நூல், அட்டை மேல் Tamil An Essay என ஆங்கிலத்தில் குறிக்கப்பெற்றிருப்பதுடன், முன் பக்கங்கள் பல, முன்னுரை (Preface) உட்பட ஆங்கிலத்திலேயே உள்ளன. இதன் ஆங்கில முன்னுரைப் பகுதி குறிப்பிடத்தக்கதாகும் என்பதால், அதை அடிக்குறிப்பில் முழுமையாகத் தந்துள்ளேன்.[1] "இக் கட்டுரைகள், கடந்த

---

A series of articles on Tamil, about fifteen in number, was contributed by me to the "Swadesamitran" in the early nineties of the last century. A digest of these articles was subsequently read by me before the Tamil Society of the Madras Christian College, the late Rao Bahadur C.W. Damodaram Pillai B.A., B.I., presiding. To the digest I added some traits of the tamils and called it "Tamil and the Tamils". This was published in the Manoharan in 1896. (T.C. Tamil - An Essay, Preface perambore, Ist January 1906.)

நூற்றாண்டின் இறுதியில், சுதேசமித்திரன் என்ற இதழுக்கென்று எழுதப்பட்ட பதினைந்து என்ற எண்ணிக்கையுடையவையாகும். இவற்றின் சாரத்தைத் தொகுத்து, சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்க் கழகத்தில், சி.டபிள்யூ. தாமோதரம் பிள்ளை தலைமையில், திருவாளர் செல்வக் கேசவராயர் படித்துள்ளார். அப்போது தமிழரின் சில தனித்தன்மைகளைப் பற்றிய சிலவற்றை இணைத்துக் கட்டுரையைத் 'தமிழும் தமிழரும்' (Tamil and the Tamils) என்று படித்ததாக அவர் கூறுகிறார்.

இதிலுள்ள கட்டுரைகளில், வடமொழிச் சொற்கலப்பு மிகுதி. ஆயினும், இவை மிகச் சுவையாகப் படிக்கத் தக்கனவாயுள்ளன. கருத்துகளைப் பகுத்துக் கொண்டு விளக்கும் முறை, கட்டுரை அமைப்பைப் போற்றுவதாயுளது. உள்தலைப்பு இடுதல், ஆய்வு நோக்கில் கருத்துகளை அணுகுதல், மேற்கோள் காட்டி இடம்சுட்டி எழுதுதல் போன்ற பல கட்டுரை மரபுகளை இவை போற்றுகின்றன.

வி.கோ. சூரியநாராயண சாத்திரியாரின் 'தமிழ் வியாசங்கள்' என்ற நூல், அடுத்துக் கருதத் தக்கதாகும். இதிலுள்ள கட்டுரைகள் பதினெட்டு. இவையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வெளியிடப்பெற்றனவே. ஞானபோதினி, சென்னைக் கிறித்தவக் கல்லூரி மலர், விவேக சிந்தாமணி, செந்தமிழ் போன்ற இதழ்களில் வெளியிடப்பெற்றன என, ஒரு குறிப்புத் தரப்பட்டுள்ளது. முதல் கட்டுரை 'தற்காப்பு நியமம்' என்பது, 'Law of self Preservation' என்ற ஆங்கில வழிப்பட்ட கருத்துரை ஒன்றின் விளக்கமாகும். இக்கட்டுரையுள் வரும் உள்தலைப்புகளையும், அடைப்புக் குறிக்குள் வரும் ஆங்கிலத் தொடர்களையும் காண்பார், மேலை இலக்கியச் செல்வாக்கால் கட்டுரை வகை உருவாகும் போக்கினை நன்கு கண்டு கொள்வர். இதிலுள்ள பொய்த்தோற்றங்கள் என்ற கட்டுரை, உளவியல் தொடர்புடையது. 'ஜீவராசிகளின் நாநாவித வர்ணங்கள்' என்ற கட்டுரை, இயற்கை அறிவியல் பற்றியது. உயர்தனிச் செம்மொழி என்ற கட்டுரை, தமிழை மதியாத பல்கலைக்கழகத்தை எதிர்த்து அறிவுறுக்குமாறு எழுதப்பட்ட சிறந்த, சிறு கட்டுரையாகும்.

மேற்கண்ட இரண்டு கட்டுரை நூல்களுமே, கல்லூரிகளில் பாட நூல்களாக வைத்தற்கென்று தொகுத்து வெளியிடப்பட்டன என, அவற்றின் முன்னுரைகளால் உய்த்துணர முடிகிறது. தமிழில் கல்லூரிகளில் பாடமாக வைக்கவேண்டும் என்ற சூழலால் உருவாகி வளர்ந்த வகைமைகளில், கட்டுரை நூல்களும் கவிதை நாடகங்களும் குறிப்பிடற்பாலனவாகும்.

அடுத்து, கட்டுரை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க இருவர் கா.நமச்சிவாய முதலியாரும், ஆறுமுக நாவலரும் ஆவர். இவர்கள் ஆங்கிலத்திற் போலத் தமிழில் புகழ்பெற்ற பாடநூல்களை யாத்தளித்தனர். அவை தொடக்கம் முதல் பல்வேறு வகுப்புகட்குரியனவாய், பல்வகைக் கட்டுரைகளை உட் கொண்டு விளங்கின. கட்டுரை, அறிவுத் தெளிவைத் தருகிறது; ஒரு கருத்தை விளக்குகிறது; ஏதேனும் ஒரு பொருள் பற்றிய திறனாய்வாகவோ, ஆய்வாகவோ அமைகிறது. பாட நூல்களில் பசு, தென்னை, விண் வெளிக்கோள், தமிழ்ச் சங்கங்கள், காவிரி, மதுரை என இவ்வாறு ஏதேனும் ஒருபொருள் பற்றியனவாய்த் தெளிவுற அமையும்மரபை, இப்பாடநூற் கட்டுரைகள் போற்றின.

சொற்பொழிவுகள் பல, கட்டுரை நூல்களாயினமையை அடுத்துக் குறிப்பிடலாம். திரு.வி.க தம்முடைய சொற்பொழிவுகள் பலவற்றைக் கட்டுரை களாக அமைத்து வெளியிட்டுள்ளார். பவணந்தி முனிவர் ஆசிரியன் இலக்கணம் கூறுமிடத்துக் ‘கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும்’ வேண்டுமென்றார். கருத்தைத் தொகுத்து வெளியிடுமாற்றலை அவர் கட்டுரை வன்மையென்று எடுத்துரைத்தார். திரு.வி.க. போல்வார் தம் கட்டுரை வன்மையைக் ‘கட்டுரை’ ஆக்கத்திற்குப் பயன்படுத்தியதால், இவ் வகைமை உயிர்ப்பும் உணர்வும் பெற்றதெனலாம். அவருடைய ‘தமிழ்ச் சோலை’ அனைய நூல்களில், இவ்வகைக் கட்டுரைகளைக் காணலாம். பண்டிதமணி மு. கதிரேசனார் வெளியிட்ட ‘உரைநடைக் கோவை’ எனப்படும் இரு தொகுதிகளும், சொற்பொழிவுகள் கட்டுரைவடிவாக அமைந்தவையே ஆகும். ஞானத்தின் திருவுரு, அன்பின் திருவுரு எனக் கட்டுரைகளாகவே எழுதப்பட்டவையும் இவற்றினூடே காணப்படுகின்றன.

கட்டுரை நூல்களாகவே எழுதவேண்டுமென எண்ணி, எழுதப் பட்டவை மறைமலையடிகளின் சிந்தனைக் கட்டுரைகள், அறிவுரைக்கொத்து, நாவலர் வேங்கடசாமி நாட்டாரின் கட்டுரைத் திரட்டு போல்வன குறிக்கத் தக்கன. இவை மேலை நாட்டார்போல், கட்டுரைகள் எழுதும் தனிச்சிறப்புக்கு - படைப்பாக்கத்துக்கு வழிவகுத்தன.

செந்தமிழ், சுதேசமித்திரன் போன்ற முற்பட்ட கால இதழ்கள் பல, தமிழில் கட்டுரை வகைமை வளர உதவியுள்ளன. அவை இருவகையில்

1. புலமை மிக்கோரால் போற்றப்படும் இதழ்களில் மட்டுமே வெளிவந்தவை.
2. பொது மக்கள் பலரும் படிக்குமாறமைந்த இதழ்களில் வெளிவந்தவை.

ஆராய்ச்சிக் கட்டுரைகள் மட்டுமன்றி, செந்தமிழ்ச்செல்வி போன்ற இதழ்களில் க.ப. சந்தோஷம் என்ற பெயருக்குரிய 'மகிழ்நன்' போல்வார் எழுதிய நகைச்சுவைக் கட்டுரைகளும் இவண் குறிக்கற்பாலன. இன்றைய இதழ்களில் வெளிவருவனவற்றுள், கருத்துச் செறிவு, ஆய்வு வன்மையெல்லாம் இருப்பினும், 'கட்டுரை' என்ற வகைமைக் கேற்ற வரையறையும் சீர்மையும் உடையன மிகச்சிலவேயாம். ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பீடு செய்தார் - செய்வார் எவருமிலர். ஆயினும், சிறுகதையிலும் மிகுதியாகப் பல்கிப் பெருகுவது - இதழ்களில் வெளியிடப் படுவது - பல்வேறு துறைச்செய்திகளும் எழுதி வெளியிடப்பெறுவது கட்டுரை வகைமைதான். அதில் எவரும் கருத்தைக் செலுத்தாதது வியப்பைத் தருகிறது.

கதை இலக்கியம், கவிதை இலக்கியம் போலக் கட்டுரை இலக்கியம் பற்றி, மிக விரிவாக யாரும் எழுதவில்லை. மேலை நாட்டினர் குறிப்பாக ஆங்கிலத்தின் செல்வாக்கால் தோன்றி வளர்வதே கட்டுரை இலக்கியம். நம் உரையாசிரியர்களின் உரைநடை தவிரக் 'கட்டுரை' என்ற புதியவகை ஆங்கில இலக்கிய வழிப்பட்டதே.

கட்டுரை வகைகள் பற்றித் தொகுக்க வேண்டும். சிறந்த கட்டுரைகளை மனப்பாடம் செய்தால், சிறந்த 'மொழி நடை' வாய்க்கும் என்பர். கட்டுரைகளின் கட்டமைப்பும் பலவகைப்படும். தலைப்பிடுதல், முன்னுரை, சொல்லவந்த உட்பொருளைப் பல கூறுகளாகப் பகுத்து எழுதுதல், முடிவுரை என்ற அமைப்பு பழம் மரபு பற்றியது. இன்று புதிய புதிய அமைப்புகள் வந்துவிட்டன.

ஒரு கட்டுரை ஆசிரியன் தொடங்கும்போதே, தான் சொல்லவந்த கருத்துக்கு வந்துவிட வேண்டும். பள்ளி இறுதி வகுப்பில், 'கட்டுரைக் கலை' பற்றி (Art of the Essayist) ஒரு கட்டுரையைப் படித்து இன்றும் நினைவிலுளது.

1. ஒரு கட்டுரை, ஒரு கருத்துப் பற்றியதாக மட்டுமே முதலிலிருந்து முடிவுவரை அமைய வேண்டும்.

2. சொல்ல வந்ததை விட்டுவிட்டு, 'மற்றொன்று விரித்தல்' கூடாது.

3. எளிமை நோக்கியும் இனிமை நோக்கியும் சுவைபட எழுத வேண்டும்.

4. ஒரு சொல் கூட வேண்டாதது என, ஒதுக்கும்படி இருக்கக் கூடாது.

5. உள்தலைப்புகள் தேவைப்படின், அவ்வாறு இடுதல் சோர்வைப் போக்கும்; தெளிவு தரும்.

6. 'சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்' - என்ற அழகு மிக முக்கியம். எழுத்தாளனின் கருத்து, வாசகனுக்குப் போய்ச் சேரவேண்டும். சிலர், பக்கம் பக்கமாக எழுதுவார்கள். என்ன எழுதிப் போகிறார்கள் என்பதே விளங்காது.

7. நல்ல சொற்பொழிவாளன் அல்லது பெருஞ் சொற்பொழிவாளன், எழுத்தாளனாக இயல்வதில்லை. மிகச் சிறந்த எழுத்தாளர் சிலருக்குப் பேச்சுக் கலை வராது. எழுதுவது - ஓர் இயல்பு, உணர்வு, பழக்கம்.

8. கட்டுரையாசிரியன் தன் கட்டுரையின் தொடக்கத்தில் முதற் பத்தியிலேயே, தான் சொல்லவந்த கருத்துக்கு வந்துவிட வேண்டும். முடிந்தால் முதல் வரியிலேயே, மேலும் இயன்றால் முதற் சொல்லிலேயே, இவர் இதுபற்றி எழுதப் போகிறார் என உணர்த்திவிட வேண்டும்.

9. ஒரு பத்தியின் முடிவுவரி, அடுத்த பத்திக்குத் தோற்றுவாய் போலவும், அடுத்த பத்தியின் முதல்வரி முன்பத்தியின் தொடர்ச்சி போலவும் ஓர் இயைபு வேண்டும். கருத்தின்றிப் பத்தி பிரிப்பது தேவை அற்றது. பத்திப் பிரிப்பே ஒரு கலையாகும்.

10. கட்டுரைகள் பயனை விளைவிப்பனவாதல் வேண்டும். சிறந்த கட்டுரைகளால், சமுதாய மாற்றத்தை, புரட்சியை ஏற்படுத்திவிடலாம்.

இவ்வாறு கட்டுரைக்கலை பற்றி ஆராய்ந்து, சிறந்த கட்டுரை உரை நடையாசிரியர்களைத் தேர்வு செய்து, அவர்கள் எழுதும் நெறிமுறைகளைக் கண்டறிந்து, இளையவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். இது மறைமலையடிகள் நடை, இது திரு.வி.க நடை, இது ரா.பி. சேதுப்பிள்ளை நடை என இனம் பிரிக்கக் கூடிய சிறப்பு உரைநடையாசிரியர்கள் மிகச்சிலரே. பிறர் பலரும் பொது உரைநடை எழுதி வெற்றி பெறுபவர்கள்.

தமிழ் இருவகை வழக்குடைய மொழி. பேசுவதுபோல் எழுதக் கூடாது, எழுதுவதுபோல் பேசுவதில்லை. உலக மக்கள் பேச்சுநடை, வட்டார வழக்கு எனும் பெயரால், எழுத்தில் கொச்சைப் படுத்தி, கலப்படமாக்கி, பிழைபட எழுதக்கூடாது. எழுத்துத் தமிழே கட்டளைத் தமிழ்; அதுவே பொதுத்தமிழ். பேச்சுவழக்கு மாறும்; திரிவுபடும். எழுதும்போது, அது கதையோ, கட்டுரையோ, கவிதையோ எதுவாயினும், அதைக் கட்டளைத் தமிழில்தான் எழுதவேண்டும்.

# 18. எழுதும் கலையில் முயற்சியும் பயிற்சியும்

தொன்மைமிக்க காலத்தில், கேட்பவருக்குச் சொல்லுதல் வழக்கமாயிருந்தது. இன்று, படிப்பவருக்கு எழுதுதல் வழக்கமாயிருக்கிறது. சொல்லுவதிலிருந்துதான் எழுதுவது வளர்ந்தது. சொல்வதென்பது வாய் மொழியாகச் சொல்லும் திறன் சார்ந்து கதைகூறல், சொற்பொழிவு, விவாதம், கலந்துரையாடல், பாடுதல் என வகைமை வளர்ச்சி கண்டது. எழுதுவதென்பது பல்வேறு நிலைகளில் எழுதும் ஆற்றலைச் சார்ந்தது. இலக்கிய வகைகளாகவும் ஏனைய துறைகளாகவும் எல்லையற்ற வளர்ச்சி பெற்றுள்ளது.

பேசுவதைப் பேச்சுக்கலை என்பதுபோல், எழுதுவதும் ஒரு கலையாகும். இரண்டும் இடைவிடாத பயிற்சியால் அமைவன.

எழுதுவதென்பது ஒரு பழக்கம் சார்ந்தது. சிலர் பேறறிஞர்களாகத் திகழ்வர்; ஆனால், ஒருவரிகூட எழுதமாட்டார்கள். எழுதுகிற மனப்பழக்க மின்மையே காரணமாகும். சிலருக்கு எழுதும் திறமையின்மையும், எழுதுவதை ஒரு கலையாக வளர்த்துக் கொள்ளாமைக்குக் காரணமாகும். அவர்கள் எழுத்தின் இன்றியமையாமையை உணர்வதில்லை. உணர்ந்திருந்தால், எழுத்துத் திறமையைக் கட்டாயம் வளர்த்துக் கொண்டிருப்பார்கள்.

தொல்காப்பியர் காலத்தில், அவருக்கு நிகராகவும் ஓரளவேனும் அவர்போன்ற புலமையுடனும் பலர் திகழ்ந்திருப்பார்கள்; நல்லாசிரியர்களாக விளங்கியிருப்பார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் நமக்கும் எதுவும் இப்போது தெரியவில்லை. 'யாப்பறி புலவர்,' 'தொன்மொழிப் புலவர்' என்றெல்லாம் அவரே பலரைச் சுட்டுகிறார். ஆயினும், தொல்காப்பியர்

மட்டுமே அவற்றை எல்லாம் தொகுத்து எழுதி வைத்தார். அவர் தம் காலத்தவர்போல் பெரும் புலவராக மட்டும் விளங்கி, தொல்காப்பியத்தைத் தம் நுண்மாண் நுழைபுலத்தால் எழுதாமல் போயிருந்தால், அவரையும் நாம் அறிந்திருக்க மாட்டோம். அவர் காலத்தும் அவருடையதுமான அறிவுச் செல்வமும் நமக்குக் கிடைத்திராது. இன்று தமிழ் உள்ளளவும் தரணி உள்ளளவும் தம்புகழ் நிலைபெறுமாறு செய்திருக்கிறார் என்றால், அதற்கு அவரது எழுத்துத் திறமையே காரணமாகும்.

கம்பரைப் போல் தமிழிலும் வடமொழியிலும் வல்ல புலவர்கள் இருந்திருக்கலாம். காலவெள்ளத்தில் அவர்கள் பெயர்கள் எல்லாம் கரைந்து போகக் கம்பரைமட்டும் உலகம் அடிக்கடி நினைவுகூரக் காரணம் என்ன? 'கல்வியில் பெரியவர் கம்பர்' எனப் போற்றப்பட்டதோடு நின்றுவிடாமல், ஒப்பற்றோர் உலகமகா காவியத்தை எழுதியதால், கம்பர் தம் புலமையின் பயனை உலகிற்குத் தந்தவராகிறார். அவருடைய பாட்டுத் திறத்தால், இவ்வையத்தைப் பாலித்ததால், அவர் கவிச் சக்கரவர்த்தி ஆனார். அவர் காலத்து அறிவுச் செல்வம் - வடமொழி தமிழ்மொழி என்ற இருமொழி சார்ந்த பெருங்காப்பியச் செல்வம். நிலைபேறுடையதாயிற்று. எனவே, எழுத்துக் கலையின் நிலைபெற்ற தன்மையை நன்கு உணர்ந்தவர்களே, அதில் ஈடுபாடு காட்டி எழுதிச் சென்றுள்ளனர்.

பேச்சு, காற்றோடு போய்விடும்; எழுத்து, நிலைத்து நிற்கும். கல்லில் வெட்டிவைத்த எழுத்துத்தான் இன்று வரலாற்றை விளம்பிக் கொண்டிருக்கிறது. உலகில் எழுதி வைக்கப் பட்டவையெல்லாம் நிலைத்துவிடவில்லை. காற்பகுதி நிலைத்ததென்றாலும், அதுதான் தொடர்ச்சியைக் காப்பாற்றி வருகிறது. தொல்காப்பியர், வள்ளுவர், இளங்கோ, கம்பரைப் போல் எத்தனையோபேர் எழுதியுமிருக்கலாம். அவை எல்லாம் நிலைபெறவில்லை என்றாலும், நிலைபெறுமாறு எழுதும் திறனை வளர்த்துக்கொள்வதையே நாம், 'எழுதும் கலை' எனப் போற்றுகிறோம்.

எழுதுவனவெல்லாம் 'எழுத்து' ஆகிவிடாது என்பதும், எண்ணிப் பார்க்க வேண்டிய ஓர் உண்மையாகும். பெரிய பெரிய எழுத்துகளில் எழுதுவதால், பெரிய எழுத்தாளர் ஆகிவிடமுடியாது. பட்டம் பதவியாலும் செல்வாக்காலும் எழுத்துக்கு மதிப்புத் தேடிவிட முடியாது. எழுத்தின் மதிப்பு, அதன் உள்ளீட்டையும், அமைப்பையும் பொறுத்தே உண்டாகிறது. புறத்தே இருந்து வருவன விலகிவிடும். அதை ஒரு கலையாகப் போற்றி முயன்று

பயின்று, திறமையைக் கடின உழைப்பால் வளர்த்துக்கொள்ள வேண்டும். 'ஒரு கவிஞன் பிறக்கிறான்; ஆக்கப்படுவதில்லை' என்பது எழுத்துக் கலைக்கும் பொருந்தும். ஆனாலும் அதுவே முழுஉண்மையன்று. கொஞ்சமேனும் எழுதுவதற்கான திறனும் ஈடுபாடும் பிறவிலேயே அமைதல் நலமே. ஆயினும், அதனைப் போற்றிக் கண்ணும் கருத்துமாய்த் திறமையை வளர்த்துக் கொள்வதிலேதான் வெற்றி இருக்கிறது.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்

என்பது ஔவையார் வாக்கு. சித்திரம், பேச்சு, கல்வி, நடை யாவும் பழக்கத்தால் வருவன என்பது, ஔவையாரின் கருத்து. மனப்பழக்கம், நாப் பழக்கம், கைப்பழக்கம், நடைப்பழக்கம் என்று, பழக்கம் பழக்கம் என்று அவர் திரும்பத் திரும்பக் கூறுவதன் நுட்பத்தைச் சிந்தியுங்கள். இன்று அவர் இருந்திருந்தால், "நித்தம் எழுதுவதும் எழுத்துப் பழக்கம்" என்பதைக் குறிப்பிட்டிருப்பார். ஏனெனில், நீச்சல் கற்பதுபோல், எழுதி எழுதியே எழுதும் திறனை வளர்த்துக்கொள்ள முடியும். திரும்பத் திரும்ப எழுதுவதால், எழுத்துப் பழக்கத்தால், இடைவிடாத முயற்சியால் சிறந்த எழுத்தாளராக முடியும். நாம் ஒரு பத்திரிகைக்கு எழுதி, அது போனவேகத்தில் திரும்பி வந்துவிடலாம். அதனால் தோல்வி இல்லை. நாம் மிகத் திறமையோடு எழுதியதாகக் கருதிப் பெருமைப்படும் ஒன்றைப் பிறர் அறிந்து பாராட்டாமல் போகலாம். ஆனால், சோர்வடைய வேண்டியதில்லை. அவை எல்லாம் நாம் மேன்மேலும் வளர்வதற்கு உரமாக அமையும். ஒரே குறிக்கோளுடன் முயல்பவன், இவற்றால் எல்லாம் வீழ்ச்சி அடைவதில்லை. மிகப்பல தோல்விகளைக் கண்டவர்கள்தான், பிறர் மூக்கின்மேல் சுட்டுவிரலை வைத்து வியக்குமாறு, கோபுரத்தின் உச்சியில் விளங்கும் கலசம் போன்ற நிலைக்கு, என்றேனும் ஒருநாள் உயர்ந்துவிடுகிறான். அவனது உயர்ச்சியை மட்டும் மேலே காணும் உலகம் அவனுடைய தோல்விகளையோ முன்னைய எதிர்நீச்சல்களையோ பெரிதும் அறிவதில்லை.

திருவள்ளுவர் அவையறிதல், அவையஞ்சாமை, சொல்வன்மை என வகுத்த அதிகாரங்களில் வரும் பல செய்திகள், எழுத்துக் கலைக்கும் பயன்படும். அவையச்சம்போல எழுத்தச்சம் என்பதும் அறிவாளிகளிடம்

காணப்படும் சாதாரணக் குறையாகும். எவ்வளவோ பேசுவர்; எழுதுவதென்றால் கூசுவர். எழுதப்புகுமுன் ஏற்படும் தயக்கம் செயற்படவிடாமல் தடுக்கும். சில ஆராய்ச்சியாளர்கள் எவ்வளவோ ஆழமான ஆராய்ச்சிகளெல்லாம் செய்வர். அவற்றை எழுதமாட்டாமல் ஆண்டுக் கணக்கில் தள்ளிப்போடுவர். சிலர் எழுதினால், அதைப் படிப்பவர்கள் விமர்சிப்பார்களே - நல்லது கெட்டது எனப் பேசுவார்களே என அஞ்சுவர். அ்ஃது உண்மைதான். உலகம், பழுத்த மரத்தில்தான் கல்லெறியும். அதற்காகப் பயந்து தயங்குவது, 'எழுத்தச்சம்' ஆகும். பேடி கைவாள் போல நம் அறிவு பயன்படாது ஒழிவதைவிட, இத்தகைய திறனாய்வுகளால் குறை களைந்து, குணம் போற்றித் திறமையை வளர்த்து, மேலும் மேலும் சிறப்படைவதே மனித வாழ்வின் குறிக்கோளாதல் வேண்டும்.

திருவள்ளுவர் சொல்வன்மை பற்றிக் கூறியன பல, எழுத்து வன்மைக்கும் பொருந்தும். எழுத்துநலம் போன்ற ஒன்றை - எழுத்தால் வரும் செல்வம், செல்வாக்குப் போன்றவற்றை வேறு எதனாலும் பெற முடியாது. ஆக்கமும், கேடும் எழுத்தாலும் விளையும். எழுத்தில் சோர்வை விடுக்க வேண்டும். 'எழுத்தின்கட் சோர்வு' என்பது ஒன்றைத் தவறாக எழுதிவிடுவதாகும். எழுத வேண்டியவற்றில் ஏதேனும் ஒன்றைச் சோர்ந்து விட்டுவிடுவதாகும். எழுத்தில் சோரம்போதலும் கூடாது. சமுதாயத்தை அழிக்கின்ற, தீய வழிக்கு ஈர்க்கின்ற எழுத்தாளனாக மாறிவிடவும் கூடாது. கற்றதைப் பிறர் உணர விரித்துரைப்பது போல், விரித்தெழுதவும் பயிலவேண்டும். 'எண் பொருளவாக செலச் சொல்லுதல்' என்பதற்கு ஒப்ப, எவ்வளவு அரிய பொருளையும் எளிமையாக எழதவும், எழுதியது படிப்பவர்க்குப் போய்ச் சேரவும் வேண்டும். அனைவரும் படிக்க வேண்டுமென்று விழையுமாறு எழுதவேண்டும். விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் என்றாற்போல, ஆற்றலுடைய எழுத்துகள் பெரும் விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. எழுத்தாளன் என்ற தமிழ்ச்சொல் ஆழமானது. எழுத்தை ஆளுபவனே எழுத்தாளன். ஒவ்வொரு சிறந்த எழுத்தாளனின் எழுத்திற்கும் தனி ஆளுமை அமைகிறது.

எழுத்துக் கலைஞன்தான் சொல்லவரும் செய்திக்கு உடனே வந்து விடவேண்டும். முன்னுரை அது இதுவென்று நீட்டக்கூடாது. முதல்வரி, முதல் சொல்லிலேயே சொல்லவந்த செய்தியைத் தொடங்கிவிட வேண்டும் என்பர் ஆங்கில அறிஞர். மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்து முடிதல் என்பன

கூடா. சொற்செட்டு மிக முக்கியம். சுருங்கச் சொல்லல், சுருங்கச் சொன்னோம் என்பதற்காக விளங்காமல் போய் விடாமல், விளங்கவைத்தல் முக்கியமாகும். நம் இலக்கண ஆசிரியர்கள் பத்துக் குற்றங்கள் எனத் தவிர்க்க வேண்டியன வற்றையும், பத்து அழகுகள் என அமைக்க வேண்டியனவற்றையும் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். 'நவின்றோர்க்கு இனிமை' என்பது, பத்து அழகுகளில் ஒன்று. படிப்பவர்க்கு மகிழ்ச்சி தருமாறு மொழிநடையில் ஓர் இனிமை அமையவேண்டும். இசை கேட்கும் போது இன்பம் பாய்வது போலவும், தென்றல் வீசும்போது புலன்கள் சிலிர்ப்பது போலவும் ஒருவரது எழுத்தைப் படிக்கும்போது உள்ளம் துள்ளிக் குதிக்கவேண்டும். எழுச்சி தரும் எழுத்தே எல்லோரையும் படிக்கத் தூண்டும். இங்ஙனம், மேலும் மேலும், 'படிக்கத் தூண்டும் பண்பு' அமையுமாயின், அவர் எல்லோராலும் விரும்பிப் படிக்கப்படும் எழுத்தாளராவார். சிலர், பல ஆயிரம் பக்கங்களை எழுதியிருப்பர். ஆனால், அவற்றில் ஒருபக்கம் ஒரு பத்திகூடப் படிப்பதற்கு ஏற்புடையதாகாது.

எந்த ஒரு கருத்தாயினும் - அறிவியல், அரசியல், சட்டவியல் போன்றவையும் எளிமையும் தெளிவும் உடையனவாய் எழுதப்படவேண்டும். இலக்கியம் இனிமை எளிமை தெளிவுடையதாதல் வேண்டும். நெஞ்சை அள்ளும் காப்பியம் எழுத எத்தனையோ உத்திகளைப் பயன் படுத்தியுள்ளனர். மேலும், எழுத்து சமூகத்திற்குப் பயன்படுமாறும் அமைதல் தக்கது.

இவற்றுக்குப் பயிற்சியும், இடைவிடா முயற்சியும் தேவை. எல்லாவற்றுக்கும் மேலாக எழுத்தில் ஓர் ஈடுபாடு படியவேண்டும். பல சான்றோர்கள், தெய்வ அருளால் எழுதினார்கள் என்று கேள்விப்படுகிறோம். சேக்கிழார் பெரியபுராணம் பாட, 'உலகெலாம்' என்று இறைவனே அடி எடுத்துக் கொடுத்ததாகக் கூறுவர். எழுத்தைத் தெய்வம்போல மதிக்க வேண்டும் என்பதையே இவை உணர்த்துகின்றன. பாரதியார், 'எழுதுகோலும் தெய்வம்' இந்த எழுத்தும் தெய்வம் என்றார். அத்தகைய மனப்பண்பு உடையவர்களிடமே எழுத்துக்கலை வளரும்.

எழுதுமுன், சிந்தனையில் எண்ணி எண்ணி அதற்கொரு வடிவம் அமைத்துக்கொள்ளவேண்டும். மனத்திரையில் நிழற்படம்போல் ஓடும் எண்ணம்தான், அடித்தல் திருத்தல் இல்லாத படைப்பாக உருவாகும். "உள்ளத்தில் ஒளி உண்டாகில், வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்றார் பாரதியார். வாக்கில்மட்டுமன்றி, எழுத்திலும் அப்போதுதான் ஒளி உண்டாகும்.

எழுத்தில் நடைத்திட்பமும் கலை நுட்பமும் படியவேண்டும். அதற்கு முன்னையோர் எழுத்துகளை ஆர்வத்துடன் படிக்கவேண்டும். எழுத்திற்கு எப்பொழுதும் ஒரு மரபுவழி உண்டு. சிறந்த கட்டுரைகள் எழுதுவோர் முன்னைய சிறந்த கட்டுரைகளைத் தேடிப்பிடித்துப் படிக்கவேண்டும். அதைப் பற்றிய திறனாய்வுகளைக் கற்றுச் சிந்திக்க வேண்டும். சிறந்த கதை இலக்கியம் படைக்க விரும்புகிறவர், உலக மொழிகளில் தோன்றிய சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுத்துப் படிக்கவேண்டும். அவை பற்றிய ஆய்வுகளையும் கற்கவேண்டும். நல்லமொழிநடை அமையவும், சிறந்த உரை நடைகளை அறிந்து படிக்கவேண்டும் என்பர். இதனால், அவற்றைப் பின்பற்றவேண்டும்; அப்படியே பார்த்தெழுதவேண்டும் என்பது கருத்தன்று. அங்ஙனம் கற்பதும் சிந்திப்பதும் உடற்பயிற்சி போன்ற மனப்பயிற்சியேயாகும். இப்பயிற்சியால் புதிய புதிய உத்திகள், முறைகள், மாதிரிகள் ஒருவரிடம் உருவாதல் கூடும். முன்னைய மரபின் உந்துதல்களே புதுமை படைக்கின்றன.

எழுதும் கலையில் மொழி இன்றியமையா இடம்பெறுகிறது. அதனால் எழுத்தாளர் என்பார் கட்டாயமாக மொழிப்புலமையும் உடையவராதல் வேண்டும். படைப்பாளிக்கு மொழி அறிவு தேவையில்லை என்பது சிற்பிக்கும், கல்லுக்கும், உளிக்கும் தொடர்பில்லை என்பது போன்ற விவாதமாகும். மொழி ஒரு கருவியேயாயினும், எழுத்தாளன் வடிக்கும் சிற்பக் கலைக்கோயிலுக்கு, மொழியே அடிப்படையாகும்.

சொற்கோயில் அமைக்கச் சொல்லழகு வேண்டாமா? அதனால்தான் சொல்லாட்சித் திறனை, எழுத்துக்கலைக்கு இன்றியமையாததாகச் சுட்டினர். நல்ல சொல்வளம் உடையவர் சிறந்த நூல்களைப் படைக்க முடியும். சொல்லின் வகை, தரம், சிறப்பு, பொருள் ஆழம், வடிவம் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். ‘சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே - அதைத் தொழுது படித்திடடி பாப்பா’ என்ற பாரதியார் வாக்குப் பிற்காலத்தில் எழுத்தாளனாகப் போகும் குழந்தைக்கு இன்றியமையாததாகும். ‘சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லும்சொல் இன்மை அறிந்து’ என்ற திருவள்ளுவர் வாக்கும், எழுத்தாளனின் சொல்லாட்சித் திறனை வற்புறுத்தக் காணலாம்.

இயல்பான ஆர்வமும் திறமையும், இடைவிடாத முயற்சி முன்னையோரைக் கற்றுப் பெறும் பயிற்சி, எழுதிஎழுதிப் பழகுதல் - இவையே சிறந்த எழுத்தாளனாக உருவாக்குகின்றன.

# 19. வாசிக்கும் நற்பழக்கம்

கல்வி என்ற சொல்லின் வேர் கல். கல்லுதல் என்றால் தோண்டுதல். தோண்டத் தோண்ட நீர் ஊறுவது போல, கற்கக்கற்க அறிவு ஊறும். அறிவு என்பது உள்ளிருந்து ஊறிப் பெருகுவதன்றி, வெளியிலிருந்து பெறப்படுவதன்று என்பதை, இந்தத் தமிழ்ச் சொல் விளக்குகிறது.

கல்வி உளவியலார், "மனிதனின் இயற்பண்புகளில் ஒன்றே அறிவு. அறிவு இல்லாதவர் என்று உலகில் எவரும் பிறப்பதில்லை. உள்ளிருக்கும் அறிவுப் பண்பை, கல்விப் பயிற்சி மலரச் செய்கின்றது. அதனால் கல்வி மூலமாக ஒருவன் மேன்மேலும் தன்னை அறிவுக் கூர்மை உடையவனாக ஆக்கிக்கொள்ளவேண்டும்" என்று கூறும் கருத்துக்களைக் 'கல்வி' என்ற சொல்லுடன் ஒப்பிட்டுணர்தல் வேண்டும். 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்பது வள்ளுவம். படிக்கப் படிக்க இன்னும் படிக்க வேண்டியன நிரம்பவுள்ளன என்பதை அறிகிறோமேயன்றி, நாம் அறிவின் எல்லைக்கு வந்துவிட்டதாக உணர்வதில்லை. அதனால்தான் திருவள்ளுவர், 'என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு?' என்று வினவினார்.

மற்றுமோர் உண்மையையும் நாம் அறிதல்வேண்டும். கல்விக் கூடங்களுக்கு உள்ளேதான் அறிவுப் பயிர் வளர்க்கப் படுகிறது என்பதில்லை. கல்விக் கூடங்களை எட்டிப் பாராத அல்லது அரிதாக எட்டிப்பார்த்த, பட்டம் முதலியன பெறாத பெர்னாட்ஷா, தாகூர், பாரதியார் போன்றவர்களை எண்ணிப் பாருங்கள். அவர்கள் அளவு நிலையான அறிவுப் பதியங்களை ஆக்கியவர்கள் வேறு எவரும் இலர். இன்று பிஎச்.டி எனப்படும் டாக்டர் பட்டம் பெற்றவர்கள்கூட, அவர்களுக்குப் பாட நூல்களாக அமைந்தவற்றை, மிகக் கடினப்பட்டு வேண்டா வெறுப்பாகக் கற்று, பிறகு அவ்வாறு வெறுப்போடு கற்றதனால் கற்றவற்றை மறந்து கிணற்றுத் தவளைகளாகவே காணப்

படுகின்றனர். எனவேதான் நாம் உண்மையிலேயே அறிவாளிகளாக வேண்டுமென்றால், நிகழ்காலத்துடன் போட்டியிட்டு முன்னேறுபவர்களாக வேண்டுமென்றால், 'வாசிக்கும் நற்பழக்கத்தை' இளமை முதல் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

நல்லதும் கெட்டதுமாகிய பண்புகள், பழக்கத்தால் வருவனவே. வாசிக்கும் நற்பழக்கத்தையும் நாம் இளமைமுதல் வளர்த்துக்கொள்ள வேண்டும். இடைவிடாது நல்ல நூல்களையும் நற்கருத்துகளையும் தேடிப் பிடித்துப் படிக்கும் பழக்கமுடைய ஒருவன், கோடிக் கணக்கில் பெருஞ் செல்வத்தைத் தொகுத்து மகிழும் செல்வர்கள் போல, அறிவுக் கருவூலத்தை அடைந்து, வாழ்க்கையில் பெருவெற்றி பெறுவான். நம் காலத்தில் வாழ்ந்த அறிஞர் அண்ணா அவர்கள், இதற்குச் சிறந்த உதாரணமாவார்கள். சிறிது நேரம் கிடைத்தாலும், அதை ஏதேனும் நூலையோ, மாத இதழ் வார இதழையோ, செய்தித் தாளையோ படிக்கப் பயன்படுத்திக் கொள்ளுவார். அமெரிக்காவில் அவரை மருத்துவ மனையில் பரிசோதனைக்குச் சேர்த்திருந்தனர். அந்நிலையிலும், சிறந்த நூல்களை வாங்கிவரச் செய்து, அவற்றைப் படித்தபடி பொழுதைப் போக்கினார். இத்தகைய படிக்கும் பழக்கத்தால், அவர் தமது சமகாலத்தவர்களால் 'அறிஞர்' என அழைக்கும் தகுதியைப் பெற்றார். எந்தச் சூழலிலும் எந்த நேரத்திலும் எப்பொருள் பற்றியும், முன் ஆயத்தமில்லாமலும், கையில் குறிப்பெதுவுமில்லாமலும், பலரையும் கவரும்படி பேசக்கூடிய பேராற்றலை அவர் பெற்றிருந்தார். இதற்கு இப் படிக்கும் பழக்கமே அடித்தளமாகும்.

நூல்களையும் மாத வார இதழ்களையும் செய்தித் தாட்களையும் தேடிப் பார்த்துச் சிறந்தவற்றைப் படிக்கப் பழகவேண்டும். ஒரு வார இதழென்றால், அதில் சிறந்த பகுதிகளைத் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும். ஒரு செய்தித்தாளில், இன்னஇன்ன கலத்தில் பக்கத்தில் இன்ன இன்ன தலைப்புகளில் தகவல் கிடைக்கும் என்ற முன்னறிவு வேண்டும். ஒரு நூலைக் கண்ணோட்டமிட்ட அளவில் பயனுடையதா, குப்பையா, தீயதா எனக் கண்டுபிடிக்கும் பழக்கம் வரவேண்டும். படித்துக்கொண்டே போகும் பொழுது, எதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்; எங்கு ஆரஅமரச் சிந்தனை செய்ய வேண்டிய பகுதிகள் உள்ளன என்றறியும் நுட்பத்திறன் கை வர வேண்டும். இவையெல்லாம் ஒருநாள் இருநாள்களில் அமைவதில்லை. சிறு துளி பெருவெள்ளம். சிறுகச் சிறுகப் படித்துப் படித்துப் பழகிவர வேண்டியவை

இவை. 'பருகுவன் என்ன ஆர்வத்தனாகி' என்றார் பவணந்தி முனிவர். தண்ணீர் வேட்கை தோன்றினால், எவ்வளவு ஆர்வத்தோடு விரைந்து அதைத் தேடிப்பெற்றுப் பருகுகிறோம். அதுபோல் அறிவுத் தாகத்துடன், புலமைப் பசியுடன் நூல்களை, நற்கருத்துகளைத் தேடி, ஆர்வத்துடனும் ஈடு பாட்டுடனும் படிக்கப் பழகவேண்டும். நல்ல வசதியாக அமர்ந்து, மகிழ்ச்சியோடு படித்து, அசைபோடவேண்டும். மகிழ்ச்சியுடன் நூலை எடுத்து, ஆர்வத்துடன் படிப்பது ஒருநிலை: கசப்புடன் கட்டாயத்திற்காக முகம் சுருங்க கைதயங்க நூலை எடுத்துப் படித்துத் தொலைப்பது பிறிதொருநிலை. நம்மில் பலர், பாடநூல்களை வேண்டா வெறுப்பாகத்தான் படிக்கின்றனர்.

ஈடுபாடில்லாத படிப்பு, மனத்தில் ஒட்டுவதில்லை. சிலர் பிள்ளைகளைப் 'படிபடி' என்று கண்டித்தும் கட்டாயப்படுத்தியும் அடித்தும் படிக்கச் சொல்வர். இம் முறை படிப்பதில் வெறுப்பையே ஏற்படுத்தும். சிலர் பட்டம் முதலியன பெற்றவுடன் படிப்பை நிறுத்திவிடுவதற்கும் பட்டம் பெற்றதற்குரிய பயனில்லாமல் போவதற்கும் வெறுப்புடன் கூடிய கல்வியே காரணமாகும். கட்டாயமின்றி இயல்பாகவும் இனிதாகவும் படிக்கும் ஆர்வம் ஏற்படச் செய்வதே நல்லது.

வாசிப்பு என்பது நம் கையிலிருக்கிறது. அது ஒரு திறந்த வெளிப் பல்கலைக் கழகம் போன்றது. விரும்பியதை, விரும்பிய நேரத்தில் படிக்கலாம். அதனால் தொடங்கும்போதே மகிழ்ச்சியாக, ஆர்வத்துடன், ஈடுபாடு கொண்டு படிக்கக் கூடிய நூல்களைப் படிக்கவேண்டும். ஒரு செய்தித்தாள் என்றால், அதிலுள்ள தலைப்புச் செய்திகள், ஆசிரியவுரை, உலக நடப்புச் செய்திக் கட்டுரைகள், வாசகர் கடிதங்கள் என்று நமக்கு எவ்வெவற்றில் ஆர்வமுள்ளதோ, அவ்வவற்றைத் தேர்ந்து படிக்க வேண்டும்.

இத்தகைய நற்பழக்கம் நம்மைத் தொட்டுவிட்டால், பிறகு விட்டு விலகாது. "வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்" என்றார் ஔவையார். பேருந்திற்குக் காத்திருக்கும் நேரம், மருத்துவரிடம் காட்ட வரிசையில் அமர்ந்திருக்கும் நேரம் என்று இடைவெளி கிடைக்கும் நேரமெல்லாம், சிலர் எதையாவது படித்துக்கொண்டிருக்கப் பார்க்கலாம். எனினும், நாம் வாசிப்புப் பழக்கத்தை, அவ்வப்போது என்று விட்டுவிடாமல், நன்கு திட்டமிட்டு நேரம் ஒதுக்கி ஆரஅமரப் படிக்கவேண்டும். ஆரஅமர என்றால், மிக மெதுவாக என்பதன்று. விரைந்த வாசிப்பே நல்வாசிப்பு என்பர். நிதானமாக, மனமொன்றி வாசிக்கவேண்டும். வேறொரு நினைப்புடனும் பிறிதொரு அவசரத்துடனும் ஒன்றைப் படிக்கும்போது, அதில் வரும் கருத்து, நம் மனத்தில் பதிவதில்லை.

சிலர் மாலைநேரத்தையோ, இரவையோ படிக்க ஒதுக்குவர். விடுமுறை நாட்களைச் சிலர் படிக்கும் நாட்களாக அமைத்துக் கொள்வர். வாரம் ஒருநூல் படித்து முடிப்பது ஒரு சிலரது திட்டமாகும். ஒரு சமயத்தில் இரண்டுமணி, அல்லது மூன்று மணி நேரத்தைத் தொடர்ந்து படிப்பதற்குப் பயன்படுத்துவர்; சிலருக்கு அதிகாலையில் எழுந்து, மூன்று மணி நேரம் கூடத் தொடர்ந்து படிக்கும் பழக்கம் உண்டு. எங்ஙனமாயினும், திட்டமிட்டுப் படிக்கும் வாசிப்புத்தான், பயன்தரும். விரைந்துபடிக்கவும் பழகவேண்டும். அதனால் கூடுதலாகப் படிக்கலாம் என்பதுடன், படித்தவை பற்றிய ஒரு முழுமையான பார்வையும் கிடைக்கும். சிறுகச் சிறுக இவ் விரைவைக் கூட்ட வேண்டும். படிக்கும்போது, சொந்த நூலாயின், கோடிட்டும் குறிப்பெழுதியும் படிக்க வேண்டும்; சொந்த இதழாயின், இன்றியமையா இடங்களைக் கத்தரித்து வைத்துக் கொள்ளலாம்.

படித்தவற்றை மனத்தில் வாங்கிக் கொள்ளுதலும், அக் கருத்துக்களைப் பற்றித் தனியேயிருந்து அசைபோடுதலும், பிறருடன் கலந்துரை யாடுதலும், அக் கருத்துகளை யொட்டிய தம் அனுபவங்களை உடன் வைத்து ஒப்பிட்டுச் சிந்திப்பதும், தம் வாழ்வில் அவற்றை ஏற்றிப் பார்ப்பதும் படிப்பினாலாய பயனைத் தரும் பழக்கங்களாகும். ஒரு குறிக்கோளுடன் படிக்க வேண்டும். ஏதேனும் ஒருவரைத் தேர்ச்சிக்காக, நிகழ்காலச் சிந்தனைகளை விவாதிப்பதற்காக, அறிவு சார்ந்த மகிழ்ச்சி அடைவதற்காக, மனத்திற்குகந்ததைப் படித்து இன்புறுவதற்காக என இவ்வாறு ஏதேனும் ஒரு பயன் கருதியே படிக்க வேண்டும்.

சிலர் பொழுதைப் போக்குவதற்கென்றும் அற்ப மகிழ்ச்சிக்கென்றும் கெட்டனவற்றைக் கற்றுக் கொள்வதற்கென்றும் மனம்போன போக்கில் குற்றப் புதினங்கள், தீய பாலுணர்வுத் தூண்டலை விவரிக்கும் கதை நூல்கள் என இவ்வாறு தேர்ந்தெடுத்து, இடைவிடாது படிப்பர். மகிழ்ச்சிதருகின்ற, மனத்திற்குகந்த வாசிப்பு என்று இதனை எடைபோடுதல் கூடாது. இதற்குப் படிக்காமலே இருப்பது மிகநல்லது. திருவள்ளுவர் 'கற்கக் கசடற' என்றும் 'கற்பவை கற்க' என்றும் கூறியன பொது வாசிப்பிற்கும் பொருந்தும். நல்ல நூலா, அல்லதா என்பது, அங்கங்குப் பக்கங்களைப் புரட்டிப் படித்துப் பார்த்தாலே விளங்கி விடும். நமக்கு உகந்தன என்னும்போது, நம்மை உயர்த்துவன - முன்னேற்றுவன என எண்ணி, அவற்றுள் உகந்தன எவை எனத் தேர்வு செய்ய வேண்டும். பயனுள்ள நூல்கள், பலர் போற்றும் நூல்கள்

எவை என்று தேர்ந்தெடுத்துப் படிக்கவேண்டும். இதழ்களில் வரும் நூல் மதிப்புரைகளையெல்லாம் விடாமல் படித்தால், சிறந்தது எதுவென்றும் உகந்தது எதுவென்றும் விளங்கிவிடும். ஒரு மருத்துவர்க்கு அண்மையில் வந்த மருந்துபற்றியும் தெரிந்திருக்க வேண்டும் என்பர். அதுபோல் ஆர்வமுள்ள படிப்பாளி, அண்மைக் காலநூல் வெளியீடுகள் வரை நன்கு அறிந்திருப்பான். அங்ஙனம் அறிந்தன அனைத்தையும் வாசிக்க வேண்டும் என்பதில்லை. சிறந்தவற்றைத் தேர்வுசெய்ய இது உதவும். தேவையான வற்றைக் கண்டுகொண்டு, அவற்றைப் பெற்றுப் படிக்கலாம். வேண்டாத உணவு வயிற்றுக்குள் போனால், உடல் தொந்தரவுக்கு உட்படுவது போல, வேண்டாத நூலும் உளநலத்தைக் கெடுத்துவிடும். எனவே, அவற்றை அறவே படிக்காது தவிர்க்க வேண்டும்.

நம் காப்பியங்களை, சங்க இலக்கியத்தை, தொல்காப்பியத்தை எல்லாம் வாசிக்கும் நூல்களாகச் சிலர் கருதுவதில்லை. செய்தித்தாள், நாவல்கள், சிறுகதைகள், புதுக் கவிதைகள், சிற்சில வார மாத இதழ்கள், துணுக்குகள் இவையே படிப்பதற்குரியன என்பது, பொதுவாக உலவும் ஒரு கருத்தாகும்.

வாசிப்பு நம்மை உயர்த்துவதாக இருக்க வேண்டும் எல்லா நிலைகளிலும்! தமிழில் இக் காலக் கதை நூல்கள் எளிமையானவை. அதற்காக அதில் தொடங்கி அதிலேயே நின்றுவிடக் கூடாது.

கவிதைகள், நீதிநூல்கள், பக்தி நூல்கள், சிறு பிரபந்தங்கள், காப்பியங்கள் சங்கப் பாடல்கள் ஒன்றின்ஒன்று படிப்படியே கடினம்போலத் தோன்றும். இவை விளங்கவில்லை என்று விட்டுவிடுதல் தவறாகும். நாம் விளங்கிக் கொள்பவர்களாக மேன்மேலும் வளரவேண்டும். உரைகளை வைத்துப் படிப்பது, அகரமுதலி வைத்துக்கொண்டு அருஞ்சொற்களுக்குப் பொருள் கண்டு படிப்பது என்னும் பழக்கங்கள் யாவும் மிகமிக அவசியம். நம் வாசிப்பினால் மொழியறிவில், விளங்கிக் கொள்வதில், பொருள் உணர்திறனில் ஓர் அங்குலம் கூட வளராதது மட்டுமன்றி, இருக்கும் மொழியறிவையும் கெடுக்கும் பிழைநூல்களை அறவே ஒதுக்கிவிட வேண்டும்.

ஆங்கிலத்தில் 'வாசிப்பவன்' மிகுந்த மொழியறிவாளனாக ஆவான்; அங்ஙனம் மதிக்கப்படுவான். தமிழிலும் அந்தநிலை வரவேண்டும். பழங்கால இலக்கிய அறிவுடன், நிகழ்கால முன்னேற்றத்துறை அனைத்துடனும்

அறிமுகமாக அத்துறைகளின் வளர்ச்சிக்கேற்ற முன்னேற்றத்தைத் தானும் பெற்றுச் சிறக்கச் செய்வதே நல்வாசிப்பாகும். சிறிது முயன்றாலன்றி, இப் பொருளறி திறன் வாய்க்காது, சிலர் வாசிப்பு என்பது, வெறும் பொழுதுபோக்கு என்றே கருதி, அதற்கேற்றவற்றையே எழுதுகின்றனர்; பயன் கருதாது பொழுதை ஓட்டுவதையே கருத்தாகக் கொண்ட சிலர், அத்தகைய பயனற்ற நூல்களையே வாங்கிப் படிக்கின்றனர். இரண்டுமே அறிவு வளர்ச்சிக்குக் கேடாகும்.

சொந்தமாக நூல்கள் வாங்கிப்படிக்கின்ற பழக்கத்தை உண்டாக்க வேண்டும். அப்போதுதான் ஓரத்தில் கோடிட்டும், அடிக்கோடிட்டும், குறிப் பெழுதியும் படிக்கமுடியும். படித்து முடித்தபின், தாம் இன்றியமையாதன எனக் குறித்த இடங்களைத் தொகுத்துப் பார்க்கவும்; படித்ததைப் பற்றிய ஒரு முழுமைப் பார்வை கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும். பிறருடையன, பொது நூலகத்தனவாயின், நாம் அவ்வாறு பயன்படுத்த இயலாது அல்லவா? எல்லா நூல்களையும் சொந்தமாக வாங்குவது இயலாதுதான். அதனால் நூலகங்களுக்குச் சென்று, நமக்கு விருப்பமானவற்றைத் தேடி எடுத்துப் படிக்க வேண்டும். கூடுமானவரை சொந்தமாக நூல்கள் வாங்கிப் படிக்கவும், மேன்மேலும் படிக்க நூலகங்களைப் பயன்படுத்தவும் ஒரு மனப்பழக்கம் ஏற்படவேண்டும். பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, தமிழில் நூல்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் பழக்கம் மிகக் குறைவாக காணப் படுகிறது என்பர். "ஆவிற்கு நீர் என்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்தது இல்' என்பார் திருவள்ளுவர். பசுவிற்கு நீர் வேண்டுமென்று இரப்பதும் இழிவே எனும் இக் கருத்தை, பிறரிடம் புத்தகம் இனாமாக வேண்டுமென்று கேட்பதற்கும் கொள்ளலாம். அறிவு வேட்கை உடையவர்கள், நூல்கள் வாங்கத் தயங்கமாட்டார்கள் (பொது நூலகங்களைப் பேணுவதிலும் இந்தியர்கள் இன்னும் பண்பாடு அடையவில்லை. பொது இடங்கள் என்றாலே, இந்தியாவில் யாரும் அக்கறை கொள்வதில்லை.)

நூலகங்கள், நம் நண்பர்கள் போல் உற்றுழி உதவுபவை. அவற்றை ஒவ்வொரு வாசகனும் கண்ணும் கருத்துமாகப் பேண வேண்டும்.

வாசகன் இடைவெளியே இல்லாமல் படித்துச் செல்வதைவிடச் சிறிது சிறிது இடைவெளிவிட்டுப் படிப்பது, படித்ததைச் சிந்தனை அசைபோட உதவும். நாம் எதற்காகப் படிக்கிறோம்? நாம் உண்ணும் உணவு செரித்து,

நம் குருதியில் கலக்க வேண்டும். அது போல், நாம் படித்தன யாவும் மனத்தால் நன்கு உணரப்பட்டு, நினைவில் நின்று சிந்தனையோட்டத்தில் கலக்க வேண்டும். வெறும் நினைவாற்றல் அறிவுடைமையாகாது. நினைவு போற்றுதல் என்பது சிந்தனைக்கு இட்டுச் செல்லும் படியாகும்.

தமிழில் சொல்வளம் மிகுதி. வாசிக்கும் பழக்கம் நம் சொல்வளத்தைப் பெருக்கும். இன்று பலர் கொச்சை வடிவங்களையும் பிழை வழக்காறுகளையுமே எழுதிக் குவிக்கின்றனர். 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்றார் திருமூலர். எழுத்து வடிவம், சொல் தொகுதி ஒரு நூலின் உடம்பு போன்றது. அது நலமாகவும் திடமாகவும் இருக்கவேண்டும். வாசிக்கும் பழக்கத்தால் ஒருவன், பெரிய மொழியறிஞனாக ஆகவேண்டும். என்பதில்லை. கொஞ்சமேனும் திருத்தமாகவும் செவ்வையாகவும் பேச, எழுத முயல வேண்டும். கவிதை என்பது கற்று வருவதில்லை - அதாவது யாப்பிலக்கணம் கற்றுமட்டும் வருமென்பதில்லை. பலநூறு பாக்களைப் படித்துப் படித்து, உணர்ந்து உணர்ந்து அது ஒருவன் மனத்தில் படிகிறது. பிறகு அவனிடம் சுயமாக வெளிப்படுகிறது. அதுபோல் பல சிறந்த உரைநடைகளைப் படித்துப் படித்துத்தான், அதில் பழகிப் பழகித்தான் ஒருவனுக்கு நல்ல சீரிய கூரிய செவ்விய செறிந்த உரைநடை எழுதும் பழக்கம் கைவரப் பெறும்.

நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிப்பவனிடம் நற் பண்புகள், பழகும் நாகரிகம், இனிய பழக்கங்கள் தாமே படியும். எந்த ஒரு நற்பண்பும் சொல்லி வருவதைவிடப் பார்த்தும் பழகியுமே படிகின்றது. நல்ல நூல்கள் இப் பழக்கத்திற்கு நம்மை அழைத்துச் செல்வதால்தான், நூல்களை நல்ல நண்பர்கள் என்று வருணிக்கிறார்கள். ஒருவன் படிக்கும் நூல்களையும், நாளேடுகளைக் கையில் எடுத்ததும் பார்க்கும் பகுதிகளையும் வைத்து, அவனுடைய தரத்தை எடைபோட்டுவிடலாம். வாசிப்பே ஒருவனுக்கு உண்மையான கல்வியாகும். சுயமாகக் கற்பது என அதைக் குறிப்பிடலாம். தன்முன்னேற்ற முயற்சியுடைய ஒவ்வொருவனும் இத் தற்கல்வியாளனாக விளங்குவான். அவன் பட்டம், விருது பெற்றவர்களைவிடப் பெருஞ் செல்வனாகவும், வசதி வாய்ப்புடையவனாகவும், காலத்திற்கேற்ற அறிவாளியாகவும் திகழ்வான்.

ஆங்கிலத்தில் எவ்வெவற்றைத் தேர்ந்தெடுத்து, எவ்வாறு படிக்க வேண்டுமென வழிகாட்டும் வழிகாட்டி நூல்கள் பலவுண்டு. உலகை மாற்றிய

நூல்களின் பட்டியல் "The books that which have changed the world" என நூற்பட்டியல் உண்டு. குறிப்பிட்ட அளவு புலமைபெற உதவும் நூல்கள் எனச் சில நூற்பட்டியல்களும் அவற்றைப் பற்றிய சிறு குறிப்புகளும் உண்டு. நல் வாசிப்பு, பயனுள்ள படிப்பு எனத் திட்டமிட்டுப் படிக்க, நூற்றுக்கணக்கான நூல்களைப் பட்டியலிட்டுத் தரும் வழிகாட்டிகள் உண்டு. பள்ளிக்குப் போகாத, ஒரு பெருந் தொழிலதிபர் தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தவர், மேன்மேலும் தமிழில் சிறந்த நூல்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, ஓரளவு படித்துத் தாமாகத் தமிழ் இலக்கிய வாசிப்பில் முன்னேற விரும்பி, இதற்கு வழி காட்டும் நூற்பட்டியல்களோ வழிகாட்டுதல்களோ உண்டா என்று கேட்டார். அவ்வாறு எதையும் பரிந்துரைக்க முடியவில்லை. தமிழறிஞர்கள் இவ்வாறு 'வாசிப்பு வழிகாட்டிகளை' உருவாக்க முயல்வது நல்லது.

நூல்களைப் பார்ப்பது, ஒரு மாத இதழிலோ நாளேட்டிலோ சிறந்த பகுதிகளைப் பார்ப்பது என்பது முதல் பழக்கம். நீங்கள் சிலப்பதிகாரத்தைப் பார்த்ததில்லையா? என்று வினவுவோம். இது அறிமுக நிலை.

வாசிப்பது என்பதுதான் அடித்தளம் போன்றது. வாய்விட்டு வாசிப்பது தான் 'வாசிப்பு' ஆயிற்று. இருந்தாலும் பழகப் பழக மௌன வாசிப்பே பெரு வழக்காகிவிட்டது. ஆசிரியர், நூலின் ஒரு பக்கத்தைக் குறிப்பிட்டு 'வாசி' என்பார். இந்த வாசிப்பில் தொடங்கியே பிற யாவும் அமைகின்றன. படிப்பது என்பது கருத்தூன்றி ஒரு பயன்கருதிப் படிப்பதாகும். படிப்பதும் வாய்விட்டுப் படிப்பதையே முதலில் சுட்டியது. கற்பது - ஆழமாக நினைந்து போற்றிப் படிப்பது பயில்வது - பலமுறை திரும்பத் திரும்பப் படிப்பது. ஓதுவது - மனம் ஒன்றிப் பயபக்தியுடன் கற்பது. நெட்டுருச் செய்வது - கற்றதை மனனம் செய்து நினைவிலிருத்துவது.

இவை எல்லாவற்றுக்கும் 'வாசிக்கும் பழக்கமே' தொடக்கமும் அடிப்படையுமாகும். இந் நற்பழக்கத்தைச் சிறுகுழந்தையாக இருக்கும் போதே உண்டாக்கவேண்டும். இளமையில் விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் கூடிய வாசிப்புப் பழக்கம் ஏற்பட்டுவிட்டால், அவன் வாழ்க்கையில் வெற்றி பெறுவான். உலகத்தில் பெருவெற்றி கொண்டு, தலைமைபூண்டு, மற்றவர்களை வழி நடத்திச் சென்றவர்கள் பலரும், இவ்வாறு வாசிக்கும் நற்பழக்கம் உடையவர்களாக இருந்து முன்னேறியவர்களே. இதை மனத்திலிருத்திக் கொண்டால், வாசிக்கும் ஆர்வம் நமக்கு இயல்பாகவே உண்டாகி விடும்.

# 20. வழிபாட்டுப் பாடல்கள்

தமிழ்ப் பத்திமைப் பாடல்களுக்கு, ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டு. பரிபாடல் முதல் பாரதியார் பாடல்வரை ஆயிரமாயிரம் வழிபாட்டுப் பாடல்கள் தமிழில் தோன்றியுள்ளன. இவற்றைத் துதிப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள் என்றெல்லாம் கூறுவர். தேவாரம் (தே- வாரம்) என்பதே தெய்வத்திற்குரிய இசைப்பாட்டு என்பதேயாம். 'வாரம் இரண்டும் வரிசையின் பாட' என்பது சிலம்பு (3 - 136) வாரம் - 'தெய்வப் பாடல் பாட' என்று அரும்பதவுரையாரும் அடியார்க்கு நல்லாரும் விளக்கியுள்ளனர். வேதம் - ஓதுதல் வேண்டும். அதுபோல, நெறியறிந்து ஓதவேண்டியனவே திருமுறைகள். திண்ணைப் பள்ளியில் எழுத்துக்களை உச்சரித்து மணலில் எழுதிப் பிள்ளைகள் கூட்டாகப் படிப்பதை 'முறை வைப்பது' என்பர். வழிபாட்டுப் பாடல்களையும் கூடிநின்று, முறைப்படி ஓதுதல் வேண்டியே, அவற்றைத் திருமுறைகள் என்றனர். திருமொழி, திருவாய் மொழி போலும் ஆட்சிகளையும் ஒப்பு நோக்குக.

'அருச்சனை பாட்டேயாகும்' என்பது சுந்தரர் வாக்கு. அருச்சனை செய்யும் பொழுது, குருக்கள் இறைவன் முன்னின்று, இறைப்புகழை ஏத்திஏத்திப் பாடுகிறார். ஔவையார் ஆத்தி சூடியில்,

"ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே" என்றது

அருச்சனைப் பாட்டு முறையே யாகும். நாம் குருக்களை நம் 'முகவராகக்' கொண்டு அருச்சனை செய்யாமல், நாமே நேர் நின்று பொருளுணர்ந்து இறை வழிபாட்டுப் பாடல்களைப் பாடவேண்டும். அப்போதுதான் நாம் அருச்சனை செய்தவர்களாக ஆவோம். "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" என்ற திருவாசகம், சிவபுராண அடிகளை நினைக.

இறைவன் திருப்புகழை ஓதுவது, நம் புகழ் ஓங்குவதற்கேயாம். "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான், மனம் நின்பால் தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மை எல்லாம் தொழவேண்டி" என்பதன் உண்மையை ஓர்க. இறைவனுக்குப் பல்லாண்டு இசைப்பது, புகழைப் பாடிப் பரவுவது, வாழ்த்துவது என்பன யாவும் உயிர்களுக்கு ஆக்கம்தரும் செயலேயாகும். தம்முள் தாமாக இருக்கும் இறைமையை உயர்த்துக் கொள்வான்வேண்டி, உயிர்கள் இவ் அருஞ்செயல்களில் ஈடுபடுகின்றன.

## 'கோயில்' வழிபாட்டு மாற்றம்

கோயில் அரசனது அரண்மனையைக் குறித்தே, பின்னர் இறைவனுறையும் ஆலயத்திற்கும் ஆயது. முற்காலத்தில் பெரிதும் மன்னர்களையே புலவர்களும் மக்களும் பாடிப் பரவினர். மெய்ம்மையுணர்வு வளரவளர அரசனுக்கும் வீரனுக்கும் 'கல்' லெடுத்து வழிபட்ட மரபு மாறி, இறைக்குறியை நிலைநாட்டி வழிபடும் மரபு வளர்ந்தது. அரசனுறையும் இல்லத்தை, கோயில் என அழைத்தது போய், இறைவன் உறையுமிடத்தை அதே சொல்லால் குறித்த தோடன்றி, இறைக் கோயில்களை அரண்மனைகள் போலவே கட்டினர். இன்று நம்முடைய பெருங்கோயில்கள் பல அரண்மனையை நினைப்பூட்டுவன. தஞ்சைப் பெருவுடையார் கோயில், சுற்றிலும் அகழியும் மதிலும் பெருவாயில்களுமாய் அரண்மனை அமைப்புடன் திகழ்வதைக் கண்டு மகிழ்ந்தவர்கட்கு இது விளங்கும். மேலும் மன்னர்கட்கே, முன்பு திருப்பள்ளி எழுச்சி, பள்ளியறைப்பாட்டு ஆகியவை துயிலெடைநிலை, கண்படை நிலை எனப் பொருநர்களால் பாடப்பட்டன. பின்பு அந்நிலைமை மாறி, கோயில்களில் பள்ளியறைப் பாடல்களும் பள்ளி எழுச்சிப் பாடல்களும் பாடப்பட்டன. ஆலவட்டம் தூக்குதல், பல்லக்கு - தேர் - தெப்பத்தில் உலா வருதல், கட்டியங் கூறுதல், இன்னிசையும் பாடலும் ஆடலும் நிகழ்த்திச் சிறப்பித்தல் யாவும் முன்பு மன்னர்கட்குச் செய்யப்பட்ட மரியாதைகளேயாகும். பின்பு இவை அனைத்தும் இன்றும் கோயிலில் மட்டும் காணப்படுகின்றன. சாமரம் வீசுதல் தொடங்கி, சோடசஉபசாரம் செய்தல்வரை யாவும் அரண்மனைகளில் நிகழ்ந்து, பின்பு கோயில்களுக்கு மாற்றப்பட்டு இன்றளவும்நிலை பெற்றுள்ளன. இவ்வாறு இன்று திருக்கோயில்களில் இறைவனுக்குச் செய்யப்படும் ஒவ்வொன்றும், முன்பு அரசர்கட்குச் செய்யப்பட்டவை என்பதை உளங்கொண்டு எண்ணிப் பார்க்கவேண்டும். அங்ஙனம் பார்த்தால், தமிழ்மக்கள் அரச வழிபாட்டை இறைவழி பாடாக மாற்றிக்கொண்டு, அரசர்கட்குச் செய்த மதிப்பு மரியாதைகள் யாவற்றையும் இறைவனுக்குச் செய்து மகிழ்ந்தமை தெளிவாகும்.

அரசர்கட்குத் தொல்காப்பியர் காலத்து நடைபெற்ற நாண்மங்கலம், மண்ணுமங்கலம் போல்வனவே இறைவனுக்குச் செய்யும் அபிடேக ஆராதனைகளாக மாறின என்பதை, நுண்ணிதாய் எண்ணியறிதல் கூடும்.

## துதிப்பாடல் மரபில் ஏற்பட்ட புரட்சி

அரசவழிபாடு சிறுகச் சிறுக இறை வழிபாடாக மாறி வளர்ந்தமை போலவே, புகழ்ப் பாடல் மரபும் மாறியது, நம்முடைய புறப்பாடல்கள், அரசனது வெற்றிச் சிறப்பையும் கொடைக்குணத்தையும் அவனது நாட்டுவளம் நகர்வளம் ஆற்று வளங்களையும் போற்றிச் சிறப்பிக்கின்றன. அரசனுக்கு வாழ்த்துக் கூறியும் பல்லாண்டு பாடியும், தாம் வேண்டும் பரிசில்களை விவரிக்கின்றன. இம் மரபு மாறி, சங்க காலத்திலேயே புலவர் சிலர், இறைவனிடம் தாம் வேண்டும் பரிசில்களுக்காக முறையிட்டமையைப் பரிபாடலில் காண்கிறோம். இறைவனுக்குப் பாடும் பள்ளியறைப் பாட்டும் பள்ளி எழுச்சிப் பாட்டும் கூட, இப் புறப்பாடல் மரபில் வந்தனவே என்பதை முன்பும் காண்டோம். அரச அங்கங்கள் எனத்தகும் குடை, செங்கோல், கொடி முதலிய பத்து உறுப்புகளைப் புகழ்ந்து பாடும் தசாங்கம், பிறகு இறைவனுக்குப் பாடும் மரபாக மாறியதை ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகக் கூறலாம். அகப்பாடல் மரபுகள் நாயக நாயகி பாவனை மரபுகளாக மாறியமையும் அனைவரும் அறிந்ததே.

## பத்திமைப் பாடல்மரபு

'புல் இலை எருக்கம் ஆயினும், உடையவை கடவுள் பேணேம் என்னா' என்ற புறநானூற்றுக் கபிலர் கூற்று, அன்று மலர்வைத்து வழிபட்ட மரபை உணர்த்துகிறது.

யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும்போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே

என்று, பரிபாடலில் வரும் கடுவனிளவெயினனாரின் கடவுள் வாழ்த்துப் பாட்டு, அன்றே இறைவனிடம் முறையிடவும் வேண்டவும் தொடங்கிய துதிப்பாடல் மரபைக் காட்டுகிறது.

கலியில் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்
கடும்பொடும் கடும்பொடும் பரவுதும்
கொடும்பாடு அறியற்க எம்அறிவு எனவே

என்ற கீரந்தையார் பரிபாடலடிகள், சுற்றத்துடன் கூடி, ஏத்திப் பாடி வாழ்த்திப் பரவும் மரபை நன்கு எடுத்தியம்புகிறது.

இறைவன் புகழை ஏத்தி ஏத்தித் தொழும் மரபைப் பரிபாடலில் திருமால், செவ்வேள் பற்றிய பாடல்களில் பலஇடங்களில் கண்டு மகிழலாம்.

செவ்வேளின் சிறப்பைப் பாடும் கேசவனார் பாடிப் பரவுவதைப் பாருங்கள்:

சூர்மருங் கறுத்த சுடர்ப்படை யோயே
கறையில் கார்மழை பொங்கி அன்ன
நறையில் நறும்புகை நனியமர்ந்தோயே
அறுமுகத் தாறிரு தோளால் வென்றி
நறுமலர் வள்ளிப் பூ நயந்தோயே
கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை
எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே

என்றிவ்வாறு புகழ்ந்துபாடும் உத்திகள் பல கிளைத்துச் செழித்துப் பல்கத் தொடங்கின. திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் முருகனைக் கண்டதும், எங்ஙனம் பாடிப் பரவித் துதிக்கவேண்டுமென்பதை நன்கு விளக்குகிறார்.

முந்துநீ கண்டுழி முகனமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் காலற வணங்கி

என்ற கும்பிடும் முறையைக் கூறியவர், புகழ்ந்து வாழ்த்தும் மரபையும் உணர்த்துகிறார்.

அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ

எனவரும் அடுக்குகள், சிறந்த போற்றிப் பாடல் மரபைத் தோற்றுவித்தன எனலாம்.

ஏத்துதல் என்றால் உயர்த்துதல். ஒருவனைப் புகழ்ந்து உயர்த்துதல். சிலம்பில், "தீ முறை செய்தாளை ஏத்தி யாம் பாடுதும்" எனக்கண்ணகியை ஏத்திப் பாடுவது பற்றியும், 'உரவுநீர் கொன்றை வேலேந்தி ஏத்தி, குரவை தொடுத்து' ஒன்று பாடுவதையும் குறிக்கக் காண்கிறோம். கவுந்தி அடிகள் சாரணரைக் கண்டதும் இறைவனை வணங்கிப் பாடும் அழகு, சகஸ்ரநாம அருச்சனைபோல் தொடங்கியிருக்கக் காணலாம்:

அறிவன் அறவோன் அறிவு வரம்பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்

என இவ்வாறு செல்லும் பாட்டுஅடிகள், இறைவனது திருநாமப் புகழ் மாலையாகத் திகழ்கின்றன.

பெரியவனை மாயவனை பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனை, கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்என்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்என்ன கண்ணே!

ஆழ்வார் பாடல்களுக்கெல்லாம் அடிஎடுத்துக் கொடுப்பது போன்ற அழகை, இக் குரவைப் பாடல்களில் காணலாம். இங்ஙனமாகக் காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் கூட ஊடுருவி வளர்ந்த பத்திமைப் பாடல்கள், இடைக்காலத்தே பன்னிரு திமுறைகளாகவும், நாலாயிர திவ்வியப் பிரபந்தமாகவும் ஆல்போல் தழைத்துப் பரந்து வளர்ந்தன. பெரியபுராணத்திலும் திருமந்திரத்திலும் பத்திமைத் துதிகள் க்ாணப்படினும், அவை முறையே வரலாறும் மெய்யியலும் சார்ந்தன.

## பட்டினத்தார்

இம் மரபு வழியில் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய பட்டினத்தார், துதிப்பாடல் மரபில் புதுமைகள் பல தோற்றுவித்த புரட்சியாளர் ஆவார். வாணிகமரபில் தோன்றிய பட்டினத்தார், "வேண்டின் உண்டாகத் துறக்க" என்பதற் கேற்ப, செல்வவள வாழ்வினைத் துறந்து, நிலையாமை உணர்வை உலகிற்கு ஊட்டியவர். இவர்தம் ஐந்து நூல்கள் பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன: (1) கோயில் நான்மணி மாலை, (2) திருவொற்றியூர் ஒருபா ஒருப.்.து (3) திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, (4) திருக்கழுமல மும்மணிக் கோவை ,(5) திருவேகம்பமுடையார் திருவந்தாதி.

இவை அனைத்தும் சொற்செறிவும் பொருட்செறிவும் உடையவை.

கோயில் நான்மணி மாலையில் அம்பல வாணர், 'குன்றக் கோமான்தன் திருப்பாவையைத் (பார்வதியை) திருமணம் புணர்ந்த ஞான்று,

அத் திருமணத்திற்கு அமரர் முதலிய அனைவருடனும் தாமும் வந்து கலந்து கொண்டதாகக் கூறும்பகுதி சிறப்புற அமைந்துளது.

தமர் பெயர் எழுதிய வரிநெடும் பொத்தகத்து
என்னையும் எழுத் வேண்டுவன்

என்று வேண்டுமிடம், கருதற்பாலது. இன்றும் திருமண வீடுகளில், மொய்ப்பண ஏடு வைத்துப் பணம் எழுதுவர். அதை வரிநெடும் புத்தகம் என்ற தற்குத் காரணம் பங்காளிகள், உறவினரை வரிசைப்படி எழுதும் வழக்கம் பற்றியேயாகும். அதில் இன்னாருக்குப் பின் இன்னாரை எழுதவேண்டுமென்ற வரன்முறையுளது. ஒரு மொய்ப்பண ஏட்டைவைத்து, அக் கால் வழியினரை வரிசை இனங்கண்டு கொள்ளலாம். மேனாட்டு அறிஞர் ஒருவர் இவ் ஏட்டைப் பார்க்க நேர்ந்தால், இதைவைத்து ஓர் ஆராய்ச்சியே செய்திருப்பார். இங்கு வாணிகப் பெருமரபினராகிய பட்டினத்தார், ‘தாம் திருமணத்தில் கலந்துகொண்டதற்கு அடையாளமாக, என்பெயரையும் எழுதிக் கொள்க’ என வேண்டுவது வியப்பூட்டுகிறது.

பட்டினத்தார் பாடல்கள் என்று வேறுபல பகுதிகள் காணப்படுகின்றன. கோயில் திருவகவல், கச்சித் திருவகவல், திருஏகம்பமாலை, திருஏகம்ப விருத்தம் முதலாய இந்நூற்பகுதிகள்,எளிமையும் இனிமையும் உடையவை. இவை பிற்காலப் பட்டினத்தார் ஒருவரால் பாடப்பட்டன என்பர். இவைதவிரவும் சித்தர் பாடல்களினிடையே காணப்படும் முதல்வன் முறையீடு, பட்டினத்தார் புலம்பல், பட்டினத்தார் ஞானம் போலும் பாடல்கள் யாவும் முற்றிலும் வேறுபட்ட மொழிநடையின. கொச்சை வடிவங்களும் இடைமிடைந்து மிகப் பிற்காலத்தனபோல் தோற்றுகின்றன. எனினும், இம் மூன்று வகைகளிலும் உலக நிலையாமை, உடலின் இழிதகவு, காமத்தின் கரை கடந்த தீமைகள், இறையருளின் அருமைபெருமைகள் போல்வன இழையோடிக் கிடக்கின்றன. எனவே, இன்று பாரதிபரம்பரை, பாரதிதாசன்பரம்பரை என்பனபோல, மிகப்புகழ் பெற்ற ஔவையார், பட்டினத்தார் போன்றவர்கட்கும், காலப் போக்கில் பல பரம்பரையினர் தோன்றியிருக்கவேண்டும். அவர்கள் அக் கருத்து மரபில் எழுதியவற்றைத் தம்முன்னோர் பெயராலேயே அழைத்திருக்கலாம். எடுத்துக் காட்டாகப் பட்டினத்தார் கருத்துக்கு விளக்கம் போல ‘ஞானம்’ பாடிய ஒருவர், அதைப் ‘பட்டினத்தார் ஞானம்’ என வெளியிட்டிருப்பார். இவ்வாறு எழுதியவர் பெயர் தோன்றாமல், பட்டினத்தார் பெயராலேயே இவை வழங்கி வருகின்றன என எண்ணத் தோன்றுகிறது. இக்கருத்தினை அறிஞர்கள்

மேலும் சிந்திப்பார்களாக. ஏனெனில், பெரிதும் கருத்தொற்றுமை இருத்தலால் வேறென எண்ணவும் இயலவில்லை; மொழி, நடை வெளிப்பாடுகளோ ஒன்றென எண்ண இடம்தரவில்லை.

இடைக்காலப் பட்டினத்தார் பெண்மையையும் இந்த உடலையும் மிக இழிவு படுத்திப் பாடியிருப்பினும், இவர் பாடிய பல பாடல்கள், இன்றும் நம் நினைவிலோடி ரீங்காரமிடும் தன்மையன.

பிறக்கும் பொழுது கொடுவந்தது
இல்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவது
இல்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
என்று கொடுக்க அறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே!

கல்லாப் பிழையும் கருதாப்
பிழையும் கசிந்து உருகி
நில்லாப் பிழையும் நினையாப்
பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையும் துதியாப்
பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி ஏகம்பனே!

ஓடாமல் பாழுக்கு உழையாமல்
ஓரம் உரைப்பவர்பால்
கூடாமல் நல்லவர் கூட்டம்
விடாமல்வெம் கோபம் நெஞ்சில்
நாடாமல் நன்மை வழுவாமல்
இன்றைக்கு நாளைக்குஎன்று
தேடாமல் செல்வம் தருவாய்
சிதம்பர தேசிகனே!

இவ்வாறு எளிமையும் இனிமையும் பொருளாழமும் உடையவையாய் இவை நம் நெஞ்சில் நிலைபெறுகின்றன. கண்ணதாசன், இவர் பாடல்களில் ஈடுபாடு காட்டியுள்ளார்.

அத்தமும் வாழ்வும் அகத்துமட்
டேவிழி அம்பு ஒழுக
மெத்திய மாதரும் வீதிமட்
டேவிம்மி விம்மிஇரு
கைத்தலம் மேல்வைத்து அழும்மைந்
தரும்சுடு காடு மட்டே,
பற்றித் தொடரும் இருவினைப்
புண்ணிய பாவமுமே!

கண்ணதாசன் திரைப்படப் பாடல் ஒன்றில்,

வீடுவரை மனைவி
வீதிவரை உறவு
காடுவரை பிள்ளை
கடைசி வரை யாரோ

எனப் பாடியிருப்பது, இதன் எதிரொலியேயாகும். தூண்டுணர்வு பெற்றுத் திரும்பப் படைக்கப்பட்ட சிறப்பு, திரையிசையில் ஒலிக்கிறது. சிலர் நினைப்பதுபோல் ஒன்றைப் பார்த்து ஒன்றை எழுதியதன்று; மறுபடைப்பு! இரண்டு பாடல்களையும் திரும்பப் படித்துப் பாருங்கள். ஒற்றுமையிருப்பதுபோல், தனித்திறனும் பளிச்சிடுவது கூர்மையானவர்கட்கு விளங்காமற்போகாது !

தமிழ் இலக்கியத்தில் பட்டினத்தார்க்குத் தனி முத்திரை என்றும் உண்டு.

## அருணகிரி

அருணகிரிநாதர் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். நம் அருளாளர்கட்கும் முறைப்படியான, ஆதாரத்துடன் கூடிய வாழ்க்கை வரலாறு இல்லை. பட்டினத்தார், அருணகிரியார் பற்றிய கற்பனைக் கதைகள் பலவுள. அவை சுவையுடையனவாயினும், உண்மை அறிய வாய்ப்பில்லை.

அருணகிரிநாதர் வடமொழியும் வல்லவர். அவர் பல ஆயிரம் திருப்புகழ்ப் பாடல்களை முருகப் பெருமான்மீது பாடினார். தலந்தோறும் சென்று முருகன் புகழ் பாடியதால், அவை 'திருப்புகழ்' எனப்பட்டன. நாயன்மார்கள் பண்முறையில் பாடியதற்கு ஒப்ப, இவர் சந்தக்குழிப்பு அடிப்படையில், இசையமைத்துத் தாள சுருதிபடப் பாடினார். இன்று 1307 திருப்புகழ்ப் பாடல்கள் கிடைக்கின்றன. இவற்றில் மட்டும் 1008

சந்தவேறுபாடுகள். இவ்வாறு வண்ண வேறுபாடுகளைச் சந்தக் குழிப்புகளாக்கி, இலய வேறுபாடமைந்த தாள வகைகளை, நூற்றுக் கணக்கான மேளகர்த்தாப் பண்களுக்கு ஏற்ப அமைத்துப் பாடிய அருணகிரிநாதருக்கு இணையான இசைப்புலமையாளரைத் தமிழுலகிற் காணுதலரிது. இன்றுவரை இசைநிகழ்ச்சிகளில் திருப்புகழிலிருந்து ஒரு பாடலாவது பாடவேண்டும் என்ற மரபு இருந்தது, இவர் பாடல்களில் வடமொழிச்சொற்கள் அளவுகடந்து விரவியுள்ளன. உருது, தெலுங்குச் சொற்களையும், உலகவழக்குச் சொற்களையும் கூட இவர் பாடல்களில் காணலாம். சந்தம் அமையப் பாடுவது காரணம். அதற்காகப் பிறமொழி வடிவங்களை இவர் அளவின்றிப் பெறநேர்ந்தது என்றே தோற்றுகிறது. ஆயினும், இவர் தமிழிசைக்கு ஆற்றியுள்ள பணி மிகப்பெரிதென்பதே, சுவாமி விபுலானந்தர் கருத்தாகும்.

திருப்புகழ்தவிர, 102 கட்டளைக் கலித்துறைகளாலான கந்தரலங்காரமும், 52 கலி விருத்தங்களைக் கொண்ட கந்தரனுபூதியும் கந்தப் பெருமான்மீது மறவாப் பேரன்பு பூண்ட அடியார்களால் அடிக்கடி ஓதப்படும் நூல்களாகும். மேலும் கந்தரந்தாதி, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில் விருத்தம், உடற்கூற்று வண்ணம் முதலியனவும் இவரால் பாடப்பட்டுள்ளன.

தந்தனந் தனந்த தந்த
தந்தனந் தனந்த தந்த
தந்தனந் தனந்த தந்த தனதான

இவ்வாறு ஒரு சந்தக்குழிப்பை அமைத்துக்கொண்டு, அவர் பாடும் இசைப்பாடலைப் பாருங்கள்.

சந்தனந் திமிர்ந்த ணைந்து
குங்குமங் கடம்பி லங்கு
சண்பகஞ் செறிந்திலங்கு திரடோளும்
தண்டையஞ் சிலம்ப லம்ப
வெண்டையஞ் சலஞ்ச லென்று
சந்தமன் சதங்கை கொஞ்ச மயிலேறி
திந்திமிந் திமிந்தி மிந்தி
தந்தனந் தனந்த னென்று
சென்றசைந் துகந்து வந்து க்ருபையோடே

சிந்தையங் குலம்பு குந்து
சந்ததம் புகழ்ந்து ணர்ந்து
செம்பதம் பணிந்தி ரென்று மொழிவாயே

சந்தவேறுபாடுணர வேறுஒரு பாடற்பகுதியையும் காண்போம்.

சிவனார்ம னங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி னும்பகர்செய் குருநாத!
சிவகாம சுந்தரிதன் வரபால! கந்ததின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாசு லைந்துழலு
மடியேனை அஞ்சலென வரவேணும்!

இது தனதான தந்ததன தனதான தந்ததன
தனதான தந்ததன - தனதான

என்ற சந்தப்படி அமைந்தது. பலர் திருப்புகழ் ஆய்விலும் தமிழிசையாய்விலும் புகுவதில்லை. இன்று கடினமானவற்றை விட்டுவிடுவதே 'திறமை' என்று கருதப்படுகிறது. மிகமிகக்கடினமான இடங்களிலும் நுழைந்து, உண்மை காண்பதே 'திறமை' என மதிக்கும் காலம் மீண்டும் மலர்ந்தாலன்றி, தமிழுக்கு வளர்ச்சி இல்லை. இவருடைய 'கைத்தல நிறைகனி' 'முத்தைத்தரு பத்தித்திருநகை' நாதவிந்து கலாத நமோநம, 'பாகிமதிநதி' எனத்தொடங்கும் பாடல்கள், மக்களிடையேயும், பள்ளிகளிலும் இசை மேடைகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இன்று திருப்புகழைக் கேளாமல், தெருப்புகழில் உலகம் மயங்கிக் கிடக்கிறது.

## குமர குருபரர்

இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர். முகலாயர் படையெடுப்பு, மதுரையில் அரைநூற்றாண்டுக்கால முசுலிம் ஆட்சி, விஜய நகர நாயக்கர்களின் ஆட்சி, அதன் வழிவந்த மதுரைநாயக்கராட்சி - இச் சூழலின் இறுதிக்கட்டத்தில் வாழ்ந்ததனால், தமிழ் தளர்வுற்றிருந்தமைகண்டு துடிதுடித்துத் தமிழரின் எழுச்சிக்குப் பாடல் புனைந்தவர். வடநாடு சென்றும் தமிழைப் பரப்பிய பெரும் சிறப்புக்குரியவர். காசியில் இவர் கட்டிய குமாரசாமிமடம், இன்றும் சிறப்புற்றுத் திகழ்கிறது. உருது, தெலுங்கு மொழிகளின் ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்தித் தமிழின் பெருமையைப் பாடிப் பரவி, மக்களிடையே எழுச்சியை உண்டாக்கினார். இவர் பாடிய

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அவ்வகை நூல்களில் மிகச் சிறந்ததென்று போற்றப்படுகிறது. மேலும், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், கந்தர் கலிவெண்பர், கயிலைக் கலம்பகம், காசிக்கலம்பகம், மதுரைக்கலம்பகம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை, சிதம்பரமும்மணிக்கோவை, சிதம்பரச்செய்யுட்கோவை, பண்டார மும்மணிக்கோவை, சகலகலாவல்லிமாலை , நீதிநெறி விளக்கம் ஆகிய நூல்களையும் இவர் தந்துள்ளார். இவை அனைத்தும், 'குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு' எனும் பெயரால் பதிப்பிக்கப் பட்டுள்ளன. தமிழ்த்தாத்தா உ.வே. சா. அவர்கள், குறிப்புரை, ஆய்வுரைகளுடன் இந்நூலை நன்கு பதிப்பித்துள்ளார். இவர் பாடல்களில்தான், முதன்முறையாக, நூற்றுக்கணக்கான இடங்களில் தமிழ்போற்றிப் புனையப்பட்டுள்ளது. 'செழுந்தமிழ்ச் செல்வம்', தீஞ்சுவைக்கனியும் தண்தேன்நறையும் வடித்தெடுத்த சாரங்கனிந்து ஊற்றிருந்த பசுந்தமிழ், தென்னந்தமிழ், புத்தமுதம் வழிந்தொழுகும் தீந்தமிழ் என இவ்வாறு நூற்றுக்கணக்கில் வருமிடங்கள், தமிழின் பெருமையைப் பறைசாற்றி, மக்களிடையே எழுச்சியூட்டின.

இக்காலத்து, ஆய்வாளர் தாமும் ஆங்காங்கு ஆடு வாய்வைத்தாற் போல் நூல்களைப் படித்துப் போவதன்றி, முழுவதும் ஆழக் கற்பதில்லை. அங்ஙனம் கற்றால், பலவுண்மைகளை உலகிற்கு வெளிப்படுத்தலாம். கீழ்வரும் துதிப்பாடலைப் படித்துப் பாருங்கள்

முதுசொற் புலவர் தெளித்த பசுந்தமிழ்
நூல்பாழ் போகாமே
முளரிக் கடவுள் படைத்த வசுந்தரை
கீழ்மேலாகாமே
அதிரப் பொருது கலிப்பகை ஞன்தமிழ்
நீர் நாடாளாமே
அகிலத்துயிர்கள் அயர்த்து மறங்கடை
நீள்நீர் தோயாமே
சிதைவுற்று அரசியல் நற்றருமம் குடி
போய்மாய் வாகாமே
செழியர்க்கு அபயரும் ஒப்பென நின்றுண
ராதார் ஓதாமே

மதுரைப் பதிதழையத் தழையும்கொடி
தாலே தாலேலோ
மலயத் துவசன் வளர்த்த பசுங்கிளி
தாலே தாலேலோ

தமிழ் நூல்கள் பாழாயின. உலகம் தலைகீழாய், கெட்டதுமேலோங்கி நல்லவை தாழ்ந்தன. கலியாகிய பகைஞன், 'அதிரப் பொருது' தமிழ் நாட்டை ஆளாமல் தடுக்கவேண்டும். உலக மக்கள் பாவக்கடலில் நீந்தக்கூடாது. அரசியல் சிதைவுற்று, தருமமும் குடிமக்களும், மாய்ந்துபோகும் இந்நிலை மாறவேண்டும். பாண்டியர்க்கு வேறு யாரும் ஒப்பெனெ யாரும் கூறக்கூடாது. இவ்வாறு காத்து, மதுரைப் பதி தழையவரும் கொடியனையாள் மீனாட்சியம்மை எனப் பாடும் இப் பிள்ளைத் தமிழ்ப்பாட்டு, அக் காலச்சூழலில் ஒரு விடுதலை இயக்கப் பாட்டு எனில், மிகையாகாது. துதிப்பாடல்கள். தமிழையும், தமிழரையும் காத்த பெருநிதிப் பாடல்கள் என்றால், உங்களுக்கு வியப்பாக இருக்கிறதா?

உள்ள முருக்கும் ஒரு பாடல்; அதனைப் படித்தால் பத்திமை சுரக்கும்; பண்புமேலிடும்; நல்வாழ்வு அமையும்; செல்வம் பெருகும்; அன்பும் அருளும் தழைக்கும். அதனைக் காண்போம்:

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள்ளத்திலழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே

இப் பாடலை அரங்கேற்றி வருங்கால், மதுரையில் மீனாட்சியம்மையே அருச்சகர் மகள்போல வந்து, திருமலை நாயக்கர் கழுத்திலணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றி, குமர குருபரருக்கு அணிவித்து அனைவரையும் வியப்பிலாழ்த்தியதாக ஒரு கதையுண்டு. ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகள் பிறமொழி யினனான மகேந்திரப் பல்லவ மன்னனை, சமயமாற்றமேயன்றித் தமிழ்ப் பற்றாளனாகவும் - அறப்போராட்டத்தின் மூலம் வென்று காட்டினார். அது போல் பதினேழாம் நூற்றாண்டிலும் பிறமொழிகள் தலையெடுத்துக் கோலோச்சிய போது, பெருமன்னன் திருமலை நாயக்கரிடம் தமிழ்ப் பற்று ஊற்றெடுக்க வைத்தார், குமரகுருயரர். வடநாட்டுப் பாதுஷாவுடன், இந்திமொழியில்பேசி, காசியில் இடம் பெற்று, மடங்கட்டிச் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கச் செய்தார்.

## வள்ளல் இராமலிங்கர்

தமிழ்ப் பத்திமை உலகத்தில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க அடிகளார் பெரும் புரட்சியாளர்; புதுமை பல புகுத்தியவர். சமய நெறியைச் சமரச நெறி ஆக்கியவர் அவர். திருமூலர் எழுதிவைத்த மெய்யியல் உண்மைகளை, இவர் நடைமுறைப்படுத்த முயன்றார். சாதிசமயச் சழக்குகளையும் சடங்குக்குப்பைகளையும் கழித்துப் போட்டு, சமரசப் பாதையில் சமய நெறியைச் செலுத்தினார். சிவநெறியே இவர் நெறி. ஆயினும் அதில் புதுமைச் சிறப்புப் பொலியவைத்தார். இவர் பாடியவை 'அருட்பா' எனப்பட்டன. இவற்றையும் ஆறுதிருமுறைகளாக வகுத்துள்ளனர். மனுமுறைகண்ட வாசகம், காருண்ய ஒழுக்கம், இவருடைய கடிதங்கள்யாவும் இவர்தம் உரைநடை நூல்களாகப் போற்றப்படுகின்றன. சமயத்தின்கண் சமரசப்பார்வை, உயிர்களிடம் அன்பு, கருணைநிறை வாழ்வு இவற்றை விளைவிக்க முயன்றார். ஒளி வழிபாட்டைப் பேணினார்.

'ஆன்மநேய ஒருமைப்பாடு' அவர் கண்ட அடிப்படை உண்மைகளில் ஒன்று. அவர் போதித்தவை அனைத்தும் அருட்பாத் தொகுப்பில் அடங்கியுள்ளன. 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய' அவரது மென்மைப் பண்பும் பெருமையும் ஈடற்றவை. அருட்பா வழி நடந்தால், சமயநெறிகள் சீர்படும்; சிவநெறி சிறப்புறும்; சமயப் பொறுமை வாய்க்கும்; உலகம் உய்யும் என்று பலரும் நம்புகின்றனர். சிவநெறியின் திருந்திய வடிவத்தையே அவர் தந்துள்ளாரன்றி, அந் நெறிக்குப் புறம்போனார் அல்லர். இத் தெளிவு இன்று பலருக்கும் ஏற்பட்டு வருகிறது.

## துதிப் பாடல்களின் பயன்

துதிப் பாடல்கள் வழிபாட்டுக்குப் பயன்படுகின்றன. தமிழ் அருச்சனை நடைபெற உதவும். வழிபடுவோர்க்கும் கடவுளுக்கும், நேரடித் தொடர்பை ஏற்படுத்தும். அடியவர்கள் உள்ளக் கிழியில் இறையுருவை எழுதிப் பார்த்திருக்க உதவும். வீடுபேற்றை நல்குவனவேயெனினும், அவற்றின் முதற்பயன் - இம்மைப்பயன் மனக்கவலைக்கு மருந்தாதல் ஆகும்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

இதில், 'சேர்தல்' - நீளநினைதலாகும் என்பார் பரிமேலழகர். அங்ஙனம் நினைப்பதற்கு உதவுவனவே துதிப்பாடல்கள். அவை சமுதாயத் தீங்கை அகற்றவும், தமிழ் தழைக்கவும் உதவிய பாங்கும் உண்டு. திருமுருகாற்றுப்படை படிப்பதன் பயனை, அதன் இறுதிவெண்பா ஒன்று எடுத்துரைக்கும்.

மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்

என்பன அவ்விறுதி அடிகள். துதிப் பாடல்களைப் படித்து, மனமுருகி, வழிபடுபவர்கட்கு மனம் தூய்மைப்படும். அதுமட்டுமன்று மனக்கவலை நீங்கும். மேலும் நினைப்பன எல்லாம் கிடைக்கப் பெற்று, அவர்கள் இம்மைப் பயன் அனைத்தையும் பெறுவர். இதனால் அவர்கள் மறுமையின்பமும் எய்துவர் என்பது கூறாமலே பெறப்படும்.

மீண்டும் நாம் இறைவனிடம் கேட்போம்.

யாஅம் இரப்பவை
பொன்னும் பொருளும் போகமும் அல்ல, நின்பால்
அருளும் அன்பும் இரக்கமும் மூன்றும்.

# 21. நடைமுறை வாழ்வியல்

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா? எத்தனைதான் நூல்களைக் கற்றாலும், அவை நடைமுறை வாழ்வுக்கு ஓரளவே பயன்படும். உலகிடையே தான் எத்தனை குறுக்கீடுகள் - எத்தனை புதியபுதிய சிக்கல்கள். இவை எல்லாவற்றுக்குமே திருக்குறளிலும் மருந்து காண இயலுமா? முடியாது. முழுவதும் சொல்வதானால், 1330 குறள்களில் மட்டுமா - 1330 யுகங்களிலும் கூறி முடியாது.

ஒன்றற்குச் சொல்லப்பட்டது பிறிதொரு சூழலில் பொருந்தாமற் போகும். ஓரிடத்தறமும் ஒருகாலத்தறமும் பிறிதோரிடத்திலும் பிறிதொரு காலத்திலும் நேர்மாறாகப் போதலும் கூடும்.

சிலபோது கூட்டம் பேசிப் பயன்படாது விதிகளே வந்து முன்னின்று உதவா. நிலைமைக்கேற்ப நெளிவு சுளிவுடன் கண்டும் காணாமலும் - சாய்ந்தும் நெகிழ்ந்தும் நடக்கவேண்டி வரலாம். அப்போதெல்லாம் நேர்மை குன்றாத, வாய்மை தவறாத, அறத்தின் புறமென எண்ணப்படாத ஓர் உலகியல் வாழ்வு நெறியைக் கடைப்பிடிக்க நேரும். சத்தியமே வெல்லும்! உண்மைதான்! ஆனால், அதே உண்மையை வெளிப்படுத்தினால் தீங்கு வருமெனில், ஒரு குடும்பம் இரண்டுபடும் என்றால், அங்கு வாய்மையறம் பேணுவதாகக் கூறி, அக்குடும்பதைச் சிதைக்கலாமா? இரப்பதைவிட இழிவில்லை. தேசநலனுக்காகத் தியாகம் செய்து, வறுமைப்பட்டவனின் குடும்பம் பசியால் வாடுகிறது. அக் குடும்பத் தலைவனின் கண்கள் இரவாது இரந்து, கண்ணீர் கசிந்து தளும்புகின்றன. இந்நிலையில் 'இரவச்சம்' பேசிப் பயன்படுமா?

திருவள்ளுவர் பொதுவான அறங்களைச் சட்டவிதிகள்போல் நிரம்பச் சொல்கிறார். ஆனாலும், இடையிடையே, மனிதன் வாழப் பிறந்தவன்

அவனை எவ்விதத்தும் வாழ வழி காட்டவேண்டுமென எண்ணுமவர், உலகியல் சார் அறங்களெனக் கருதத்தக்கனவற்றையும் எடுத்துரைத்துச் சென்றுள்ளார். அவற்றுள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கற்றால், அன்றாட உலகியலில் நாம் நெகிழ்ந்தும் விட்டுக் கொடுத்தும் வாழவேண்டிய பல நெறிமுறைகள் புலப்படும்.

வள்ளுவப் பெருமான், தனிமனிதனின் பக்கத்தில் நின்று பேசுவார் போலப் பல இடங்களில் தனிமனித முன்னேற்றம், தனிமனிதச் சிக்கல் தீர்வு என்ற மனப்போக்கிலேயே அறங்கூறுகின்றார். உலகில் 'வாழும் உயிர்' என அவர் சிறப்பித்துக் கூறுவது, மானுடமேயாகும். பிறவெல்லாம் உயிரெனப் படினும், மாந்தரை 'வாழும் உயிர்' எனச் சிறப்பிப்பது வள்ளுவக் கலைச் சொல்லாட்சி (392, 557)

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு (392)

என்னுமிடத்து உற்று உணர்க.

## வள்ளுவர் மனித நேயம்

நம் குடும்பங்களில் நல்ல உள்ளம்படைத்த பெற்றோர், தம் பிள்ளைகள் நன்கு வாழவேண்டுமெனப் படும்பாட்டை எண்ணிப்பாருங்கள்1 வள்ளுவர் உள்ளம் அத்தகையது. "ஏ மாந்தனே! நீ வாழப் பிறந்தவன்! நீ வாழ நினைத்தால் வாழலாம்! உரோசம் பாராட்டி, முரண்டு பிடித்து, பகையைத் தேடி அழியாதே! வாழும் வழிதேடி வாழப்பழகு!" என்று தட்டிக் கொடுக்கின்றார்.

மாந்தராம் வாழும் உயிரைப் பார்த்து, 'கற்க!' என்பார் அவர். 'என் செய்வேன்? இளமையில் கற்க வழியின்றிப் போனேனே!' என ஒருவன் கவன்றால், 'கற்றிலனாயினும் கேட்க' என்று, கற்றவர்பால் கேட்டுக்கேட்டு உய்திபெற வழிகாட்டுவார். அதற்கும் வழியின்றி, உறுப்புக் குறைபாடு உடைமையால் வாடுபவனிடம்,

பொறிஇன்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி

என்பார். வாய்பேசாது, காது கேளாது, கண் தெரியாது என்பனவும் முயற்சியுடைமைக்குத் தடையாகா என வலியுறுத்துவார்.

இரந்து நிற்பவனைப் பார்த்து, 'இரவின் இளிவந்தது இல்லை' என்று அவன் புத்தியில்படும்படி இடித்துக் கூறுவார். ஏதோ ஒரு காரணத்தால் இந்த எல்லையைத் தாண்டி, ஒருவன் இரவாது இரந்து நிற்கின்றான். அப்போது 'இலன் என்னும் எவ்வம் அவன் உரைப்பதற்கு முன்பே ஈதல் வேண்டும்' என, உடையவனுக்கு உலகப்பேரறம் உணர்த்துவார்.

உலகில் தோன்றிய தனிமனித முன்னேற்ற நூல்களில், முதலில் தோன்றியதும் முதன்மையானதும் திருக்குறளேயாகும். தனி மனிதப் பார்வையில், மன்னாயம் முழுமைக்கும் பொதுமையறம் நுவலும் அதன்போக்கு, எண்ணியெண்ணி மகிழத்தக்கது. சாதி, இனம், சமயம், நாடு, மொழி, தரம் என அனைத்து வேறுபாடுகளையும் கடந்த ஒரு மாந்தனை மட்டுமே கருத்திற்கொண்டு அறங்கூறியதால், அது உலகப்பொது நூலாயிற்று. மனித இனம் உள்ளவரை, தானும் நிலைத்திருக்கவல்லது மாயிற்று.

## உலகைப் பார்த்து நட

'நீ செய்வதை உலகம் ஏற்காது', 'இவ்வாறு செய்தால் உலகம் தூற்றும்', 'நாலுபேர் என்ன நினைப்பார்கள்' - இவ்வாறு அடிக்கடி பேசுகிறோம். இங்கு 'உலகம்' என்றது, உயர்ந்தோரை எனக் கூறுகின்றனர். எத்தனை நூல்களைக் கற்றாலும், உலகைப் பார்த்தே வாழவேண்டியிருக்கிறது. உலகோரால், உலகில் பெரியோரால் - நல்லோரால் - ஏற்கக் கூடியவரால் உருவாக்கப்படும் ஒரு கருத்தையே, 'உலகம்' என்ற படிமக்குறியீடு குறிக்கும்.

'உலகைப் பார்த்து நட' என்றால், உலகில் பெரும்பாலோர் தீய வழியில் நடப்பதால், அதைப் பார்த்து நீயும் 'கெட்டுப்போ' என்றா பொருள்? 'உலகம் மதிக்கவேண்டும்' என்றால், ஒருவனைச் சுற்றியுள்ள சில்லரைப் பேர்வழிகள் பலராயினும், அவர் விரும்பிய வண்ணம் நடப்பதையா குறிக்கும்?

உலகில் இருவகை அறங்கள் உள. ஓர் அறம் அறவோர் கூறுவது; அறநூல்கள் கூறுவது. இது கற்று வருவது; கேட்டு நடப்பது. மற்றொன்று சுற்றியுள்ள உலகம் உணர்த்தும் அறம். அது பார்த்து வருவது; உணர்ந்து நடப்பது. முன்னதைவிடப் பின்னதுதான், உலக நடைமுறைவாழ்வில் கூடுதல்.

பல குழந்தைகள் பெறுவது முன்பு பெருமை; ஒரு குழந்தை போது மென்பதே இன்று பெருமை. பாடுபட்டுத் தேடிய பணத்தில் ஒரு பகுதியைப் புதைத்து வைப்பது முன்னைய வழக்கம்; அதை வங்கியில் போட்டு, இயங்க வைத்துச் சேமிப்பது இன்றைய வழக்கம்.

பெருவிருந்தில் முதன்முதலாக உயர்ந்ததாகக் 'குடி'யை வழங்குவது மேனாட்டு மரபு. அதைப் பார்த்துப் பழச்சாறு அல்லது சூப்பினைப் பரிமாறுவது நம் மரபாயிற்று.

எவ்வளவு படித்திருந்தாலும், உலகம் தெரியாதவன் என்று சிலரைக் குறிப்பிடுகிறோம். கற்றறிந்த பெரிய அறிஞர்கள் பலர் உலகியல் தெரியாததால், வாழ்க்கையில் வெற்றிபெற முடியாமற் போன வரலாறுகள் பலவுண்டு.

திருவள்ளுவர், 'ஒழுக்கமுடைமையில்' முதல் ஒன்பது குறள்களில், நூல்வழி அறங்களைக் கூறிவந்தவர் பத்தாவது குறளில், 'நீ பலப்பல நூல்களைக் கற்றிருந்தாலும், காலத்திற்கும் இடத்திற்கும் அவ்வச் சந்தர்ப்பத்திற்கும் - சூழலுக்கும் ஏற்ப, அதனை ஒட்டி நடப்பாயாக! அதுவே ஒழுகலாறு! எனக் கூறி முடிக்கின்றார்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

'உலகத்தோடு' என்பது, உலகம் ஒப்புமாறு - உயர்ந்தோரும் நல்லோரும் தக்கோரும் உண்டாக்கிய 'எது நல்லது' என்ற கருத்துரு வாக்கத்திற்கு ஏற்ப என்பதாம். தீமை பெரும்பான்மையாயினும், அது பொருளாகாது. இன்று அங்கிங்கெனாதபடி எங்கும் 'ஊழல்' மலிந்து கிடக்கிறது. சிலர் கையூட்டுக் கொடுத்தோ, வாங்கியோ நடந்து, அதற்குச் சமாதானமாக 'உலகத்தோடு ஒத்துப்போக வேண்டி இருக்கிறது' என்று கூறுகிறார்கள். இது ஓரளவு பொருந்துவது போல் நடைமுறையில் தோன்றினாலும், அற நூல்கள் கூறும் பொதுப்பேரறத்திற்கு இது முரண் படுவதாகலின், இதனைக் கடைசியில் உலகம் ஏற்காது தள்ளிவிடவே செய்யும்.

நூல் நுவல் பொதுப்பேரறமும், உலகியல் காட்டும் அன்றாட நடைமுறை காட்டும் வாழ்வறமும் ஒத்துப்போகுமிடங்களும் ஒன்றற்கு ஒன்று சார்பாகுமிடங்களும் பொதுவிதிக்கேற்ற துணைவிதிகளாகுமிடங்களும் பலவாயினும், வேறுபடுமிடங்களும் முரண்படுமிடங்களும் எதிர்ப்படவே செய்யும். அத்தகு இடங்களில் பொதுப்பேரறத்திற்கு வேறுபடினும் குறையன்று; ஆனால், முரண்படுதல் குற்றமாகும். 'ஒட்ட ஒழுகல்' என்ற வள்ளுவச் சொல்லாட்சி கருதத்தக்கது. அதன்படி நட என்பதனினும், அதனொடு பொருந்த நட என்ற இது வேறுபட்டது. உலகத்தொடு முரண்படாமையும் இன்றியமையாததாகும் அன்றோ? பல கற்றும் கல்லார் என்பது, பல நூல்களைக்

கற்றிருந்தாலும், உலகியலைக் கல்லாதவர் பயன்பட வாழார் என்பதாம். உலகில் வெற்றிபெற்ற பலர் கல்வியைவிட, பட்டறிவினால் மேற் போந்தவரேயாவர்.

அமைச்சருக்கும், அமைச்சரனைய ஆள்வோருக்கும் திருவள்ளுவர் சொன்ன அறிவுரை ஒன்றும் இதுபோன்றதேயாம்.

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்

செயற்கை என்று நூலறிவையும், இயற்கை என்று உலகியலறிவையும் குறிப்பிட்டிருப்பது கருதற்பாலது. ஒரு மருத்துவ அறிஞர், தாம் கற்ற நூலறிவோடு, அன்றைய நோய் பரவுதல், அதன் மூலகாரணம், புதிய மருந்துகள் அனைய நடைமுறை உலக அறிவையும் கொண்டுதான், நோய் தீர்க்கும் சிறந்த மருத்துவராக முடியும். ஆட்சி நிருவாகத்திலும் அவ்வாறுதான்! நூலறிவு வேண்டாததன்று. ஆனால், அதனைப் பெற்றிருந்தாலும் - செயற்படும்போது, உலகத்து இயற்கையறிந்தே செயற்படவேண்டும். முன்பு ஊதிய உயர்வு என்பது, உழைப்புக்கு ஏற்பக் கணக்கிடப்பட்டது. தனித்தனி மனிதர்க்கு வேறுபடுமதுவே நியாயமானது. அஃது உழைப்பை அடிப்படையாகவைத்துக் கணக்கிடப்பட்டது. இன்று பணவீக்கத்தை அடிப்படையாக வைத்து, ஒட்டுமொத்தமாக ஊதியஉயர்வு அளிக்கப் படுகிறது. இதனைத் தனித்தனி மனிதருக்குப் பொருத்திப் பார்த்தால், சிலருக்கு முற்றிலும் பொருந்தாதும் போகும். ஆயினும், இன்றைய 'உலகத்து இயற்கை அறிதல்' அவ்வாறுதான் செயற்பட வேண்டியுளது!

பொதுவாக 'உலகம்' என்பது, பலரால் உருவாகும் ஒரு பொதுக் கருத்து எனக் கண்டோம். எனவே, அதனொடு முரண்படுவது தகாதுபோய் விடுமென, வள்ளுவர் பெருமான் எச்சரிக்கை விடுக்கின்றார்; கடுஞ்சொல்லால் வலியுறுத்துகின்றார்.

உலத்தார் உண்டெனப்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்.

உலகத்து மூட நம்பிக்கைகளையும் அவ்வாறே ஏற்க வேண்டும் என்பது இதன் கருத்தன்று. 'புல்லறிவாண்மை'யில் வரும் இதற்கு உலகம் நம்பும் கடவுள், மறுபிறவி, புண்ணிய பாவம் எனும் இவற்றை மறுப்பது என உரை கூறுவர். எதிர்மறுத்து வினவுதலிலேதான் ஆய்வு பிறக்கிறது. உலக

நம்பிக்கைக்குரிய இவை தவிர, உலகிற்காணப்படுவனவற்றிலும் இம் முரண்பாடு சிலரிடம் தோன்றும். இசை இனியதன்று, அ∴தொரு மனநோய்; காதல் நஞ்சுக்குச் சமம்; இல்லறவாழ்வு முற்றிலும் வெறுத்து ஒதுக்க வேண்டிய ஒன்று; கலைகள் எல்லாம் மனினைக் கவர்ந்து அழிப்பவை; கருணை காட்டுவதென்பது கோழைத்தனத்தின் அறிகுறி; அன்பு என்பதொன்றில்லை, தன்னல வெளிப்பாடே அன்பெனக் கற்பனை செய்யப்படுகிறது - இவ்வாறு பேசித்திரிபவனைக் கண்டால், மக்கள் பேயைக் கண்டதுபோல் அஞ்சி ஓடுவார்கள் என்பது கருத்து.

உலகிற்கு அஞ்சுதல், உலகிற்கு நாணுதல், உலகம்மதிக்க வாழ்தல், உலகம் பார்த்துக்கொண்டே இருப்பதாக எண்ணுதல் - இவை உலகிடைத் தானும் ஒருவனாக வாழும் மனிதனின் இயல்பான மன நிலையாகும். கிடையாட்டில் தனியாடு நலங்தீங்குகளில் சேர்ந்தே பாதிப்புக் காளாகும். தோப்புக்கு வந்த சூரைக்காற்று தனிமரத்தையும் தாக்கவே செய்யும். மனிதன் சமூகத்தோடு ஒருங்கிணைந்து வாழ்தலால் ஏற்படும் ஒத்திசைவு இது.

**எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும்; தம்மொடு**
**கொள்ளாத கொள்ளாது உலகு.**

தமக்குப் பொருந்தாதன, தம் நிலைக்கு ஏலாதனவற்றை ஒருவன் செய்தலாகாது, அதை உலகு ஏற்காது, பழிக்கும் - நகையாடும்! எனவே, உலகம் தன்னை எண்ணி இகழ்ந்து சிரிக்கும்படியானவற்றை ஒருவன் செய்யாமல், நான்கு சிந்தித்துத் தனக்குப் பொருந்துவனவற்றையே செய்தல் வேண்டும். இதன் கருத்து யாது?

வசதி இல்லையென உலகறிய வாழ்பவன், கடன் வாங்கியோ பிறவாறோ ஆடம்பரத் திருமணம் செய்தால், உலகம் அதைப் போற்றிப் புகழாது; எள்ளி நகையாடும். மெலியான் ஒருவன் வலிமை மிகுந்தானை ஒடுக்கப் போவதாக வாய்வீரம் பேசினால், உலகம் சிரிக்கும். தம்மொடு கொள்ளாதவற்றைச் செய்தால், உலகு அதை ஏற்றுக் கொள்ளாது இகழும்.

எனவே, வாழ்வில் உயர்வுகளை விரும்புமொருவன், உலகு பழிக்காதபடி, தனக்குரிய எல்லைகளில் நின்று அடக்கமாக வாழ வேண்டும்.

## முடியாத இடத்தில் முடிக்கக் கூடிய வழி ஒன்றை நாடுக

பொய்யாமொழிப் புலவர் இம் மக்களிடத்தில் கொண்டிருந்த பேரன்பு, பெருநேயம் வெளிப்படுமிடங்கள் பலவாகும். அவற்றை உணர்ந்து கற்றால்,

அவர் நம் பக்கத்திலிருக்கும் தாயைப்போல், தந்தையைப்போல், தமையனைப் போல் காணப்படுவார். அவர் சொற்களால் ஈர்க்கப்பட்டு, மனம் நெகிழ்ந்து, என்றும் மாறா உறவு கொள்ளவே நம் மனம் நாடும்.

அவர் தம் நூலை ஆராய, மதிப்பிட, விளக்கம் கூற, நயம் காண, உரையெழுதவெல்லாம் எழுதவில்லை; நம்பிக் கற்று வாழ என்றே எழுதினாரென்பதும் இதனாற் புலப்படும். வினை செயல்வகை, காரியமாற்றி வெற்றிபெறும் வாழ்க்கை பற்றியது. அதில் ஒரு குறளில், "ஒன்றை அடைய இயன்ற எல்லா வகையாலும் முயன்றுபார்! காரியம் வெற்றியாகவில்லையா, எவ்வாறு செய்தால் அவ்வெற்றி கைவரப் பெறுமோ, அவ்வழியைப் பார்த்துக் காரியத்தை முடித்துக்கொள்!" என்று கூறுவதைப் பார்க்கலாம்.

நடைமுறை வாழ்க்கையில், அவருக்கிருந்த நாட்டத்தைத் தெளிய உணர்த்தும் திருக்குறள் இது.

> ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
> செல்லும்வாய் நோக்கிச் செயல்

இத்தகைய குறள்களுக்கெல்லாம் உரை விளக்கம் எழுதிப் பயன்படாது. இதனை அன்றாட வாழ்க்கையோடு பொருத்திப் பார்க்கும் போது தெள்ளத்தெளிவாக விளங்கும்.

ஒருவர் வாணிக நிமித்தம் ஒரு புதிய நகருக்குச் சென்றார். துணிமணிக் கடை தொடங்கினார்; இலாபமின்றி மூட நேர்ந்தது. அதனையே ஆயத்த ஆடை அங்காடியாக்கிப் பார்த்தார். கட்டுபடியாகவில்லை பிறகு ஒரு மருந்துக் கடையாக மாற்றினார். எதுவும் கூடிவரவில்லை. அவ்வூரில் அவர் உணவு விடுதிகளில்தான் சாப்பிட்டுக் கொண்டு தங்கியிருந்தார். அங்கிருந்த மக்கள் தம் வீட்டில் சமைக்காமல் பெரிதும் உணவு விடுதிகளையே நாடு வதையும், குடும்பம் குடும்பமாக வந்து உணவுண்பதையும், சிலவகை உணவுகளில் மிகுந்த நாட்டம் செலுத்துவதையும் அனுபவத்தில் பார்த்தார். திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. தம் கடையை நட்டத்திற்கு விற்றுவிட்டு, ஒரு நல்ல உணவகத்தை விலைக்கு வாங்கி நடத்தினார். அன்று முதல் அவர் செல்வம் நாளும் வளரலாயிற்று. ஒல்லும் வகையாலெல்லாம் வினை முயற்சி நன்றுதான். ஒல்லாவிடத்து என் செய்வது? செல்லும் வழிநோக்கிச் செய்தார் அவர்.

இடுக்கணழியாமை பேசிய, ஆள்வினையுடைமை பேசிய அதே திருவள்ளுவர், ஒல்லாக்கால் செல்லும் வழிபார்த்து, நீ அதற்கேற்ப மாறிக்கொள் என்று கூறுகிறார்.

அதற்காகத் தவறான வழியை நாடென்பது பொருளன்று. காலில் விழுந்து கும்பிடும் அரசியலில், விழுந்து விழுந்து கும்பிடுவோர்க்கெல்லாம் பதவி கிடைக்கும். நிமிர்ந்துநின்றுபார்; முடியாவிட்டால் நீயும் நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து காரியத்தை முடித்துக் கொள் என்பதன்று இதற்குப் பொருள்.

எதில் 'இடுக்கண் அழியாது இறுதிவரை நிற்கவேண்டும்', எதில் ஊழலையும் எதிர்க்கும் முயற்சிவேண்டும், எதில் வழியை மாற்றியேனும் வெற்றி காணவேண்டும்; வழியை மாற்றுவதென்பது எதில் - எந்தஅளவு - எவ்வாறு என இவற்றையெல்லாம் அறநூல் விரித்துவிரித்துக் கூறமுடியாது. உலகில் தோன்றும் ஆயிரம் சூழல்களில், உடனுக்குடன் முடிவெடுத்து நடக்கவேண்டியது, தனிமனிதனின் பொறுப்பாகும். அவ்வாறு சூழலறிந்து, அவ்வச்சமயம் பார்த்து, முடிவெடுக்க வேண்டிய ஒன்று இது.

அறநூல் கைகாட்டி போன்றதுதான். அதுபோக வேண்டிய திசையைத்தான் காட்டும். உடன்வரும் துணைபோலக் காலில் தைத்த முள்ளை எடுத்துவிட உதவாது. திருவள்ளுவர் சிலபோது, உடன்வரும் உற்ற துணைபோலவும் உதவ முன்வருவதுதான் வியப்பு. 'ஒல்லாக்கால்' என நிறுத்தி விட்டுச் சற்றே சிந்தியுங்கள். 'செல்லும் வாய்' என்று, நிறைவேற்றும் வழிகளைத் தேடச் சொல்கிறார். இடைவிடாது முயலவேண்டிய இடங்களும் உள; முயற்சிகளை மாற்றிப் பார்க்கவேண்டிய இடங்களும் உள என்பது இதனால் போதரும். இதனாலன்றோ திருக்குறளை அறநூலென்று மட்டும் ஓதாது, வாழ்வு நூலென்று போற்றுகிறோம். பேரறிஞர் மு.வ. அவர்கள், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என நூலெழுதியதும் காண்க.

### அரவணைத்துக் கூறும் அறிவுரைகள்

செந்நாப் போதார் தம் குழந்தைகளிடம் அரவணைத்து, அன்புடன் கூறும் அறிவுரைகள் பலவாகும். இவை கட்டுச் சோறுபோல, வழிப் பயணத்திற்கு உற்றுழி உதவுவன.

### வியவற்க!

தான் எவ்வளவு திறமையாளனாயினும் அறிஞனாயினும், பலர் நடுவே தன்னைத்தானே வியந்து பேசுவது குற்றம் என்பது வள்ளுவர் கருத்து. தன்னைக் கண்டு பிறர் வியக்குமாறு நடக்க வேண்டுமே தவிர, தானே தன்னை

வியந்துபேசிக் கொண்டிருந்தால், அதை உலகம் மதிக்காது. அங்ஙனம் பேசியபின், தனக்குத் தளர்ச்சியும் மற்றவர்க்கு இகழ்ச்சியும் தோன்ற வாய்ப்புண்டு. வாழும் சாதுரியமுடையவன் தன்னை வியந்துபேசுவதால், தன் திறமை, ஆற்றல் முதலியன பிறரால் அறியப்படுகின்றான். மேலும், அது கேட்போரிடம் பொறாமைத் தீயை மூட்டிவிடவுங் கூடும்.

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

தன்னை எப்பொழுதும் அதாவது வியக்குமாறு திறமையிலும் போட்டியிலும் தான் விஞ்சிநின்ற இடங்களிலும் கூட, வியந்து பேசாது இருப்பாயாக என்பதாம். இவை எல்லாம் நன்மை பயவாச் செயல்கள். எப்பொழுதுமே நன்மை பயவாதென்று தெரியும் எக்காரியமாயினும், அதனைக் கைவிடுதலே தக்கதாம். தான் நயக்கும் படியான - விரும்பும்படியான செயலேயாயினும் கைவிடுக என்பார் 'நயவற்க' என்றார்.

## ஆசையை வெளிப்படுத்தாதே

காதல் என்பது, ஒன்றின்பாற்கொள்ளும் அளவற்ற விருப்பம். காதலியினிடம் கொள்ளும் காதலும் அதுவே.

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்

ஒருவன் தான் விரும்புவனவற்றை நுகருங் காலத்து, அப் பொருள்களின்மீது தனக்குள்ள விருப்பம் மற்றவர்க்குத் தெரியாவாறு நுகர்தல் நல்லது. அங்ஙனம் கொண்டு செலுத்த வல்லனாயின், பகைவரது சூழ்ச்சிகள் பயனின்றிப் போகும். தனக்கு ஒன்றில் ஆர்வமிருப்பதைப் புலப்படுத்தினால், அதுவே வாயிலாகப் பகைவர் அவனுக்கு அழிவு தேடுவர்.

உலகியலிலும் நம் விருப்பு வெறுப்புகள் வெளியில் அதிகம் புலப்படாவாறு, அடக்கமாக வாழ்பவரே வாழ்வில் வெற்றிபெறக் காணலாம்.

ஒருவர் நகர்ப்புறத்தே பத்து ஏக்கர் நிலம் வாங்கி, மனையிடமாகப் பகுத்து விற்றால், பல இலட்சம் இலாபம் வருமென அறிந்தார். அதிற்கொண்ட பேராசையால், செல்வர்பலரிடம் சென்று, முழு விளக்கம் கூறிக் கடன் திரட்ட முயன்றார். இவருக்குக் கடன்தரலாமென எண்ணிய ஒரு தொழிலதிபர், அவ் ஊதியம் தமக்குக் கிடைத்தால் தகாதா என எண்ணி, அந்த இடத்தைத் தாமே

வாங்கிக் கூறுபோட்டு விற்கலானார். பாவம் இந்த யோசனையைத் தொடங்கியவருக்கு, அப்பத்து ஏக்கரில் ஒரு மனை இடம் கூடக் கிடைக்காமற் போனது.

## காரியம் முடியும்வரை காப்பதோர் நோன்பு

ஒரு செயலுக்கான முன்திட்டம், நெறிமுறைகளைக் கூடுமானவரை மறைபொருளாக வைத்து, அச்செயலை முடித்த பிறகே அவற்றை வெளிப் படுத்த வேண்டும். போர் நெறிகளிலும் அரசியலிலும் இது மிக முக்கியம்.

**கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை; இடைக்கொட்கின்**
**எற்றா விழுமம் தரும்.**

கடைசியில் - காரிய முடிவில் வெளிப்படுமாறு, அது பற்றிய இரகசியங்களைக் காத்துச் செயலாற்றுவதே ஆண்மையாகும் - ஆளுந் திறமையாகும். இடையே வெளிப்பட்டுவிடின், அது தாங்க முடியாத துன்பத்தைத் தரும்.

ஒரு பெரிய தொழிற்சாலையில், மேலாளர் கையூட்டுப் பெற்றது, உரிமையாளர் காதுக்கு எட்டியது. அவரைக் கையுங்களவுமாகப் பிடிக்கும் வரை, தமக்கது தெரியுமென்பதைக் தொழிலதிபர், காட்டிக் கொள்ளவே கூடாது. வேகத்தால் உந்தப்பட்டுச் சற்றே வெளிப் படுத்தினாலும், மேலாளர் விழிப்படைந்து கொள்வார். பிறகு அவரைக் கையும் களவுமாகப் பிடிப்ப தென்பது இயலாமலே போய்விடும். அதனால், பல பின்விளைவுகளை அனுபவிக்க வேண்டிவருமாதலால், 'எற்றா விழுமம் தரும்' (நீங்காத் தன்பம், தாங்கமுடியாத் துன்பம்) என்றார்.

## பெரியவர் துணையிலதேல் பிறிதெதுவும் பயன்படாது

அறிவுக்குக் கிடைத்த பரிசு; திறமைக்குப் பெற்ற பதவி என்பன எல்லாம் செம்பாதியே உண்மை. மேலே உரியவரிடம் அந்தத் திறமையை, அறிவை எடுத்துச் சொல்ல வேண்டும். தூண்டுகோல் மட்டுமன்றித் தூக்கி விடவும் துணைவேண்டும். எமக்குத் தெரிந்த மட்டில் உயர்பதவி - பட்டம்-பரிசு எல்லாம் இறையருளால் கிடைத்த பெரியவர்கள், திரைமறைவிலிருந்து உதவிய செல்வாக்கினாலேதான் எனக் கூறலாம். அதற்காகப் பெற்றவர் திறமைக் குறைவுடையவர் என்பதன்று. அது பயன்பட்டது அச் சார்பினாலே தான் என்பதே குறிப்பு.

முதலிலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை.

முதல்போட்டுத் தொழில் செய்யவேண்டும். முதலே இல்லாமல் தொழில் தொடங்குவது எப்படி? முதலையே கடன்வாங்கிப் போட்டால், வட்டிக்குக் கட்டாது. எனவேதான், முதல் இல்லாதவர்கள் தொழிலோ, வாணிகமோ தொடங்கி இலாபம் ஈட்ட இயலாது. அதுபோலப் பற்றுக் கோடாய்த் தாங்கும் பெரியோர் துணை இல்லாதவர்க்கும், உயரிய நிலைகள் உளவாகா என்பதாம். (மதலை - மேல் விதானத்தைத் தாங்கும் தூண்) மதலையாம் சார்பை - துணையை அடிமுதல் என ஒப்பிட்டது கருதத்தக்கது. பிறவற்றினும் பெரியோர் துணையே முதலில் வேண்டாற்பாலது என்பது இதனாற் புலனாகும். சாதியாலும் சமயத்தாலும் சாதுரியத்தாலும் கலைத்திறமையாலும் செல்வாக்கு மிக்க பெரியவர்களது துணையைத் தேடிக் கொள்ளப் பலரும் முந்துவது இதனாலேயாம்.

## அளவறிந்து வாழும் வாழ்க்கை

ஒப்புரவறிதல், ஈகை என்று அறத்துப்பாலில் அவற்றின் இன்றியமையாமையை மிகவும் வற்புறுத்திக் கூறுவார் பேராசான். ஒப்புரவு - உலகிற்குதவும் அறக்கொடை. அதைச் செய்தலால் கேடுவருமெனில், அக் கேட்டினை உன்னை விற்றுக்கூட அடையலாமே என்று அத்துணை ஆழமாக உறுதிப்பட மொழிவார். ஈதல் இயையாவிடத்துச் சாதலும் இனிதன்றோ என்பார். இங்ஙனம் உயிர்மேல் பணயம் வைத்து இவ்விரண்டறங்களையும் மொழிபவர், பொருட்பாலில் உலகியல் நோக்கில் வலியறிதல் அதிகாரத்தில் கூறுவன ஒப்பிட்டுச் சிந்திக்கற்பாலன.

ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

உன்னிடமுள்ள செல்வத்தின் அளவறிந்து ஈவாயாக! அதுதான் செல்வத்தைப் போற்றிக் காத்து, மேன்மேலும் வழங்கும் நெறியாகும். உன்னிடமுள்ள செல்வத்தின் அளவைச் சீர்தூக்கி அறியாமல், ஒப்புரவு செய்தால் கூடாது. அங்ஙனம் செய்யின், உன் செல்வவளம் மிகவிரைவில் கெட்டுவிடும். ஒருவன் இலட்சாதிபதி ஆக இருக்கலாம். அதை முழுவதும்

தீருமட்டும் வாரி வழங்குவது ஒரு நெறி! அதனைக் கொடைமடம் என்பர். பாரி போல, ஈத்துவக்கும் இன்பம் மிக்கவர் கொடைமடம் படுவர். ஆனால், அது எல்லார்க்கும் எல்லாக் காலத்தும் உதவாது. அச் செல்வன் தனக்கு வரும் வருமானத்தில் ஒருபகுதியை - வருவாயில் காற்பகுதியை மட்டும் வழங்கி வாழ்வானேல், அவன்தன் செல்வமும் பெருகும்; அதுபெருகப் பெருகக் கொடையும் கூடும். அதுவே பொருளைப் பேணிக் கொடுக்கும் நெறியாகும். உலகியற்குப் பெரிதும் ஒத்தது இதுவே என்க! வள்ளல் அழகப்பர்போல, 'குடியிருந்த வீடுங்கொடுத்த' விழுத் தெய்வமாவார் ஒருசிலரேயாவர்.

இங்கும் வள்ளுவப் பேரறம், தனிமனிதர்களை நோக்கியதாதல் காண்க. ஈயும் உணர்வை ஊட்டுவதற்காக, ஒருவனிடம் ஈத்துவக்கும் இன்பம் பற்றிப் பேசுகிறார். ஈயும் இயல்புடைய ஒருவனிடம், அவன் பக்கம் நின்று, அறநெறிப்படி உன் செல்வத்தின் அளவு அறிந்து கொடு எனத் தன்னைத் தான் காத்துக்கொண்டு, பிறர்க்கும் உதவும் அறநெறியைக் காட்டுகின்றார்.

இங்ஙனம் ஈகைதானும், ஈவோர் பண்பிற்கேற்பவும், உலகியல் வாழ்வுக் கேற்பவும், வாய்ப்புச் சூழல் மனநிலைகட்கேற்பவும் வேறுபடுமென அறிகிறோம். ஈகை அதிகாரம் மன்னாயப் பொதுப்பேரறம்; வலியறிதலில் வரும் ஈகைக் குறள், தனிமனிதச் சீரறம் எனலாம். முன்னையதே பின்னதற்குத் தூண்டுதலாம்; பின்னையதன் வளர்ச்சியே - அன்பு அருளாவது போல் - முன்னையதுமாம் எனத் தெளிதல் வேண்டும்.

## இரவும் இரவச்சமும்

பிச்சைதா எனத் தாழும் கையும், பிடி இதோ என நீட்டும் கையும் - இச்சகத்தில் இல்லா நாளே இன்பநாள் என்பர். ஆயின், அத்தகையதொன்று கனவு காணப்படுமேயன்றி, நனவாதல் என்று?

இரத்தல் கூடவே கூடாதென்று 'இரவச்சம்' கூறிய, பொய்யா மொழியார், இரவு பற்றியும் கூறியிருப்பது, அவர்தம் மனிதநேயத்தையே காட்டுகிறது. இரவாமை கோடிஉறும் இரவாதார் பெருமை இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே என்று, இரவாதிருக்கவேண்டுமென வற்புறுத்துவார் அவர். அதைவிட இழிவு பிறிதொன்றில்லை என, மான உணர்வைத் தூண்டுவார். விதிமேலும், கடவுள் மேலும் பழிபோட்டு யாசிக்க முயல்வாரைப் பார்த்து, அங்ஙனம் படைத்திருந்தால், 'அவன்' கெடுக என்று சாபமிடுவார். தனக்கு அன்று; ஆவிற்கு - பசுமாட்டிற்குத் தண்ணீர் வேண்டும் என்றுகூட இரப்பது இழிவே என்பார்.

இவ்வளவும் சொன்னாலும், உலகில் இரப்பவரே இல்லாது ஒழிவரோ? யாருமே யாசிக்காத - பிச்சை கேட்காத - இரந்து நிற்காத முழுச் சமத்துவச் சமதருமம் வந்துவிடுமோ? உலகில் இருளின்றிப் போகுமோ? ஒளி இருக்கும் காலமெல்லாம், இருளும் இருந்தே தீருமென்பதே இயற்கை காட்டும் நெறி. பஞ்சம், வறுமை, துன்பம், நோய், இடுக்கண் எல்லாம் இருள்போல, ஒடுங்கிநின்று பரவி உலகைவிட்டு ஒழியாது காணப்படுமெனவும் உய்த்துணர்ந்த பேராசான், 'இரவு' பற்றியும் ஓரதிகாரம் வைத்தார் எனலாம்.

கரத்தல் (மறைத்தல்) இல்லாதவர்கள் உள்ளவரை, இரத்தலும் நல்லதே என்றார். பத்துக் குறள்களிலும் இரந்தும் வாழலாம் என வாதிக்க வில்லை. கரத்தல் கூடாது - கரவாதாரிடம் இரக்கலாம் - கரத்தல் கொடிது என, இரப்போரிடம் இல்லை என மறைப்போருக்கே மறைமுகமாக அது தவறு என அறிவுரை பகர்கின்றார். கரவாதாரிடம் இரந்துநின்றால், அவ் இரப்பும் ?ஓர் ஏர் (அழகு) உடைத்து என்றார் அப்பெருமனத்துப் பேரறிஞர்.

இரக்கத் தக்கவரைக் கண்டால், இரந்துநில்லுங்கள்! நீங்கள் இரந்து கேட்பவை எளிதில் - மனங் கோணாது தரப்படுமாயின் - இரத்தலும் ஒருவகை இன்பமேயாம்! கரத்தலை அறியாதார் மாட்டு இரந்தால், இரத்தலும் ஈதலே போலும்!

> இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
> மரப்பாவை சென்றுவந் தற்று.

இரப்பவர் முன் கரப்பிலா நெஞ்சுடையார், கண்ணின் கடை ஈரம் தோயக் கருணை காட்டி நிற்றலையும், அவர்பால் ஏக்கற்று நின்று பெற்ற மகிழ்ச்சியில், கண்களில் நீர்தளும்ப இன்புறுவார் முகமலர்ச்சியையும் சித்திரமாய்க் காட்டி, இவ் விரண்டுமே இல்லையென்றால், அம் மானுடர்க்கும் அவர்போல் செய்யப் பட்ட மரப்பாவைகட்கும் என்ன வேறுபாடென வினவும்போது, எம்மான் திருவள்ளுவர், மனிதநேயத்தின் உச்சிக்கே சென்று விடுகிறார். இரத்தலை நியாயப் படுத்தாமல், இரத்தலுக்கு எதிரே கரத்தல் இல்லாமையை நியாயப் படுத்தும் அந்த அருளுள்ளம், நினைக்குந்தொறும் காதலாகிக் கசிந்து கண்ணீர் வைக்கின்றது1

## மான உணர்வும் குடியை வாழ்வித்தலும்

உலகியல் கூறி, நடைமுறை வாழ்வைக் காட்டி, இவ்வாறு வாழ்க எனக் காட்டும் வள்ளுவம், பிற நூல்கள் பலவற்றினின்றும் வேறுபட்டுக்

காட்சியளிக்கிறது. மாந்தனின் மான உணர்வே, அவனை நற்பண்புகட்கு அழைத்துச் செல்கிறது; தவறுகட்கு வெட்கப்பட வைக்கிறது; குற்றங்குறைகட்கு அஞ்சச் செய்கிறது. பொதுவாக இம் மன உணர்வே, மாந்தர்தம் ஆளுமையின் அடித்தளமாகும். மானம் இழந்தபின் உயிர் வாழ்தல் பெருமையாகாது என அடித்துக் கூறும் வள்ளுவத் தந்தை, ஓரிடத்தில் மட்டும் 'மானரோசம்' எனப் பேசித் திரிந்தால், அவ் வீண் கவுரவம் குடியைக் கெடுத்துவிடும் என எச்சரிக்கின்றார்.

**குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடிசெய்து**
**மானங் கருதக் கெடும்.**

குடிக்கு ஏற்பட்ட இன்னலை நீக்கி, மனைவி மக்கள் குடும்பம் சுற்றம் சூழ்ந்த தன் குடியைக் காக்க முற்படுபவர்கட்கு காலம்பார்த்துச் செயற்படுவ தென்பது இல்லை. அவர்கள் என்றும் எப்பொழுதும் கடமையாற்றவேண்டும். அல்லாமல் 'நாளை, நாளை' எனக் குடும்பக் கடமைகளை ஒத்திப் போடும் சோம்பல் ஒரு பழக்கமாகவுளது. அச் சோம்பல் கூடாது. சிலர் மானரோசம் என்று பேசி, அவன் செய்தாலென்ன? என் தலையிலா எழுதியிருக்கிறது? என்றும், 'ஐயோ, இப்படி உழைத்தால், நடந்தால் என் மானம் போகுமே' என்று கூறி, தயங்கித் தயங்கிக் கடமையைக் கைவிடுவர். 'மானம்' என்று, தனி அதிகாரம் வகுத்து வற்புறுத்தியவர், இங்கு 'மானங் கருதின் குடிகெடும்' என்று கூறுகிறார்.

தமிழ்மா முனிவர் குன்றக்குடி அடிகளாருக்கு மிகவும் பிடித்தமான குறள் இது. தமிழினம் தங்களுக்குள்ளேயே இவ்வாறு மானம்பேசிப் பேசியே அழிந்ததென்பார் அவர். குடும்பத்தில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை மிகுதியாக வேண்டும். அண்ணன் தம்பிகளுக்குள்ளும் அப்பா பிள்ளைகளுக்குள்ளும் தான் மானம் பற்றி மிகக் கூடுதலாகப் பேசிச் சண்டை போடுவார்கள். இவர்கள் வெளியாரிடம் தம் குடும்ப மானம் போவது பற்றிக் கவலைப்பட மாட்டார்கள்!

## கடமை மறதி

'பொச்சாவாமை' என்பதும், வள்ளுவம் உணர்த்தும் தனிச் சிறப்புள்ள அறமாகும். பொச்சாத்தல் - அளவு கடந்த மகிழ்ச்சி அல்லது பட்டம் பதவி செல்வம் செல்வாக்கு மகிழ்ச்சியில், கொண்ட கடமையை மறந்து விடுவதாகும். பொச்சாத்தல் - மறதி என்பர். சாதாரணப் பொது மறதி வேறு; இது உவகை மகிழ்ச்சியிற் சோர்ந்து, சொன்னதையும் மேற்கொண்டதையும்

மறப்பது. முற்கால மன்னன் ஆட்சியை மறந்து அந்தப்புரத்தில் கிடந்ததும் இக்கால அமைச்சன் தேர்தல் வாக்குறுதிகளை அறவே கைவிட்டுக் கார்களில் பறப்பதும் இதிலடங்கும். வாழப் பிறந்தவனே எதனையும் அலட்சியப்படுத்த மாட்டான்; மறக்க மாட்டான். முன்பு அங்ஙனம் அலட்சியப்படுத்தி மறந்து கெட்டழிந்தவர்களை நினைத்துக் கொள்ளுங்கள் என்று குறள்வேந்தர் விழிப்பூட்டுகிறார். எப்போது? "நண்பர்களே! நீங்கள் உங்கட்கு வந்த வரிசைகளால் மகிழ்ச்சிவயப்பட்டு, அதிலே ஆழும்போது, முன்பு இவ்வாறாகி வாழ்வை அலட்சியப்படுத்தி அழிந்தவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்" என்னும்போது, நீங்களும் அழிய நேருமென்று சொல்லாமற் சொல்கின்றார்.

இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

மகிழ்ச்சியில் மைந்துறுதல். அம் மகிழ்ச்சிலேயே தோய்ந்து, அதன் வலிமை கூடித் தான் அதற்கு ஆட்படுதல். வாழ்வில் வெற்றிபெற எண்ணுவார்க்குக் கூடாத இயல்பு இது.

### வாய்மையின் இலக்கணம்

தமிழில் உண்மை - வாய்மை - மெய்ம்மை என மூன்று சொற்கள் உள. மனம், மொழி, மெய்களால் சத்தியமாயிருத்தலென விளங்கிக் கொள்ளலாம்.

நம் உலகப் பேரறிஞர், 'வாய்மை' என அதிகாரம் வகுத்ததேன்? உண்மையும் மெய்ம்மையும் வாய்மையால் வெளிப்படுதலான், 'நடுவணது எய்த இருதலையும் எய்தும்' என்றாற்போல், அதற்குச் சிறப்புக் கொடுத்துக் கூறியுள்ளார்.

அவர் நடைமுறை உலகியல் காட்டி, மாந்தனை வாழவைப்பதையே குறிக்கோளாகக் கொண்டவர் என்பது இதனாலும் விளங்கும். வாய்மையாவது யாதெனின், 'உண்மையுடைமை' என விளக்கவில்லை. உள்ளதைச் சொல்வது என்னாமல், நல்லதைச் சொல்வது, பிறர்க்குத் தீங்கு பயவாதவற்றைச் சொல்வது என விளக்குகின்றார்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

உண்மைக்குப் புறம்போக அவர் கற்பிக்கவில்லை. பொய்யாமையை மிக வற்புறுத்துமவர், அது பிறர்க்குத் தீங்கற்றதாகவும் இருக்கவேண்டுமென எண்ணுகிறார். பழங்காலத்தில் வாழ்தல் வேண்டிப் பொய் கூறும் பழக்கம் புலவர்களிடத்திலும் காணப்பட்டதில்லை. நடைமுறை வாழ்வில், தொந்தரவு வருமெனத் தெரிந்து, மாற்றிச் சொல்லவேண்டிய சூழல்கள் பல எதிர்ப்படுகின்றன. "பள்ளிக்கூடம் போனால் மிட்டாய் தருவார்கள்" என்று, பிள்ளையைக் காலையில் வழியனுப்பவேண்டி வரும். "என் கணவர் எங்கே போயிருக்கிறார் என்று தெரியாது" எனத் தெரிந்திருந்தும் மாற்றிச் சொல்ல நேரும். கேட்பவர் அடிக்கடி கடன்கேட்டு நச்சரிப்பவராக இருக்கலாம். இவ்வாறு ஆயிரம் சூழல் வரும் வாழ்வில், "உண்மையே பேசுக! தீங்குதவிலாதவற்றைப் பேசுக! புரைதீர்ந்த நன்மை தந்தால் - சிறிதும் குற்றமற்ற, அப்பழுக்கற்ற நன்மை தந்தால், நீபேசும் பொய்ம்மையும் வாய்மையின் இடத்தைப் பெறும்!" எனக் கூறும்போது, உலகியலைக் கொண்டே அறங்கூறும் சிந்தனை மேலோங்கி நிற்கிறது.

உலக அறநூல்களை விட்டு, வேறுபட நிற்கும் இதனை முழுவதும் விளங்கிக் கொள்ளவேண்டுமேல், மேன்மேலும் உலகியல் நடைமுறைப்பட்டறிவு மிக்கார்க்கே புலனாகுமென்பது உறுதி. மற்றவர்க்கு இது திகைப்பையும் வியப்பையும் அளிக்கக் கூடியது. வேறு நாடுகளில் வள்ளுவம் தோன்றியிருந்தால், சிக்கலும் விவாதமும் கூடிய இச் சிந்தனையடிப்படையில், சிறுகதைகளும் புதினங்களும் கூடத் தோன்றியிருக்கும். இங்கு வள்ளுவத்தைப் பாராட்டுவார் உண்டு. உரைகூறிப் பொழிவாற்றுவார் பலருண்டு; பயின்று நடைமுறைப் படுத்திச் சிந்திப்பார் எவருமிலையே? என்செய்வது?

## நன்மையும் தீமையும்

நீதி நூல்கள், அறத்தையும் மறத்தையும் வேறு பிரித்துக் கூறும்; நன்மை தீமைகளை அறுதியிட்டுக் கூறும். ஆனால், நடைமுறை வாழ்வில் எது நல்லது, எது தீயது எனப் பிரித்தறிவது மிகவும் கடினம்.

நன்மையே செய்க என்பது, அறநூல் விதிதான். அதற்காகப் பாம்புக்குப் பால்வார்ப்பதுபோல, உள்ளுக்குள் தீங்கு நினைப்பவனுக்கு நல்லது செய்து, அவனை வளர்த்து, அவன் நமக்கோர் அழிவுசெய்ய விடலாமா?

முன்கோபம் மிக்கவர், பொறுப்புணராதவர், மறதிக்காரர், சோம்பல் மிக்கவர் என்று தெரிந்திருந்தும் நமக்கு வேண்டிய உறவினர் என்பதற்காக, ஒரு மேலாளர் பதவியை அவருக்குத் தூக்கிக்கொடுக்கலாமா? அதனால் அவருக்கும் கேடு; தொழிலகத்துக்கும் கேடல்லவா?

நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

அவரவர்இயல்பறிந்துதான் மனிதர்களை வழிநடத்தி, ஒரு நிறுவனத்தைச் சீர்பெற ஆளவேண்டும். நன்மை செய்வதாக எண்ணி, நாம் செய்வனபல, தவறாகிவிட வாய்ப்புண்டு. இ∴து ஓர் ஆட்சியியல் - அதுவும் மனிதர்களை வைத்து, நிருவகிக்கும் நிறுவனத்தை நடத்தும் ஆட்சி பற்றியது. மனைவியிடம் அன்புவைப்பதாகக் கருதி, அவளுக்குக் கண்டவற்றைப் பழக்கி, பிறகு அவள் தனக்கு அடங்காதவளாக ஆகுமளவு செயற்படுவதும், கணவனுக்கு வேண்டாத உணவுகளைக்கூட, மீதூர்ந்த அன்பால் பழக்கப் படுத்தி, அவனை நோயாளியாக்குமாறு செயற்படுவதும் இவை போல்வனவும் 'நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு' என்பதை நினைப்பூட்டுகின்றன. இதுவே ஒரு வாழ்க்கை முன்னேற்ற வாசகம் போல் ஒலிக்கவில்லையா?

### பகைவரிடத்தும் பண்பாக நடத்தல்

அரசர்க்கும் அமைச்சர்க்கும் ஆள்வோர்க்கும் பயன்படுமாறு, எத்தனையோ நெறிமுறைகளை வகுத்தாலும் நம் வள்ளுவப் பாட்டனார், அவற்றினிடையே சாதாரண மனிதனும் ஆளுமையோடு, நடைமுறை வாழ்வை மேற்கொள்ளவே வழிகாட்டிச் செல்கின்றார். பிறருடன் நட்பாய்ப் பழகும்போது, விளையாட்டின்கண்ணும் ஒருவரை இகழ்தல் கூடாது. அது அவர்தம் மன ஆழத்தே வடுப்போலக் கிடந்து, என்றேனும் ஒருநாள் பெரும்பகையாக வெடிக்கக்கூடும். அதுபோலவே, பகையாய் உடனுறைவாரிடத்தும், பண்புடனேயே நடந்து கொள்ளவேண்டும். அவரவர் பண்பறிந்து நடப்பதே பண்பாடு. 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்பது கலித்தொகை. அவரவர்குணம், இயல்பு, பழக்க வழக்கமறிந்து நடப்பது, ஒரு பெரிய பண்பாடு. அதனைப் பகைவரிடத்தும் கையாள்க என்பது வள்ளுவம்.

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி, பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

நகைத்து மகிழும் விளையாட்டின்போதும், அவர் நம் நெருங்கிய நண்பரேயாயினும், பலரறிய இகழ்ந்து கூறிவிடின், அது இன்னாதாய் முடியும். நண்பன் திக்குவாயாக இருக்கலாம். ஒருநாள் பலரும் கூடிச் சிரித்து

மகிழ்ந்திருக்கும் வேளையில், நண்பனைப் போல் திக்கிப் பேசிக்காட்டிச் சிரித்து மகிழ எண்ணக்கூடாது. அவ்விதம் செய்தால், அவ் இகழ்ச்சி, அந் நண்பன் அப்போது சிரித்துக் கொண்டிருந்தாலும், அவன் நெஞ்சிற்போய் மிகஆழமாய்ப் பதிந்துவிடும். அவனது சொந்த ஆளுமையைப் பாதிப்பதல்லவா அது? அது பிறகு ஒருநாள் 'வன்மமாய்' மாறிப் பழிவாங்கவே செய்யும். உலகவர் உள்ளத்துளவியலை உணர்ந்து சொன்ன வள்ளுவப் பெருந்தகையைக் காலம் என்ன செய்யும்? காலங்கடந்தும் வாழும் சிறப்புக்கு, இந் நடைமுறை உண்மைகளையும் அவர் நவின்றதன்றோ காரணம்?

அவரவர் பாடறிந்து - இயல்பறிந்து நடக்கும் பழக்க முடையாரிடத்தே, அவர் பகைவரிடத்தே பழகும்போது கூட, பண்புடனே நடக்கும் தன்மைகளே காணப்படும். அவரவர் இயல்பறிந்து ஒழுகும் தகுதிப்பாடு மிக்கவர்கள், பகைவரிடத்திலும் அவரவர்தம் இயல்பறிந்து பண்புடனே நடப்பர் என்பதாம்.

இப் பழகும் முறை, பகையைத் தவிர்க்கும்; பண்பை வளர்க்கும். பக்கத்து வீட்டுக்காரர் எப்பொழுதும் சண்டைபிடிக்கும் இயல்புடையவர். அவர் தோட்டத்துக்குள் விழுந்துவிட்ட இளநீர்க் குலைகளை ஒருநாள் தர மறுந்துவிட்டார். மற்றொருநாள் அவர் வீட்டில் காயப்போட்டிருந்த விலை உயர்ந்த புடைவை ஒன்று, காற்றில் பறந்து இவர் வீட்டில் வந்து விழுந்துவிட்டது. அதை நன்கு மடித்து, வேலையாள் மூலம் கொடுத்தனுப்பினார். இளநீர்க் குலைக்காக வருந்தவோ, சினக்கவோ, கருஞ்சொற்கூறவோ இல்லை. இப்படிச் சில நாள் நடந்தபின்பும், அவருக்குப் 'பகைமை' உணர்வு நிலைபெறுமோ?

### பகைமையே வேண்டாம்

கூடுமானவரை பகைமையைத் தவிர்ப்பதே, வாழும்நெறி என வள்ளுவர் கருதுகிறார். பகைஉணர்வைத் தூண்டுமிடத்திற்கூட, அதைத் தவிர்க்கப்பார் என்பதே அவர்காட்டும் வழியாகும்.

அதற்காக அடிபணிந்துபோ, பகைக்கு அடிமையாகு, கோழையாய் வாழ்- என்று அவர் கூறினாரல்லர். கூடுமானவரை பகைமையில்லா உலகை, போரற்ற உலகைக் காணவே அவர் விழைகின்றார். ' யாரொடும் பகைகொள்ளலன் என்பதால் போரொடுங்கும்' என்ற கம்பர் வாக்கு, வள்ளுவ வழிப்பட்டதேயாம்.

பிறருடன் மாறுபடுதல், முரண்படுதலால் பகைமை வளர்கிறது. இகல் - பகையுணர்வு. சிலர் முகமே பகைமையைத் தூண்டும் சின்னம்போல் மலர்ச்சியேயின்றிக் காணப்படும். ஒருவரை ஒருவர் காணும்போது முறுவலித்தல், முகம்மலர்தல், இன்சொல் பேசுதல் ஒருவகை; மற்றவரைக்

காணும்போது மண்பொம்மை போலவே அடுத்த வீட்டுக்காரர் ஒருவர் முகம் காணப்படும். எவ்விதச் சலனமுமற்ற அந்த முகம் தாவிலை. மற்றும் சிலர் முகமோ முரண்டுவதுபோல், முறைப்பதுபோல், சீண்டுவதுபோல் காணப்படும். இத்தகைய சூழல்களில் நீ சற்றே சாய்ந்துகொடு - விட்டுக்கொடு! நீ உன் முகம் மலர்வதை விடவேண்டாம்; நீயும் முறைத்துப் பார்க்கவேண்டாம். அத்தகைய பண்புடைய உன்னை, வெற்றிகொள்ளுமளவு அவர் ஊக்கங்கொள்ளுதல் அரிதென்றார் வள்ளுவர்.

இகல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்கும் தன்மை யவர்.

முரண்பாட்டுக்கு எதிரே சரிக்குச்சரி தாமும் முரண்படாமல், சற்றே சாய்ந்து, அதாவது விட்டுக்கொடுத்து நடக்கக் கூடியவரை, யாரும் அவரை வெற்றி கொள்ளுமளவு ஊக்கங்கொள்ளுதல் இயலாது போகும் என்பதாம்.

'சாய்ந்தொழுகுதல்' என்ற சொல்லாட்சி, பணிதலன்று - விட்டுக் கொடுத்தல் என்ற பெருமிதத்தைக் காட்டுகிறது. அவரினும் தாம் உயர்வாக இருந்தும், சாயந்து ஒழுகிக்காரியம் சாதிக்க என்பதாம். மிகலூக்குதல் - அவரினும் மேம்படுமாறு ஊக்கங்கொள்ளுதல். அது முடியாது என்பது கருத்து.

பகைஎன்னும் பண்பிலதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று

பகைமையைத் தானாக வருவித்துக் கொள்ளக் கூடாது. விளையாட்டிற்காகக் கூட அதை ஒருவன் தேடிக்கொள்ளுதல் நல்லதன்று. 'வேண்டற்பாற்றுன்று' - பகையை விரும்பி ஒருவன் தேடிக்கொள்ளலாகாது என்பதை இத் தொடர் நன்கு விளக்குகிறது.

## பகைமை தவிர்தலும் பகை மேற்கொள்ளுதலும்

நம்மைப் பகைக்க எண்ணுவார் வலியருமாகலாம்; மெலியருமாகலாம். அவர் நம்மிலும் வலிமைமிக்கவராயின், அவருடன் போர் மேற்கொள்ளலைத் தவிர்த்து, வேறு வழி நாடலே தக்கது. நம்மை மதியாது நடப்பார் நம்மிலும் மெலியராயின், உடனே போர்மேற்கொண்டு ஒடுக்கிவிடலாம். வலிமை மிக்கவரைப் பகைப்பதாயின் காலம் பார்த்து, துணைதேடி, வலிமையைப் பெருக்கிய பின்பே போரில் ஈடுபடவேண்டும்.

வெல்லும் நெறி அறிதலே தக்கது. நன்கு அறிந்துவைத்தும், வலிமை மிக்காருடன் பொருதழிதல் வேண்டற்பாற்றன்று.

வலியார்மேல் மாறேற்றல் ஓம்புக; ஓம்பா
மெலியார்மேல் மேக பகை.

பல் குறள்களையும் இணைத்துப் பார்க்கும் முழுமைப் பார்வையிலே தான் உண்மை புலப்படும்.

**பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து**
**உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.**

உள்ளத்துள் நீறுபூத்த நெருப்புப்போல், மானவுணர்வு கிடக்க வேண்டுமாம். விரைந்து, புறத்தே சினத்தைக் காட்டாது மறைத்து, உள்ளத்துள் சினம் அவியாது காத்துப் பகையை வெல்லவேண்டுமாம்.

## தந்திரத்தைத் தந்திரத்தால் வெல்க!

பகைவர் செய்யும் தந்திரத்தை அறிந்து, நீயும் உன் சூழ்ச்சித் திறத்தால், பகையை வெல்க என்றும் வள்ளுவப் பெருமான் சொல்லித் தருகிறார்.

**பகைநட்பாங் காலம் வருங்கால் முகம்நட்டு**
**அகநட்பு ஒரீஇ விடல்.**

**மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து**
**நட்பினுள் சாப்புல்லற் பாற்று.**

இவை இரண்டு குறள்களும், உலகில் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்ற நுட்பத்தை, நுணுக்கமாகக் கூறுவன.

நீண்ட நாள் பகைவனாக இருந்தவன், நண்பனாகத் தானே வந்து சேர்வானானால், முகத்தால் புன்னகை காட்டி, நீயும் நண்பனைப் போல் நடி; ஆனால், மனத்தினுள் அவன்மீது அன்புவைத்து நட்பாடுவதை அறவே விட்டுவிடு. இதனை உன் மனத்திற்குள் வைத்துக்கொள்; வெளிக்காட்டதே!

அடுத்த குறள் என்ன சொல்கிறது?

வெளியே மிகுந்த நட்புடையவர் போலக்காட்டி, அகத்தே மறைவாக நம்மை இகழ்பவர்களை - இகழ்ச்சியாய் நடத்துபவர்களை, நாமும் அவர்களைச் சிரிக்கவைத்து, நல்லவர்போல் நடித்து, அவர்களுடனான நட்பை, மனத்தளவில் அடியோடு ஒழித்துவிடவேண்டும். 'சாப்புல்லற் பாற்று'- நட்பைச் சாகடித்துவிட வேண்டுமாம்!

திருக்குறளை முழுமை நோக்கில் படித்து, உலகில் வாழ்வாங்கு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

[illegible]



தமிழண்ணல்

✧ சிவகங்கை மாவட்டம், நெற்குப்பையில் 12.8.1928 இல் பிறந்த இவர், உயர்பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகத்தில் 42 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய, ஒரு தமிழ் மாணவர்.

✧ சங்க இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர், முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, செவ்வியல் இலக்கியத் தொடர்பான நூல்கள் பல எழுதியவர்.

✧ பேரா. மு.வ. மூலம் 'அறிவுருவும்', அறிஞர் அண்ணா மூலம் 'உணர்வுருவும்' இளம் அகவையிலேயே இவரிடம் பதிவாயின.

✧ மழலையர் முதல் ஐந்தாம் வகுப்புவரை, தாய் மொழியாம் தமிழ் ஒன்றே பாடமொழியும் பயிற்று மொழியும் ஆதல் வேண்டும்; பல்கலைக்கழக உயராய்வுப் பட்டங்கள் வரை– மருத்துவம், பொறியியலுட்பட – தமிழுக்கு, ஆங்கிலத்திற்கு நிகரான, 'மொழிச் சமநீதி' தரப்படவேண்டும்; தமிழை முழுமைபெறக் 'கல்வி மொழி' ஆக்க வேண்டுமெனப் போராடி வருபவர்.

✧ தமிழக அரசின் பொற்கிழிப் பரிசு, திரு. வி.க. விருது, சிறந்த நூற் பரிசு, நல்லாசிரியர் விருதுடன், தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடத்தின் துணைத் தலைவர் – என்பதையும் பெற்றவர். தமிழக முதல்வர் கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா' – நூலை வெளியிடும் வாய்ப்புப் பெற்றவர்.

✧ குன்றக்குடித் திருமடம்: கணக்காயர் பட்டம், மதுரைத் திருவள்ளுவர் கழகம்: தொல்காப்பியச் செம்மல், கோவிலூர்த் திருமடம்: அருந்தவச் செம்மல், ம.கா. பல்கலைக் கழகம்: தமிழ்ச் செம்மல், ச. மெய்யப்பர் பவள விழா விருது: தமிழியக்கச் செம்மல் என்பன சில இவர் பெற்றவை.

✧ 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை உடையவர். நிலத்தில் யார்க்கும், தம் கொள்கையை, உணர்வை, உறுதியை விட்டுக்கொடுக்க விரும்பாத நெறியை விரும்பிப் போற்றி வாழ்பவர்.

✧ இதனால் இவர் இழந்தவை பல; எனினும் மனத் தளர்ச்சிகள் கடுகளவும் இல! ஒவ்வொரு கணமும் இளமையையும் வலிமையையும் தந்து கொண்டிருப்பது இவர் கற்ற தமிழ்!